விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: இருபது

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 பங்குனி 21 திங்கட்கிழமை (04.04.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 106

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# அமைச்சர் பீரிஸைச் சந்திப்பதற்கு

# பிரி.வெளிவிவகார அமைச்சர் மறுப்பு



## அதிருப்தியில் கொழும்பு

(கொழும்பு)

பிரித்தானியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டிருந்த வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸை சந்திப்பதை அந் நாட்டின் வெளிவிவகார அமைச்சர் வில்லியம் ஹெக் தவிர்த்துள்ளார். இந்நிகழ்வு கொழும்புக்கு அதிர்ச்சியையும் மன உளைச்சலையும் ஏற்படுத்தியுள்ளது. *(20ஆம் பக்கம் பார்க்க)*

## அபிவிருத்திக்கு சர்வதேசம் உதவி

(கொழும்பு)

நாடளாவிய ரீதியாக பல அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுத்துச் செல்வதற்காக 108 கோடியே 55 இலட்சம் அமெரிக்க டொலர்கள் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளது. *(20ஆம் பக்கம் பார்க்க)*

## காணி,பொலிஸ் அதிகாரங்களை வழங்க முடியாது-கெஹலிய

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், அரசாங்கத்திற்கும் இடையில் நடைபெற்றுவரும் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் போது தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு தனது தீர்வுத் திட்டமாக மாகாணசபைகளுக்கு காணி அதிகாரத்தையும் பொலிஸ் அதிகாரத்தையும் முன்வைத்துள்ளது.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் இந்தக் கோரிக்கையை அரசாங்கம் திட்டவட்டமாக மறுப்பதாகவும், பொலிஸ் அதிகாரத்தையும் காணி அதிகாரங்களையும் வழங்க முடியாது என ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

13ஆவது *(20ஆம் பக்கம் பார்க்க)*



உலகக்கிண்ண தொடரில் இரண்டாம் இடத்தை பெற்ற இலங்கை அணி வீரர்களை நேற்று சுதந்திர சதுக்கத்தில் பொதுமக்கள் திரண்டு வரவேற்றபோது...

## புலிகள் மறைத்து வைத்திருந்த 39 படகுகளை பொலிஸ் மீட்டது

### மாங்குளத்தில் சம்பவம்

(மாங்குளம்)

மாங்குளம்-நத்தன்கண்டால் வனப் பிரதேசத்தில் பொதியிட்டு மறைத்து வைக்கப்பட்டிருந்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு உரித்தானது என கருதப்படும் 39 படகுகள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மாங்குளம் பொலிஸ் விசேட அதிரடிப் படை குழுவிற்கு கிடைத்த தகவல்களின் அடிப்படையிலேயே நேற்று முன்தினம் இந்தப் படகுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

நத்தன்கண்டால் பிரதேசத்தில் அடர்ந்த காட்டில் ஒன்றுடன் *(20ஆம் பக்கம் பார்க்க)*

## காணி, பொலிஸ் அதிகாரங்களை முன்னிலைப்படுத்தி பேசவில்லை

### மாவை சேனாதிராஜா தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்துடன் தற்போது இடம்பெற்றுவரும் பேச்சுவார்த்தைகள் தந்தை செல்வாவின் கோரிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளதாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

இவ் விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், காணி அதிகாரங்களையும் பொலிஸ் அதிகாரங்களையும் முன்னிலைப்படுத்தி நாம் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடவில்லை. அதே சமயம் பேச்சுவார்த்தைகளின் போது இவ் *(20ஆம் பக்கம் பார்க்க)*

சித்திரைப் புதுவருடத்தை முன்னிட்டு
இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட
அனைவருக்குமான நவீன அழகிய தெரிவுகளுக்கு...
நல்லூர் சரவணா ரெக்ஸ்
இல. 526, 529, பருத்தித்துறை வீதி,
நல்லூர். (பின்வீதி) யாழ்ப்பாணம்.
இல. 770, 772, கே.கே.எஸ் வீதி,
தட்டாதெருச் சந்தி,
யாழ்ப்பாணம்.
(C-2797)

## கிரிக்கெட் போட்டியில் இலங்கை தோல்வி

## அதிகாலை வேளை நாடு திரும்பினார் ஜனாதிபதி

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இந்திய விஜயத்தின் நோக்கங்கள் நிறைவேறவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தியா-இலங்கை அணிகளுக்கிடையில் மும்பையில் நேற்று முன்தினம் நடைபெற்ற உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டியை நேரில் பார்வையிட கடந்த முதலாம் திகதி இந்தியா சென்றிருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ திருப்பதிக்குச் சென்று வழிபாடுகளை நடத்திய பின்னர் மும்பைக்குச் சென்றிருந்தார்.

மும்பையில் இறுதிப் போட்டி நடைபெறும் மைதானத்தின் முக்கிய பிரமுகர்களுக்கான இருக்கைகளின் பகுதியில் 40 இருக்கைகளை ஒதுக்கித்தருமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்தியத் துடுப்பெடுத்தாட்டச் சபையிடம் கோரியிருந்த போதிலும் இருபது இருக்கைகள் மட்டுமே *(20ஆம் பக்கம் பார்க்க)*

மிதிவெடிகள் வெடிக்காத வெடிபொருட்கள் குறித்து அவதானமாயிருப்போம்
மிதிவெடி அபாய விழிப்புணர்வு செய்திகளுக்கு செவிசாய்ப்போம், ஆபத்திலிருந்து அனைவரையும் பாதுகாப்போம்
மிதிவெடி செயற்பாட்டின் விழிப்புணர்வுக்கும் உதவிக்குமான சர்வதேச தினம் - ஏப்ரல் 04
SOND
unicef
பிராந்திய மிதிவெடி செயற்பாட்டு அலுவலகம் யாழ்ப்பாணம்
(C-2868)

**Study & Work in UK and Canada**
Intake Get Register Now
Collecting the application until April 30th 2011
start the academic on August 2011
இறுதிச் சந்தர்ப்பம் IELTS தேவையில்லை
Administration & Documentation
என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும்.
ஐரோப்பிய நாடுகளுக்கான வீஸா பெறுவதற்கான Sponsorship பிரச்சினையா? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்.
சகல தொடர்புகளுக்கும்: 0729994777
London City College
No.01, Deanston House, Deanston Place, Colombo-03
(C-2291)

## கிரிக்கெட் இரசிப்பில் மக்கள் எரிபொருளின் விலையை ஏற்றியது அரசு

எதிர்வரும் ஜூன் மாதத்திற்கு முன் அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பதாக அரசாங்கம் உத்தரவாதம் அளித்தால்தான் அரசாங்கத்திற்கு முழுமையான ஆதரவளிக்கத் தயார் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்க கூறியுள்ளார்.

பஸறையில் நடைபெற்ற வைபவமொன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.பாதுகாப்பு படைகள், பொலிஸ், கூட்டுத்தாபனங்களின் ஊழியர்கள் அனைவருக்கும் ஊதியம் அதிகரிக்கப்பட வேண்டும்.

இலங்கையர்கள் மும்பையில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியால் ஈர்க்கப்பட் டிருந்த நிலையில் அதனை எரிபொருட்கள் மற்றும் காஸ் விலையை அதிகரிப்பதற்கு அரசாங்கம் பயன்படுத்திக்கொண்டதாகவும் ரணில் கூறியுள்ளார். (ந-5)

**வர்த்தகப் பெருமக்களே...**
பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.
தொடர்புகளுக்கு:-0729994777
(C-2290

# அமைச்சர் கெஹலியவுக்கு அஸ்கிரிய பீடம் கௌரவிப்பு



(கொழும்பு)

பௌத்த மதத்தினரின் உயர் பீடங்களில் ஒன்றாக விளங்கும் கண்டி அஸ்கிரிய மகா பீடத்தினால் தகவல் மற்றும் ஊடகத்துறை அமைச்சரான கெஹலிய ரம்புக்வெலவுக்கு தேசமாமக்க ஜனப்பிரசாதன லங்கா புத்திர எனும் கௌரவப் பட்டம் நேற்று வழங்கப்பட்டது.

கெஹலிய ரம்புக்வெல எனும் பெயர் இந்நாட்டு மக்களிடையே பிரசித்தி பெறுவதற்குக் காரணமாக அமைந்து பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கான அரசாங்கத்தின் வேலைத்திட்டத்துடன் இணைந்து அவரால் உருவாக்கப்பட்ட தேசிய பாதுகாப்பிற்கான ஊடக மத்திய நிலையமும் அதன் ஊடகப் பேச்சாளர் பாத்திரமுமாகும் என இது தொடர்பாக அஸ்கிரிய பீடம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளி இயக்கத்தை யுத்த ரீதியில் தோல்வியடையச் செய்வதற்கு அதன் பிரசார வலையமைப்பை செயலிழக்க செய்தல் வேண்டும் என்பதனை நன்குணர்ந்த ஹெகலிய ரம்புக்வெல்ல, தேசிய பாதுகாப்பிற்கான ஊடக மத்திய நிலையத்தை ஆரம்பித்து அதற்கு தலைமை தாங்கி அதன் ஊடகப் பேச்சாளராக தமது திறமையை தாய் நாட்டின் சுதந்திரத் திற்காக பயன்படுத்தினார்.

அவரிடம் காணப்பட்ட மொழி ஆற்றல், ஆழமான பேச்சுத்திறன் மற்றும் உறுதியான நேரடியான பதில்கள் என்பவற்றின் காரணமாக பயங்கரவாதிகளுக்குச் சார்பான உள்ளூர், வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் மௌனி களாக்கப்பட்டனர். இச் சேவையைப் பாராட்டி அவருக்கு கௌரவப்பட்டம் வழங்கப் படுவதாக அஸ்கிரியபீடம் மேலும்தெரிவித் துள்ளது. (ந-5)

# பீப்பிள்ஸ் லீசிங் கம்பனியின் கிளைகள் நாளை திறக்கப்படும்



பீப்பிள்ஸ் லீசிங் கம்பனி யாழ்ப்பாணக் கிளையின் சேவை நிலையங்களை மானிப்பாய் மக்கள் வங்கி கிளையிலும் மற்றும் சுங்கானை, நெல்லியடி மக்கள் வங்கிக் கிளையிலும் நாளை செவ்வாய்க்கிழமை பீப்பிள்ஸ் லீசிங் கம்பனியின் பிரதான நிறைவேற்று அதிகாரி டி.பி.குமாரகேயால் திறந்து வைக்கப்படவுள்ளது.

ஏற்கனவே பீப்பிள்ஸ் லீசிங் கம்பனி யாழ்ப்பாணக் கிளையின் சேவை நிலையங்கள் சுன்னாகம், சாவகச்சேரி, பருத்தித்துறை மக்கள் வங்கி கிளைகளிலும் திறந்து வைக்கப்பட்டு தற்போது சிறப்பாக இயங்கி வருவதாக யாழ்ப்பாண பீப்பிள்ஸ் லீசிங் கம்பனியின் முகாமையாளர் ரி.கே.ஆனந்தராஜா தெரிவித்தார். (ந-6)

# யாழ்.மாவட்டத்தில் யுத்தம் காரணமாக 15ஆயிரம் பெண்கள் விதவைகளாயினர்

## யாழ்.அரச அதிபர் தகவல்



யாழ்.மாவட்ட சிக்கனக் கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாச மகளிர் குழுவின் ஏற்பாட்டில் நேற்று யாழ்.வீரசிங்கம் மண்

(யாழ்ப்பாணம்)

**நாட்டில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக யாழ்.மாவட்டத்தில் 15 ஆயிரம் பேருக்கு மேல் விதவைகள் ஆக்கப்பட்டுள்ளனர் என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.**

டபத்தில் இடம்பெற்ற மகளிர் தின நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உதவிகள் வழங்க அனைவரும் முன்வர வேண்டும். சுய தொழில் மேற்கொண்டு சமுதாயத்தில் ஏனையவர்களுடன் சமமாக வாழ உதவிகளை வழங்க வேண்டும்.

யாழ்.மாவட்டம் கல்வியிலும், கலாசாரத்திலும் பின்தங்கிச் செல்வது மன வேதனையைத்தருகின்றது.

யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாச மகளிர் குழு பாதிக்கப்பட்டவர்களுக்கு சுயதொழில் வாய்ப்பினை அதிகளவில் ஏற்ப்படுத்தி கொடுத்துள்ளது. அவர்களுக்கு எனது பாராட்டை தெரிவித்துக் கொள்கின்றேன். அத்தோடு இவ்வாறான உதவிகளை வழங்க ஏனைய சமாசங்களும் முன்வர வேண் டும்.

கல்வியாலும், கலாசாரத்தாலும் பின்தங்கிச் செல்லும் எமது யாழ்.மாவட்டத்தை பாதுகாக் கும் பொறுப்பு அனைவருக்கும் உண்டு என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன், யாழ்.மாவட்ட சிக்கன கடன் கூட் டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் செ.இலகுநாதன், யாழ்.மாவட்ட கூட்டுறவு சபைத்தலைவர் இ.இராஜாராம், யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாச மகளிர் குழுத் தலைவி திருமதி ஜெபமணி ஜோசப் ஆகியோர் கலந்து கொண்டனர். (ந-6)

# கிரிக்கெற் வெற்றியின் எதிரொலி ஹற்றனில் தமிழர்கள் மீது தாக்குதல்

(கொழும்பு)

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் இந்தியா வெற்றிபெற்றதையடுத்து ஹற்றனில் தமிழ் மக்கள் மீது இனம்தெரியாத கும்பல் ஒன்று தாக்குதல் நடத்தியுள்ளது.

தாக்குதல் நடத்திய கும்பல் மீது பொலிஸார் நடவடிக்கை எடுக்கா விட்டால் ஹர்த்தால் நடவடிக்கை ஒன்றுக்கு அழைப்புவிடுக்கப் போவ தாக அமைச்சர் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இந்திய-இலங்கை கிரிக்கெட் அணிகள் மோதிய உலகக் கிண்ண இறுதிப் போட்டியினைத் தொடர்ந்து ஹற்றனில் மலையக இந்திய வம்சாவளித் தமிழர்கள் வசிக்கும் குடியிருப்புகளுக்குள் புகுந்த கும்பல் ஒன்று தாக்குதல் நடத்தியுள்ளது.

சமநலகம, ஹிஜ்ரா புர பிரதேசங்களில் பல வீடுகள் இதனால் சேதமடைந்துள்ளன.

சம்பவத்தில் காயமடைந்த மூன்று இளைஞர்கள் டிக்கோய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காடையர் கூட்டமொன்று பட்டாசு வெடிகளை தமிழர்களின் வீடுகளுக்குள் கொளுத்தி வீசி விட்டுப் பின்னர் உட்புகுந்து தாக்குதலிலும் ஈடுபட்டதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் ஊடகவியலாளர்களிடம் தெரிவித் தார்.

தாக்குதலில் ஈடுபட்ட கும்பலில் சிங்களவர்கள் எவரும் இருக்கவில்லையெனக் கூறிய தொண்டமான் இனவாதத்தை தூண்டி முரண்பாட்டை [illegible] தோற்றுவிக்கும் தீய எண்ணத்தி லேயே அந்தக் கும்பல் செயற் பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை பிபிசிக்குக் கருத்து தெரிவித்த இலங்கை பொலிஸ் பேச்சாளர் பிரஷாந்த் ஜயக்கொடி சம்பவம் தொடர்பில் சந்தேக நபர்கள் நால்வர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைககப்பட்டுள்ளதாக கூறினார்.

# யாழ்ப்பாணக் கலாசாரம் தொன்மையானது மட்பாண்டங்கள் சான்று- ஜேர்மனிய ஆய்வாளர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தொன்மையான கலாசாரத்தை கொண்டது என்பதை இங்கு மீட்கப்பட்ட மட்பாண்டங்கள் ஊடாக அறியக் கூடியதாகவுள்ளது என ஜேர்மன் நாட்டு தொல்லியல் ஆய்வு நிறுவனத்தின் பிரதிநிதி ஹான்ஸ் ஜெக்சின் வெஸார் தெரிவித்துள்ளார்.

யாழ்.பல்கலைக்கழகத்திற்கு நேற்று வருகை தந்த ஜேர்மன் நாட்டு தொல்லியல் ஆய்வு நிறுவன பிரதிநிதிக் குழுவினர் அங்கு வைக்கப்பட்டிருந்த [illegible]தன சின்னங் களை பார்வையிட்டனர்.

இதன் பின் குழுவின் பிரதிநிதி வெஸார் கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

இதுதொடர்பாகஅவர்மேலும் தெரிவிக்கையில், 2 ஆயிரத்து 400ஆண்டுகள் பழமைவாய்ந்த மட் பாண்டங்கள் இங்கு ஆய்வின் மூலம் மீட்கப்பட்டுள் ளது.

இங்கு மீட்கப்பட்டுள்ள புராதன மட்பாண்டங்களை ஒத்த மட்பாண்டத் துண்டுகள் இந்தியாவின் தென்பகுதியிலும் அரேபிய நாடுகளிலும் அதிகமாக மீட்கப்பட்டுள்ளன. இதிலிருந்து இலங்கை தொன்மையான வரலாற்றைக் கொண்டிருப்ப தோடு இந்த நாடுகளுடன் வர்த்தக ரீதியான தொடர்பினையும் கலாசார பிணைப் பையும் கொண்டிருந்தமை உறுதிப்படுத்தப்படுகிறது.

இலங்கையின் பல பகுதிகளிலும் இவ்வாறான ஆய்வுகள் மேற்கொள்ளப்படாமையால் இங்குள்ள புராதன சின்னங்கள் தொடர்பாக எந்தவித தகவல்களும் கிடைக்கவில்லை.

இதுவரை காலமும் ஆய்வுகள் மேற்கொள்ளப்படாத பகுதிகளில் ஆய்வுகள் செய்யும்போது ஏனைய நாடுகளுடன் இலங்கை கொண்டிருந்த வர்த்தக, கலாசார ரீதியான தொடர்புகள் தெரியவரும்.

கந்தரோடை, சாட்டி, பூநகரி போன்ற பகுதிகளிலிருந்து மீட்கப்பட்ட மட்பாண்டங்கள் குடாநாட்டின் தொன்மையான கலாசாரத்தை வெளிப்படுத்தியிருந்தது. பழமையான வாழ்க்கை முறைமையையும் இவை சுட்டிக் காட்டுகின்றன.

அது மட்டுமன்றி யாழ்.பல்கலைக்கழகத்தின் தொல்லியல்துறை அதிகளவில் ஆய்வுகளை மேற்கொள்வதன் மூலம் சீனா, தென்னிந்தியா போன்ற பழமைமிக்க நாடுகளின் மட்பாண்டங்களையும் புராதனச் சின்னங்களையும் கண்டுபிடிக்க வாய்ப்புள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (ந-6)

**காணி விற்பனைக்கு உண்டு**
மானிப்பாய் சந்தியில் இருந்து 150 m தொலை வில் சுந்தர்ஸன் அருகாமையில் உள்ள 'கலெக்' வீதியில் 2 பரப்பு காணியும் நவாலி வடக்கு அட்டகிரி பாடசாலைக்கு அருகில் வீட்டுடன் கூடிய 6 பரப்பு காணியும் விற்பனைக்கு உண்டு.
உடன் தொடர்பு கொள்ளவும்.
T.P.No.: 077-[illegible]7209, 021-4908148
(4291)

**பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்**
கணக்காளர் பதவிக்கான விளம்பரம் தொடர்பானது
மேற்படி விடயம் தொடர்பாக பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் 20.01.2011, 21.01.2011 ஆகிய இரு தினங்களும் கணக்காளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டதன் பிரகாரம் அதற்கான நேர்முகப் பரீட்சை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது என்பதனை விண்ணப்பதாரிகளுக்கு அறியத் தருகின்றோம்.
வி.சொக்கநாதன்
தலைவர்
பூநகரி ப.நோ.கூ.சங்கம், ஜெயபுரம்.
(4293)

# கடைசி சர்வதேசப் போட்டி எனக்கு ஏமாற்றமளித்தது

## முரளிதரன் உருக்கம்

தனது கடைசி சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் போட்டி ஏமாற்றமாக அமைந்து விட்டதாக முத்தையா முரளிதரன் கூறியுள்ளார்.

எதிர்வரும் 17 ஆம் திகதி தனது 39 ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடவுள்ள முத்தையா முரளிதரன் நேற்று முன்தினம் கிரிக்கெட் உலகக்கிண்ண இறுதிப் போட்டியுடன் ஓய்வு பெற்றமை குறிப்பிடத்தக்கது.

1996 ஆம் ஆண்டு உலகக்கிண்ணத்தை வென்ற அணியில் இடம்பெற்ற வீரர்களில் முரளிதரன் மாத்திரமே நேற்று முன்தின போட்டியிலும் விளையாடினார். இப் போட்டியில் காயத்திற்கு மத்தியில் விளையாடிய அவர் 8 ஓவர்கள் பந்து வீசி 38 ஓட்டங்களைக் கொடுத்தார். விக்கெட் எதனையும் வீழ்த்தவில்லை.

சர்வதேச ஒரு நாள் போட்டிகளில் இது பாராட்டுக்குரியதொரு பந்து வீச்சு பெறுமதி தான். எனினும் 133 டெஸ்ட் போட்டிகளில் 800 விக்கெட்டுக்களையும் சர்வதேச ஒரு நாள் போட்டிகளில் 534 விக்கெட்டுக்களையும் வீழ்த்திய முரளிதரன் இதை விட சாதிப்பார் என ரசிகர்கள் எதிர்பார்த்தனர்.

இந்நிலையில் அது ஏமாற்றம் தான். ஏனெனில் எனது பிரதான இலக்கு உலகக் கிண்ணத்தை வெல்வதாகவே இருந்தது. ஆனால் துரதிஸ்டவசமாக நாம் அதைச் சாதிக்க முடியவில்லை. எம்மைவிட இந்தியா சிறந்த அணியாக இருந்தது. என கொழும்பு திரும்பியபின் முரளிதரன் தெரிவித்துள்ளார்.

நாம் 277 ஓட்டங்களைப் பெற்றோம்.



அது சிறந்த ஓட்டஎண்ணிக்கை. மலிங்க இரு முக்கிய விக்கெட்டுக்களை வீழ்த்தினார். ஆனால் அதன்பின் அந்த அணியை, குறிப்பாக மத்திய பகுதியை தகர்க்க எம்மால் முடியவில்லை.

சுழற்பந்து வீச்சாளர்கள் போதியளவு விக்கெட்டுக்களை வீழ்த்தவில்லை. அது பிரதான காரணம். நானோ, சுராஜோ சில விக்கெட்டுக்களை வீழ்த்தியிருந்தால் கதை வேறாக இருந்திருக்கும். கிரிக்கெட்டில் இப்படி நடப்பதுதான். இதிலிருந்து முன்னேறிச் செல்ல வேண்டும். எனவே எமது அணி எதிர்காலத்தில் சிறப்பாக விளையாட வாழ்த்துகின்றேன். 2015 ஆம் ஆண்டு உலகக்கிண்ணத்தை அவர்கள் இலங்கைக்கு கொண்டுவருவார்கள் என நம்புகின்றேன். என்றார் முரளிதரன்.

முரளி முழுமையான உடற்திட நிலையில் இல்லாதபோதிலும் அவரை அணியில் விளையாடவைத்த தீர்மானத்தை அணித் தலைவர் குமார் சங்கக்கார ஆதரித்துப் பேசினார்.

அவர் எமக்காக சாதிக்காமல் போன அரிதான சில நாட்களில் இதுவொன்றாகும். ஆனால் 100 போட்டிகளில் ஒன்றில் இப்படி நடக்கலாம். அவர் எமது மிகச்சிறந்த பந்து வீச்சாளர். அவர் பாதி உடற்திட நிலையில் இருந்தாலும் சிறப்பாக இருந்தார். இது ஒரு பிரச்சினை என நான் கருதவல்லலை. என சங்கக்கார கூறினார்.

முரளிதரனை நாம் இழக்கப்போகிறோம். துரதிஷ்டவசமாக அவருக்கு மாபெரும் பிரியாவிடை அளிக்க முடியாமல் போய்விட்டது. எனவும் சங்கக்கார கூறினார்.

முரளியின் பந்து வீச்சு தனக்கு பரிட்சயமாகி விட்டதாலேயே உலகக்கிண்ண இறுதிப்போட்டிக்கான துடுப்பாட்ட வரிசையில் யுவராஜ் சிங்கைவிட தான் முதலில் வந்ததாக தோனி கூறியுள்ளார்.ஐ.பி.எல் போட்டிகளில் முரளியும் தோனியும் சென்னை சுப்பர் கிங்ஸ் சார்பாக விளையாடியமை குறிப்பிடத்தக்கது.

முரளியுடன் நான் அதிகம் விளையாடியுள்ளேன். அவரின் தூஸ்ரா பற்றியும் நன்கறிவேன். அதை அவரும் நன்கறிவார். நான் அவரை அழுத்தத்திற்குள்ளாக்கினேன் என தோனி கூறினார்.

நியூசிலாந்துடனான அரையிறுதிப் போட்டியே இலங்கை மண்ணில் முரளி கடைசியாக விளையாடிய போட்டியாகும். அப்போட்டியில் முரளி தனது கடைசிப் பந்தில் விக்கெட் ஒன்றை கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது.

## இந்திய அணிக்கு பரிசு மழை

உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் இறுதி ஆட்டம் மும்பை வான்கடே மைதானத்தில் நேற்று முன்தினம் நடந்தது. இதில் தோனி தலைமையிலான இந்திய அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் இலங்கையை வீழ்த்தி உலகக் கிண்ணத்தை கைப்பற்றியது.

இந்திய அணிக்கு ரூ. $14\frac{1}{2}$ கோடி (இந்தியப் பெறுமதியில்) பரிசுடன் உலகக் கிண்ணம் வழங்கப்பட்டது.

சர்வதேச கிரிக்கெட் சங்க தலைவரும், இந்திய மத்திய அமைச்சருமான சரத்பவார் இதை வழங்கினார். 28 ஆண்டுகளுக்கு பின்னர் இந்திய அணி உலகக் கிண்ணத்தை வென்றதால் இந்திய வீரர்களுக்கு பரிசுகள் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை ஒவ்வொரு வீரருக்கும் ஒரு கோடி ரூபாய் பரிசு வழங்கப்படுவதாக அறிவித்துள்ளது. உலகக் கிண்ணத்தை வென்ற இந்திய அணியில் 15 வீரர்கள் இடம் பெற்று உள்ளனர்.


இதேபோல் பயிற்சியாளர் ஹரி கிரிஸ்டன் மற்றும் அணியில் மற்ற ஊழியர்களுக்கு தலா ரூ. 50 இலட்சமும் தேர்வுக்குழு உறுப்பினர்களுக்கு தலா ரூ.25 இலட்சமும் வழங்கப்படும் என்று கிரிக்கெட் சபைத் தலைவர் மனோகர் அறிவித்துள்ளார்.

ஹீண்டாய் கார் நிறுவனம் புதிய காரை அறிமுகப்படுத்தி உள்ளது. அந்த நிறுவனம் உலகக் கிண்ணத்தை வென்ற வீரர்களுக்கு ஒவ்வொருவருக்கும் கார் பரிசு வழங்குவதாக அறிவித்துள்ளது.

மேலும் வீரர்களுக்கு பல்வேறு பரிசுகள் அறிவிக்கப்பட்டுள்ளது. இறுதிப்போட்டியில் இந்தியாவிடம் தோல்வி அடைந்த இலங்கை அணிக்கு ரூ 6.82 கோடி (இந்திய ரூபாயில்) பரிசாக வழங்கப்பட்டது. அரை இறுதியில் தோல்வி அடைந்த பாகிஸ்தான், நியூசிலாந்து அணிகளுக்கு தலா ரூ 2.27 கோடி வழங்கப்பட்டது. காலிறுதியில் தோல்வியை தழுவிய அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, இங்கிலாந்து, மேற்கிந்தியத்தீவு அணிகளுக்கு தலா ரூ 1.13 கோடி வழங்கப்பட்டது.

இந்த உலகக் கிண்ண போட்டியில் மொத்தம் ரூ 36.4 கோடி பரிசு தொகையாக வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## அதிக ஓட்டங்கள் குவித்த வீரர்கள்



| வீரர்கள் | போட்டி | ஓட்டங்கள் | சராசரி | சதம் | அரைச் சதம் |
|---|---|---|---|---|---|
| திலகரட்ண டில்சான் (இலங்கை) | 9 | 500 | 62.50 | 2 | 2 |
| சச்சின் டெண்டுல்கர் (இந்தியா) | 9 | 482 | 53.55 | 2 | 2 |
| குமார் சங்கக்கார (இலங்கை) | 9 | 465 | 93.00 | 1 | 3 |
| திரோட் (இங்கிலாந்து) | 7 | 422 | 60.28 | 0 | 5 |
| உபுல் தரங்க (இலங்கை) | 9 | 395 | 56.42 | 2 | 1 |
| காம்பீர் (இந்தியா) | 9 | 393 | 43.66 | 0 | 4 |
| வீரேந்திர சேவாக் | 8 | 380 | 47.50 | 1 | 1 |


## அதிக விக்கெட்டுக்கள் சாய்த்தவர்கள்



| வீரர்கள் | போட்டி | ஓவர்கள் | ஓட்டங்கள் | விக்கெட்டுக்கள் | 4 | 5 |
|---|---|---|---|---|---|---|
| சகிட் அப்ரிடி (பாகிஸ்தான்) | 8 | 74.3 | 270 | 21 | 2 | 2 |
| சகீர்கான் (இந்தியா) | 9 | 81.3 | 394 | 21 | - | - |
| ரிம் சௌத்தி (நியூசிலாந்து) | 8 | 72.2 | 312 | 18 | - | - |
| றொபின் பீற்றர்சன் (தென்னாபிரிக்கா) | 7 | 56.0 | 238 | 15 | 1 | - |
| முத்தையா முரளிதரன் (இலங்கை) | 9 | 71.0 | 291 | 15 | 1 | - |
| யுவராஜ் சிங் (இந்தியா) | 9 | 75.0 | 377 | 15 | 0 | 1 |

# உலகக் கிண்ணக் கிரிக்கெட்டில் எனது வாழ்க்கை முடிந்துவிட்டது

## லசித் மலிங்க



தனது உலக்கிண்ண கிரிக்கெட்வாழ்க்கைமுடிந்து விட்டது எனவும் அடுத்த உலகக்கிண்ண சுற்றுப் போட்டியில் தான் விளையாடப் போவதில்லை எனவும் இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்க தெரிவித்துள்ளார்.

இந்தியாவுடனான இறுதிப்போட்டியின்பின்னர் இலங்கை வீரர்கள் தாயகம் திரும்பினர். அதன் பின் தொலைக்காட்சியொன்றுக்கு அளித்த பேட்டியில் மலிங்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எனது அணிக்கு என்னால் முடிந்தளவு காலம் சேவையாற்ற முடியுமென நம்புகின்றேன். ஆனால் 2015 ஆம் ஆண்டு அடுத்த உலகக்கிண்ணப் போட்டியில் என்னால் விளையாட முடியும் என நான் எண்ணவில்லை. கடந்த சில வாரங்களாக காயங்களுக்கு உள்ளாகியிருந்தேன்.

அடுத்த உலகக்கிண்ணப் போட்டியில் சிறப்பாக விளையாடுமாறு இளம் வீரர்களை நான் கோருகின்றேன்.

எனது அணி எதிர்பார்த்ததை நான் நிறைவேற்றியுள்ளேன். நேற்றைய போட்டியில் பந்து ஈரமாக இருந்ததால் முறையாக யோக்கர் வீச முடியவில்லை. என்னால் அதிக விக்கெட்டுக்களை வீழ்த்த முடியாமை குறித்து கவலையடைகிறேன் எனவும் மலிங்க கூறினார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதிப் போட்டியில் வீரேந்தர் சேவாக், சச்சின் டெண்டுல்கர் ஆகியோரின் விக்கெட்டுக்களை மலிங்க மிக விரைவாக வீழ்த்தினார்.

எனினும் இலங்கை அணியை 6 விக்கெட்டுக்களால் இந்தியா வென்றமை குறிப்பிடத்தக்கது. இச் சுற்றுப் போட்டியில் அவர் மொத்தமாக 13 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார்.

# பாடசாலை மாணவர்களுக்கான சித்திர, கவிதைப் போட்டிகள்

(அல்வாய்)

"பன்மைத்துவக் கலாசாரம் ஊடாக சமாதானம்" எனும் கருப்பொருளில் பாடசாலை மாணவர்களுக்கான சித்திர(சுவரொட்டி) கவிதைப் போட்டிகள் GIZ சமூக இசைவுக்கான கல்விப்பிரிவின் ஊடாக மாகாணக் கல்வித் திணைக்களத்தால் நடத்தப்படவுள்ளது.

சித்திரப்(சுவரொட்டி) போட்டிக்கு பிரிவு I இல் தரம் 3,4,5 மாணவர்களும் பிரிவு II இல் தரம் 6,7 மாணவர்களும் பிரிவு III இல் தரம் 8,9 மாணவர்களும் பிரிவு IV இல் தரம் 10,11 மாணவர்களும் பிரிவு V இல் தரம்12,13 மாணவர்களும் பங்குபற்ற முடியும்.

கவிதைப் போட்டிக்கு பிரிவு I இல் தரம் 6,7 மாணவர்களும் பிரிவு II இல் தரம் 8,9 மாணவர்களும் பிரிவு III இல் தரம் 10,11 மாணவர்களும் பிரிவு IV இல் தரம்12,13 மாணவர்களும் பங்குபற்ற முடியும்.

பாடசாலை மட்ட சித்திரப் போட்டியில் (சுவரொட்டி) தாமாக ஏ4 அளவு கொண்ட சித்தரக் கடதாசி, பிரிஸ்டல் போட் அட்டை என்பவற்றில் ஒன்றை தெரிவு செய்து பென்சில் வர்ணம், எண்ணெய் வர்ணம் மற்றும் தாங்கள் விரும்பும் எந்தவெரு வர்ணத்தையோ பயன்படுத்தி சுவரொட்டி வடிவமைக்க வேண்டும்.

கவிதைப் போட்டிக்கு மாணவர்கள் தாங்கள் விரும்பிய ஒரு கவிதைப் பாணியில் (மரபு/நவீன) தங்களது கவிதைகளை ஆக்க முடியும்.

கவிதைப் போட்டிக்கு பிரிவு I,II இற்கு 80-100 சொற்களும் பிரிவு III,IV 100-150 சொற்களும் வழங்கப்படும்.

தரம் 11,13 இல் மீளக்கற்போர் போட்டி நிகழ்ச்சிகளில் பங்குபற்றமுடியாது. அதிபர்கள் பாடசாலை மட்டத்தில் போட்டியை நடத்தி மதிப்பீட்டு தெரிவுப் பட்டியலையும் முதலிடம் பெற்ற ஆக்கங்களையும் கோட்டக்கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

கோட்ட மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களுக்கு சான்றிதழ்களும் வலய, மாகாண மட்டங்களில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களுக்கு சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கப்படும்.

கோட்ட மட்டத்தில் தெரிவுகள் எதிர்வரும் மே மாதம் 13 ஆம் திகதிக்கு முன்பாகவும் வலய மட்டத்தில் போட்டிகள் எதிர்வரும் மே மாதம் 31 ஆம் திகதிக்கு முன்பாகவும் நடத்தி முடிப்பதற்கு ஒழுங்குகளை மேற்கொள்ள வேண்டுமென வடமாகாண மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-19)

## செல்லப்ப சுவாமிகளின் குருபூசைத்தினம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் தேரடிச் சித்தர் செல்லப்ப சுவாமிகளின் குருபூசைத்தினம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணி முதல் நல்லூர் முருகன் கோவில் தேரடிக்கு முன்பாகவுள்ள செல்லப்ப சுவாமிகளின் நினைவாலயத்தில் இடம் பெறும்.

குருபூசையில், நற்சிந்தனைப் பாடல்கள், பஜனை என்பன இடம்பெற்று தொடர்ந்து முற்பகல் 11.30 மணிக்கு பூசை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

பகல் 12.30 மணிக்கு மகேஸ்வர பூசை இடம்பெறும். (ந)

## நுளம்பைக் கட்டுப்படுத்த மீன் வளர்ப்பு

(பருத்தித்துறை)

வடமராட்சி கிழக்குப் பகுதியில் நுளம்புகளைக் கட்டுப்படுத்தும் வகையில் அங்குள்ள கிணறுகளில் நுளம்பை அழிக்கும் மீன்வகைகள் விடப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

அப்பகுதியில் நுளம்பு உற்பத்திகள் அதிகமாக காணப்படுவதனால் சுகாதார பகுதியினர் மேற்படி நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-3-10)

## யாழில் தொகை மதிப்பீட்டு பணிகள் ஆரம்பம்

(கொழும்புத்துறை)

தொகை மதிப்பு, புள்ளி விபரத் திணைக்களத்தினால் குடிசன வீட்டு வசதிகள் தொகை மதிப்பீடு 2011 மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இலங்கையிலுள்ள சகல கட்டங்களும் தற்போது நிரற்படுத்தப்பட்டு இலக்கமிடப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் யாழ்ப்பாணத்தில் புதிதாகக் கட்டப்பட்ட வீடுகள் குறித்த தரவுகள் அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (ஸ்ரீ-3-51)

## இலவச பின்னூட்டல் வகுப்புக்கள் ஆரம்பம்

(குருநகர்)

சென்ஜேம்ஸ் கல்வி முன்னேற்ற கழகத்தினால் இலவச பின்னூட்டல் வகுப்புக்கள் இன்று திங்கட்கிழமை 4மணி தொடக்கம் 6 மணி வரை சென்ஜேம்ஸ் வித்தியாலய அதிபர் த.ஞானப்பிரகாசம் தலைமையில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இவ்வகுப்புக்கள் கிழமை நாட்களில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆர்வமுள்ள மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக இச்செயற்பாடு முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-3-39)

## தமிழ் மொழித் தின எழுத்தாக்க போட்டிகள்

அகில இலங்கை தமிழ்த்தினப் போட்டியில் மருதங்கேணி, பருத்தித்துறை, கரவெட்டி கோட்டங்களுக்கான போட்டிகள் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் பருத்தித்துறை கோட்டத்திற்கான போட்டிகள் வடஇந்து மகளிர் கல்லூரியிலும், கரவெட்டி கோட்டத்திற்கான போட்டிகள் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலும், மருதங்கேணி கோட்டத்திற்கான போட்டிகள் யா/குடத்தனை அ.த.க.பாடசாலையிலும் தாளையடி றோ.க.த.க.பாடசாலையிலும் நடைபெறுமென வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-19)

# சேதமடைந்துள்ள பாலத்தால் பயணிக்க முடியாத நிலை

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை இலந்தைக்குளம் வீதியிலுள்ள பாலம் உடைந்து நீண்ட காலமாக புனரமைக்கப்படாது காணப்படுகின்றது.

இதனால் மேற்படி வீதியினால் பயணிப்போர் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவிக்கப்படுகின்றது.

கொங்கிறீற் கற்களை ஏற்றிக் கொண்டு சென்ற லொறி ஒன்று மேற்படி பாலத்தினுள் குடைசாய்ந்து விழுந்ததில் இருந்து மேற்படி பாலம் உடைந்து காணப்படுகின்றது.

எனவே மேற்படி பாலத்தை புனரமைத்து போக்குவரத்திற்கு உதவுமாறு அப்பகுதி மக்களும் பயணிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஸ்ரீ-3-51)

# மீசாலை வீரசிங்கம் மகா வித்தியில் ரூ.30 இலட்சம் செலவில் செயற்பாட்டறை

(சாவகச்சேரி)

உலக வங்கி நிதியுதவியுடன் மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்திற்கு செயற்பாட்டறை அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

வடமாகாண கல்வித் திணைக்களத்தின் பங்களிப்புடன் 30 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள இச் செயற்பாட்டறையில் சங்கீதம், நடனம், மனையியல் ஆகிய பாடசெயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மேற்படி பாட செயற்பாடுகளுக்கு பல காலமாக நிலவிய இடநெருக்கடி இதனால் தீர்க்கப்பட்டுள்ளதாக பாடசாலை சமூகத்தினர் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-3-29)

## பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கு நேர்முகத் தேர்வு

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளில் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களாக உள்வாங்குவதற்கான நேர்முகத் தேர்விற்கு இன்று திங்கட்கிழமை அல்லது நாளை மறுதினம் புதன்கிழமை காலை 9.30 மணிக்கு தென்மராட்சி கல்வி வலயத்திற்கு வருகைதருமாறு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு. பிறேமகாந்தன் அறிவித்துள்ளார்.

வருகைதரும் பொழுது தேசிய அடையாள அட்டை, க.பொ.த(சா/த) பெறுபேறு, உயர்தரப் பெறுபேறு அல்லது பட்டச்சான்றிதழ் ஆகியவற்றின் மூலப்பிரதியுடன் இரண்டு நிழற் பிரதிகளையும் எடுத்து வருமாறும் ஆங்கில உதவிக் கல்விப் பணிப்பாளர் வே.சிறீதரனை சந்திக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-3-29)

## நூற்றாண்டு விழா நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

யா/உரும்பிராய் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழா சார்ந்த மண்டப நிகழ்வுகள் எதிர்வரும் 9 ஆம் திகதி தொடக்கம் 11 ஆம் திகதி வரை 3 தினங்கள் காலை, மாலை நிகழ்வுகளாக நடைபெறவுள்ளது.

கலை நிகழ்ச்சிகள் யாவும் மாலை நேரத்தில் இடம்பெறவுள்ளது. (ஸ்ரீ-3)

## மாறுபட்ட விலைகளில் கோழி இறைச்சி விற்பனை

(நவாலி)

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட மானிப்பாய், நவாலி ஆகிய சந்தைகளில் மாறுபட்ட விலைகளில் கோழி இறைச்சி விற்பனை செய்யப்படுகின்றது.


மானிப்பாயில் ஒரு கிலோ கோழி இறைச்சி 500 ரூபாவுக்கும் நவாலியில் 550 ரூபாவுக்கும் வெளியிடங் களில் 450 ரூபாவுக்கும் அதற்கு குறைவான விலைகளிலும் விற்பனை செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-3-26)


## மஹோற்சவம்


(சாவகச்சேரி)

நுணாவில் மேற்கு வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி வருடப்பிறப்பன்று தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது. (ஸ்ரீ-3-29)







காரைநகர் மணற்காடு முத்துமாரியம்மன் ஆலய வருடாந்த இரதோற்சவம் கடந்த 2 ஆம் திகதி இடம்பெற்றது. அம்பாளிற்கு வசந்த மண்டபத்தில் விசேட பூஜை வழிபாடுகள் நடைபெறுவதையும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ அம்பாள் தேரில் எழுந்தருளி செல்வதையும் அடியார் கூட்டத்தையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-காரைநகர் செய்தியாளர்)

# தீவக கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டி முடிபுகள்

தீவக கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி முடிபுகள் தீவக கல்வி வலயத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளன. இப்போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் பெயர் விபரம் வருமாறு,

(தொடர்ச்சி)

## பெண்களுக்கான போட்டிகள்

### 17 வயதிற்கு கீழ்பட்டவர்கள்

**100 மீற்றர்**

எஸ்.பிரணவீ (யா/வேலணை மத்திய கல்லூரி), கே.ஜெயப்பிரியா (யா/சென் மேரிஸ் றோ.க.பெ.வி), கே.விதுஷா (யா/வேலணை கிழக்கு ம.வி).

**200 மீற்றர்**

எஸ்.பிரணவீ (யா/வேலணை மத்திய கல்லூரி),எஸ்.திருமகள் (யா/அல்லைப்பிட்டி பராசக்தி வித்தி), கே.ஜெயப்பிரியா (யா/சென் மேரிஸ் றோ.க.பெ.வி).

**400 மீற்றர்**

எஸ்.திருமகள் (யா/அல்லைப்பிட்டி பராசக்தி வித்தி), பி.இன்பராணி (யா/கலாநிதி ஆ தியாகராசா ம.ம.வி), யு.கௌரிகா (யா/வேலணை மேற்கு நடராஜ வித்தி).

**800 மீற்றர்**

எஸ்.திருமகள் (யா/அல்லைப்பிட்டி பராசக்தி வித்தி), ரி.பிரியா(யா/சென் மேரிஸ் றோ.க.பெ.வி),எ.மேரிவினு(யா/நெடுந்தீவு ம.வி)

**1500 மீற்றர்**

எ.மேரிவினு(யா/நெடுந்தீவு ம.வி), எம்.டினோசியகலா (யா/நெடுந்தீவு ம.வி), எஸ்.மாதுனி (யா/நயினாதீவு சிறிகணேசா கனிஸ்ட ம.வி).

**4X100 மீற்றர் அஞ்சல்**

(யா/சென் மேரிஸ் றோ.க.பெ.வி), (யா/வேலணை மத்திய கல்லூரி), (யா/கலாநிதி ஆ. தியாகராசா ம.ம.வி).

**4X400 மீற்றர் அஞ்சல்**

(யா/கலாநிதி ஆ. தியாகராசா ம.ம.வி),(யா/சென் மேரிஸ் றோ.க.பெ.வி),(யா/வேலணை மத்திய கல்லூரி).

**நீளம் பாய்தல்**

ஜி.தனுஷா (யா/சென் மேரிஸ் றோ.க.பெ.வி), ரி.பிரியா (யா/சென் மேரிஸ் றோ.க.பெ.வி),எஸ்.பிரணவீ (யா/வேலணை மத்திய கல்லூரி).

**உயரம் பாய்தல்**

வி.மிரோஜா(யா/கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் ம.வி),ரி.பிரியா(யா/சென் மேரிஸ் றோ.க.பெ.வி),வி.தர்மரோஜினி (யா/நெடுந்தீவு றோ.க.பெண்கள் கல்லூரி).

**முப்பாய்ச்சல்**

ஆர்.றெபேக்கா(யா/கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் ம.வி),வி.தர்மரோஜினி (யா/நெடுந்தீவு றோ.க.பெண்கள் கல்லூரி), பி.குயிலினி (யா/கலாநிதி ஆ. தியாகராசா ம.ம.வி)

**குண்டெறிதல்**

சி.தர்சிகா(யா/புங்குடுதீவு சிறி சித்தி விநாயகர் வித்தி),எஸ்.பிரசாந்தினி (யா/வேலணை மேற்கு நடராஜ வித்தி),கே.பவிகா (யா/அனலைதீவு சதாசிவ ம.வி).

**தட்டெறிதல்**

எஸ்.பிரசாந்தினி (யா/வேலணை மேற்கு நடராஜ வித்தி),எஸ்.டிலுக்சி(யா/யாழ்ற்ரன் கல்லூரி),கே.பவிகா (யா/அனலைதீவு சதாசிவ ம.வி).

**ஈட்டியெறிதல்**

கே.பவிகா (யா/அனலைதீவு சதாசிவ ம.வி),எஸ்.பிரசாந்தினி (யா/வேலணை மேற்கு நடராஜ வித்தி,வி.ஜோதிகா (யா/சென் மேரிஸ் றோ.க.பெ.வி).

### 19 வயதிற்கு கீழ்பட்டவர்கள்

**100 மீற்றர்**

எஸ்.மேரிஹேமா (யா/சென்.அன்ரனிஸ் கல் லூரி), என்.அனித்தா (யா/வேலணை மத்திய கல்லூரி),எஸ்.கைலேஸ்வரி (யா/நயினாதீவு ம.வி).

**200 மீற்றர்**

எஸ்.மேரிஹேமா (யா/சென்.அன்ரனிஸ் கல்லூரி),ஜே.அனுசியா(யா/புங்குடுதீவு கணேச ம.வி),ரி.அனுசியா(யா/நாரந்தனை றோ.க. ம.வி).

**400 மீற்றர்**

ரி.அனுசியா(யா/நாரந்தனை றோ.க.ம.வி), எஸ்.லக்ஸ்ஜனி(யா/புங்குடுதீவு கணேசு ம.வி),எஸ்.நாகசுபி(யா/அனலைதீவு சதாசிவ ம.வி).

**800 மீற்றர்**

ஜே.மரியகொறற்றி(யா/எழுவைதீவு முருகவேல் வித்தி),எஸ்.சோபிகா(யா/கலாநிதி ஆ தியாகராசா ம.ம.வி),எ.சன்சிகா(யா/கலாநிதி ஆ. தியாகராசா ம.ம.வி).

**1500 மீற்றர்**

ஜே.மரியகொறற்றி(யா/எழுவைதீவு முருகவேல் வித்தி), எ.பத்மலோஜினி(யா/வேலணை மத்திய கல்லூரி), ஜி.சங்கீதா(யா/நயினாதீவு ம.வி).

**5000 மீற்றர்**

ஜே.மரியாகொறற்றி(யா/எழுவைதீவு முருகவேல் வித்தி),எஸ்.சோபிகா(யா/கலாநிதி ஆ தியாகராசா ம.ம.வி),எஸ்.லிஜிதா(யா/கலாநிதி ஆ தியாகராசா ம.ம.வி).

**4X100 மீற்றர் அஞ்சல்**

(யா/புங்குடுதீவு கணேச ம.வி), (யா/சென் மேரிஸ் றோ.க.பெ.வி),(யா/கலாநிதி ஆ தியாகராசாம.ம.வி).

**4X400 மீற்றர் அஞ்சல்**

(யா/வேலணை மத்திய கல்லூரி), (யா/நாரந்தனை றோ.க. ம.வி),(யா/கலாநிதி ஆ தியாகராசாம.ம.வி).

**நீளம் பாய்தல்**

ஏ.வெனிஸ்டாலினி(யா/நெடுந்தீவு றோ.க.மகளிர் கல்லூரி), எம்.தயாளினி(யா/கலாநிதி ஆ தியாகராசாம.ம.வி), எம்.நிலாயினி (யா/அனலைதீவு சதாசிவ ம.வி).

**உயரம் பாய்தல்**

ஏ.சன்சிகா(யா/கலாநிதி ஆ தியாகராசா ம.ம.வி).என்.டிசக்சனா (யா/வேலணை மத்திய கல்லூரி),ஜி.ஜீவனா(யா/வேலணை மத்திய கல்லூரி).

**முப்பாய்ச்சல்**

ஏ.வெனிஸ்டாலினி(யா/நெடுந்தீவு றோ. க பெண்கள் கல்லூரி),எ.பத்மலோஜினி(யா/வேலணை மத்திய கல்லூரி),ரி.வைஷ்ணவி (யா/வேலணை மேற்கு நடராஜா வித்தி).

**குண்டெறிதல்**

ஜெ.தர்சிகா(யா/கரம்பொன் சண்முகநாத வித்தி), வி.துசாரா(யா/வேலணை மத்திய கல்லூரி),ஜெ.கபிலா(யா/அனலைதீவு சதாசிவ ம.வி).

**தட்டெறிதல்**

ஜெ.கபிலா(யா/அனலைதீவு சதாசிவ ம.வி),ஜெ.தர்சிகா(யா/கரம்பொன் சண்முகநாத வித்தி),வி.கஜனி(வேலணை மத்திய கல்லூரி).

**ஈட்டி எறிதல்**

ஜெ.கபிலா(யா/அனலைதீவு சதாசிவ ம.வி),வி.துசாரா(யா/வேலணை மத்திய கல்லூரி),கஜானி(வேலணை மத்தியகல் லூரி).

(தொடரும்)

### பிரிட்டன் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற

# மனித உரிமை கலந்துரையாடலில் ஈழத்தமிழர் விடயம் குறித்து ஆராய்வு

(கொழும்பு)

கடந்த மார்ச் 30 ஆம் திகதியன்று பிரித்தானியாவில் மன்செஞ்சஸ்ரர் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற மனித உரிமைகள் கலந்துரையாடலில் இலங்கையின் ஈழத் தமிழர் பற்றிய விடயமும் ஆராயப்பட்டுள்ளது.

பிரித்தானியாவில் வடக்கேயுள்ள மன்செஞ்சஸ்ரர் பல்கலைக்கழகத்தில் *சர்வதேசமயப்படுத்தப்பட்ட மனித உரிமையும் பூமியில் வேறு ஏதாவது சர்வதேசம் உண்டா?* என்ற தலையங்கத்தில் தமிழர் மனிதர் உரிமைகள் மையத்தின் சர்வதேச இயக்குநர் திருமதி டியற்றி மக்கோனால், ஈழத் தமிழ் மக்களின் இன்றைய நிலை பற்றிய புள்ளி விபரங்கள், பட்டியல்கள், ஆதாரங்களுடன், எடுத்துரைத்துள்ளார்.

இதில் ஈழத்தமிழ் மக்களின் இன்றைய நிலை பற்றி கலந்துரையாடப்பட்டதுடன் தற்போதைய நிலையில் ஈழத் தமிழ்மக்களின் இன்னல்களுக்கு ஓர் நிரந்தர தீர்வை கொண்டு வருபவதற்கு சர்வதேச அள வில் தமது பங்கு என்னவாக இருக்க முடியும் என்பது பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

கலந்துரையாடல் முடிந்த பின்னரும் பலர் தமது சந்தேகங்களை தீர்க்கும் முகமாக ஈழத்தமிழ் மக்களின் விவகாரங்கள் தொடர்பாக தமிழர் மனித உரிமைகள் மையத்தின் பிரதிநிதிகளிடம் வினவினர்.

இதற்கு பதில் அளித்த தமிழர் மனிதர் உரிமை பிரதிநிதிகள், புலம்பெயர் வாழ் தமிழரிடையே நிலவும் பிரிவினைகளுக்குத் தமிழர் மனித உரிமை மையம் முக்கியத்துவம் கொடுப்பது இல்லையெனவும் தமிழர் மனித உரிமை மையத்தின் செயற்பாடுகள் யாவும் புலம்பெயர் வாழ் தமிழர்களுக்காகவோ அல்லது இவர்களைத் திருப்திப்படுத்து வதற்காகவோ செய்யப்படுபவை இல்லையெனவும் அதே போல் சர்வதேச அரச பிரதி நிதிகள், அரச சார் பற்ற பிரதிநிதிகள், முக்கிய புள்ளிகளின் செயற்பாடுகள் இலங்கையின் வடக்கு, கிழக்கில் வாழும் மக்களுக்கானதாகவே இருக்க வேண்டுமெனவும் தெரிவித்தனர்.

இக்கலந்துரையாடல் மூலம் மாணவர்கள், கல்விமான்கள், பேராசிரியர்கள், மனித உரிமையாளர்கள், சர்வதேச மனித உரிமையின் நிலை பற்றிய தகவலுடன், மனித உரிமை மீறலில் முன்னணி வகிக்கும் இலங்கைத் தீவில் தமிழர்களின் தற்போதைய நிலை பற்றியும் அறிந்து கொண்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஶ்ரீ-2)


**மகளிருக்கான விடுமுறைக்கால 12 நாள் வகுப்புகள்**

◆ வீட்டிலிருந்தவாறே தொழில் புரிய விரும்பும் நங்கையரே!
◆ வெளிநாடு செல்லவிருக்கும் மங்கையரே!
◆ இல்லத்தரசிகளே! மற்றும் ஆர்வமுள்ள மகளீரே!

**கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும் (HAIR DRESSING & STYLING)**

50 வகையான கொண்டைகள் போடுதல், முடி அயன் செய்தல், (Straightening) முடி சுருட்டுதல், முடி நிறமூட்டுதல், 5 வித முடி வெட்டுதல். **தமக்குத்தாமே முடி வெட்டுவதற்கான** பயிற்சி, **Perming** தலைக்கு எண்ணை மசாஜ் செய்தல்.

✲ **Facials,** கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகு படுத்துதல் Waxing, எவ்வித சிரமமுமின்றி **தமக்குத்தாமே Facial** செய்வதற்கான பயிற்சி.

இந்து, கிறிஸ்தவ மணப்பெண் அலங்காரம், வித்தியாசமான முறைகளில் சேலை அணிதல்,

**மேற்படி பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.**

✲ தையல் தெரிந்தவர்களுக்கான சாறிபிளவுஸ், சுரிதார், Skirts சட்டைகள் தைக்கும் சான்றிதழ் அற்ற பயிற்சிகள்

**மேற்படி பயிற்சிகளுக்கு வயதெல்லை கிடையாது**

**ஆரம்பம் - 09-04-2011 சனி காலை 10.00 மணி**

**கலாலயா**
*பயிற்சியகம்*
பெருமாள் கோயிலுக்கு அண்மையில் - யாழ்ப்பாணம்

☞ *மேலும் விபரங்களை பி.ப 2.00 மணி வரை நேரில் அறிந்து கொள்ளலாம்.*






வன்முறையற்ற தொடர் பாடல் ஊடாக உளநற் சுகாதாரம் எனும் தலைப்பில் கருத்தரங்கு நேற்று யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களால் நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் வளவாளராக கலந்துகொண்ட சூசைப்பிள்ளை டேமியன் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட பாடசாலை மாணவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

# இன்று ஒரு தகவல்

## சுவர்க்க வாழ்க்கை

யோகவசிஷ்டம் என்ற நூலிலுள்ள ஒரு கதையை இப்பொழுது நாம் பார்க்கப் போகிறோம்.

அரிஷ்டரேமி என்ற ஒரு மன்னர் இருந்தார்.

அவர் அரசை தன் பிள்ளைகளிடம் ஒப்படைத்து விட்டுக் காட்டுக்குச் சென்று தவம் செய்ய ஆரம்பித்தார்.

அவர் மிகவும் நல்லவர். ஏராளமான புண்ணிய காரியங்களை செய்தவர். அப்படிப்பட்டவர் காட்டுக்குச் சென்று தவம் செய்ய ஆரம்பித்தமை இந்திரனுக்கு நடுக்கத்தை உண்டு பண்ணிவிட்டது.

''அரிஷ்டரேமி அதிகத் தவத்தில் ஈடுபடுவது காரணமாக அவருக்குத் தவப்பயன் அதிகமாக ஏற்பட்டு விடும். அதனால் அவரே இந்திரப்பதவிக்கு வந்து இந்திரனாகிவிட்டால் பிறகு நம் கதி என்னாவது?'' என்று இந்திரன் யோசித்தான்.

"அரிஷ்டரேமியால் இந்திரப் பதவி பறிபோவதை விட அவரைச் சுவர்க்கத்திற்கு அழைத்து வந்து தனது ஆளுகைக்குட்டபட்ட தேவர்களில் ஒருவராக ஆக்கி விடலாம் என்று எண்ணினான். உடனே ஒரு தேவ தூதனை அழைத்து, ''நீ தேவலோக விமானத்துடன் பூலோகம் செல். அங்கே காட்டில் அரிஷ்டரேமி கடுமையாகத் தவம் செய்து கொண்டிருக்கிறார். அவரிடம் நான் இப்போதே அவரைச் சுவர்க்கத்திற்கு அழைத்து வரச் சொன்னதாகச் சொல்லி அவரைக் கையோடு அழைத்து வா'' என்று உத்தரவிட்டார்.

தேவதூதன் தேவலோக விமானத்துடன் அரிஷ்டரேமி தவம் செய்து கொண்டிருந்த ஆச்சிரமத்தை அடைந் தான். அவரிடம் இந்திரன் தெரிவித்த விடயத்தைக் கூறினான்.

அதற்கு அரிஷ்டரேமி ''இதோ பார் நான் உன்னை ஒரு கேள்வி கேட்கிறேன். அதற்கு முதலில் பதில் சொல்'' என்றார்.

''என்ன கேள்வி சொல்லுங்கள்?'' என்றான் தேவ தூதன்.

''சுவர்க்கத்தில் என்னென்ன வசதிகள் இருக்கின்றன? என்னென்ன குறைபாடுகள், தோஷங்கள் இருக்கின்றன?

அதாவது, அங்கேயுள்ள நல்லது கெட்டது என்னென்ன வென்று முதலில் நீ சொல் அதன்பின் உன்னுடன் சுவர்க்கத்துக்கு வரலாமா? வேண்டாமா? என்பது பற்றி முடிவு செய்கிறேன்'' என்றார்.

"இந்த உலகத்தில் மக்கள் செய்யும் புண்ணியத்திற்கேற்ப மறுமையில் அவர்களுக்கு சுவர்க்க வாழ்க்கை அமைகிறது. உத்தம புண்ணியம் செய்தவர்களுக்கு உத்தம சுவர்க்கம் கிடைகிறது. மத்திம புண்ணியம் செய்தவர்களுக்கு மத்திம சுவர்க்கம் கிடைக்கிறது. சுவர்க்கத்தில் கூட அவரவர் செய்த புண்ணியத்திற்கு ஏற்ப உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற வேறுபாடு உண்டு'' என்றான் தேவதூதன்.

அதற்கு ''அப்படிப்பட்ட அந்தச் சுவர்க்கம் எனக்கு வேண்டாம்'' என்று சொல்லிவிட்டார் அரிஷ்டரேமி.

ஏனென்றால் அவரது நோக்கம் சுவர்க்க இன்பம் அனுபவிப்பதோ இந்திரன் ஆவதோ அல்ல. மாறாக முக்தி பெறுவதே அவரது முடிவான இலட்சியமாக இருந்தது.

சுவர்க்க வாழ்க்கை என்றும் நிலையானதல்ல. நாம் செய்யும் புண்ணியம் கரையும் வரையில் தான் அங்கே நாம் இருக்க முடியும். புண்ணியம் தீர்ந்தவுடன் மறுபடியும் பூமியில் வந்து ஏதாவது ஒரு ஜீவனாகப் பிறக்க வேண்டும்.

எனவே தான் பிரம்மத்துடன் ஐக்கியமாக வேண்டும் என்று மக்கள் விரும்பவேண்டும். அதுதான் முக்கியம் என்கிறார்கள் பெரியவர்கள்.

மனம் பக்குவமானால் சுவர்க்கம் இன்பம் எப்படியிருக்கும் என்பதை உணர முடியும். சுவர்க்கமும் நரகமும் கண்ணால் பார்க்கும் விடயங்கள் இல்லை. அவை அனுபவித்து உணரும் விடயங்கள்.

எல்லோருக்கும் போக வேண்டும் என்று தான் ஆசைப்படுகிறோம். ஆனால் நரகத்துக்கு போவதற்குரிய செயல்கள் என்னென்ன உண்டோ அவ்வளவையும் தவறாமல் செய்து கொண்டிருக்கின்றோம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# பொங்கல் உற்சவம்

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரம் வீணியவரை ஸ்ரீ இராஜஇராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தான பொங்கல் எதிர் வரும் 8 ஆம் திகதி வெள்ளிக் கிழமை முதல் 17 ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை வரை பத்துத் தினங்கள் நடைபெறும்.

இதில் 11 ஆம் திகதி பங்குனித் திங்கள் திருக்குளிர்ச்சி பொங்கல் என்பனவும் 14 ஆம் திகதி வருடப்பிறப்பு பொங்கல் விசேட பூசையும் நடைபெறும் (ஸ்ரீ)

# பாடசாலைகளில் வீட்டுத்தோட்டம் அமைக்கும் திட்டம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண பாடசாலைகளில் வீட்டுத்தோட்டம் அமைக்கும் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய பூநகரி பிரதேச பாடசாலைகளான செம்மன் குன்று அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையிலும் முக்கம்பன் தமிழ் கலவன் பாடசாலையிலும் வீட்டுத்தோட்டம் அமைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் நந்தன உடவத்த , பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர் (ஸ்ரீ-2)

# ஜனாதிபதி மஹிந்தவுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்திய 19 பேர் கைது

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக தமிழகத்தின் கோயம்புத்தூர் நகரில் ஆர்ப்பாட்டம் நடத்திய ம.தி.மு.க தொண்டர்கள் 19 பேர் தமிழக பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை இந்திய அணிகளுக்கிடையில் நடைபெற்ற உலகக்கிண்ண கிரிக்கெட்போட்டியை பார்வையிடுவதற்காக ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ மும்பை சென்றமைக்கு எதிராக அவர்கள் கோஷங்கள் எழுப்பியதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜனாதிபதி மஹிந்தவின் கொடும்பாவியொன்றை எரித்தனர். எனினும் அது பொலிஸாரால் அணைக்கப்பட்டது. (ஸ்ரீ-2)

# வருடாந்த மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

தாவடி தெற்கு ஸ்ரீ வடபத்திரகாளி அம்பள் தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

இதில் எதிர்வரும் 15 ஆம்திகதி வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணிக்கு சப்பறத்திருவிழாவும் எதிர்வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு இரதோற்சவமும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை சித்திரா பௌர்ணமி தின தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

பகல் திருவிழா காலை 8.30 மணிக்கும் இரவு உற்சவம் மாலை 5 மணிக்கும் ஆரம்பமாகி நடைபெறும் . (ஸ்ரீ)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 80 | 60 |
| உருளைக்கிழங்கு | 65 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 80 | 100 | 90 |
| தக்காளி | 70-80 | 160 | 130 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 50 |
| கோவா | 40 | 80 | 70 |
| கரட் | 100 | 160 | 130 |
| பூசணி | 40-50 | 50 | 50 |
| புடோல் | 35 | 50 | 60 |
| வாழைக்காய் | 40 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 120 | 110 | 100 |
| பெரிய வெங்காயம் | 55 | 70 | 60 |
| பாகற்காய் | 80 | 60 | 80 |
| வெண்டிக்காய் | 60 | 70 | 60 |
| கருணைக் கிழங்கு | - | 80 | 90 |
| பயற்றங்காய் | 70 | 80 | 110 |
| லீக்ஸ் | 100 | 100 | 120 |
| பீற்றூட் | 45 | 50 | 50 |
| கறிமிளகாய் | 120 | 120 | 130 |
| முருங்கைக்காய் | 550 | 500 | 480 |
| போஞ்சி | - | 160 | 100 |
| கத்தரிதம்புள்ள | - | 50 | 45 |
| கீரை - 1 பிடி | 10-15 | 30 | 20 |
| தேசிக்காய் | 60 | 50 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 50 | 50 |

# இராசி பலன்

04.04.2011
(பங்குனி 21, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 6.08 மணிக்கு
பிரதமை முன்னிரவு 10.33 ணிவரை
ரேவதி மாலை 5.24 மணிவரை
இராகுகாலம் 7.40-9.10 மணிவரை
சுபநேரம் 12.10-1.40மணிவரை
மூன்றாம் பங்குனித்திங்கள்

**மேடம்**

தேகாரோக்கியத்தில் கவனம் தேவை, வழக்கத்தைவிட கூடிய நேரம் பணிபுரியும் சூழ்நிலை உருவாகும், சயனசுகக்குறைவுண்டு, திடீர் பயணங்கள் ஏற்படலாம்.

**இடபம்**

செல்வாக்கு மேலோங்கும் நாள், மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், தொழிலில் வருமானம் அதிகரிக்கும், குடும்ப சுகமுண்டு.

**மிதுனம்**

தொல்லை கொடுத்தவர்கள் மனம் மாறி தொழில் வளர்ச்சிக்கு உதவுவர், மதிப்பும் மரியாதையும்உயரும், தூரதேசச் செய்திகளால் நன்மையடைவீர்கள்.

**கடகம்**

பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, நினைத்த பொருள் எளிதில் கிடைக்கலாம், திடீர் பயணங்களால் நன்மையுண்டு, மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும் நாள்.

**சிங்கம்**

நாவில் கவனம் செலுத்தினால் பாதிப்புக்களிலிருந்து விடுபடலாம், வாகன பழுதுச் செலவுகள் ஏற்படலாம், எடுத்த காரியங்கள் தாமதமாகலாம், கௌரவக் குறைவான நாள்.

**கன்னி**

தொழிலில் புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், வாழ்க்கைத் தேவைகள் நிறைவு செய்யப்படலாம், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், களஸ்திர நன்மையுண்டு.

**துலாம்**

கடிதம் கனிந்த தகவலைத்தரும், பிள்ளைகளால் உரிய வருமானங்கள் வந்து சேரும், அயலவருடன் ஏற்பட்ட பகை மாறும், ஆரோக்கியமான நாள்.

**விருச்சிகம்**

சுப செய்திகள் வீடு வந்து சேரும், பிள்ளைகள் வழியில் பெருமைக்குரிய சம்பவங்கள் நடைபெறலாம், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், சொல்லை செயலாக்கி காட்டுவீர்கள்.

**தனுசு**

பெற்றோர் மீது பிரியம் கூடும், சகோதர வழியில் ஏற்பட்ட சச்சரவுகள் அகலும், தொழில் ரீதியாக எடுத்த முயற்சி வெற்றியளிக்கும், சுபசெய்திகள் வந்து சேரும்.

**மகரம்**

பெண்வழி பிரச்சினைகள் நல்ல முடிவுக்கு வரும், பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள் உடன் பிறப்புக்கள் உதவிக் கரம் நீட்டுவர் தொழில் நன்மையுண்டு.

**கும்பம்**

பயணங்களால் பலன் கிடைக்கும், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் ஏற்பட்ட கவலைகள் தீரும், வாக்கு மேன்மையால் பிறரைக்கவர் வீர்கள்.

**மீனம்**

திட்டமிட்ட காரியமொன்றில் திடீர் மாற்றங்கள் செய்யும் சூழ்நிலை உருவாகலாம், குடும்பதினரிடையே கோபத்தைக் குறைப்பது நல்லது,பக்குவமாக நடந்து பாராட்டு பெறும் நாள்.

# வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை -க.பொ.த (சா/த) பரீட்சை 2010 பெறுபேறுகள்

வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை ஒரு நீண்ட கல்வி பாரம்பரியம் மிக்க தேசிய பாடசாலையாகும். இங்கு 5 ஆம் ஆண்டு புலமைப் பரீட்சையில் சித்தி பெற்ற மீத்திறன் மிக்க மாணவிகளே கூடுதலாக இங்கு கல்வி பயிலுகின்றனர் .இச் சூழ்நிலையில் அப்பாடசாலையில் பரீட்சைப் பெறுபேறுகள் பலரது கவனிப்புக்குள்ளாகின்றன. இப்பாடசாலை மாணவிகள் திறமையாக பரீட்சை செய்தாலும் அதனை பெறும் சாதனையாக சிலர் கருதுவதில்லை. எனினும் குறைவாக இருப்பின் கடும் விமர்சனத்துக்குட்படுவது வழக்கம்.

இப் பாடசாலை நீண்டகாலமாக பொதுப்பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று வந்த போதிலும் 2006 ஆம் ஆண்டிற்கு பின்னர் க.பொ.த சாதாரண பெறுபேறுகள் மிகவும் சிறப்பாக அமைந்து வருகின்றன. அட்டவணை I கடந்த 5 ஆண்டுகளுக்குரிய பரீட்சைப் பெறுபேறு விபரங்கள் தரப்பட்டுள்ளன.

அட்டவணை - I

| ஆண்டு | தோற்றியோர் எண்ணிக்கை | க.பொ.த (உ/த) கற்கத் தகுதி பெற்றோர் | சித்தி விகிதம் |
|---|---|---|---|
| 2006 | 232 | 232 | 100 |
| 2007 | 219 | 219 | 100 |
| 2008 | 194 | 193 | 99.48 |
| 2009 | 182 | 182 | 100 |
| **2010** | **218** | **218** | **100** |

கடந்த 5 வருட பெறுபேறுகளை நோக்கும் போது 2008 இல் ஒரு பரீட்சார்த்தி மாத்திரமே சித்தி பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இத்தகைய உயர் பெறுபேறுகளை தொடர்ச்சியாக தக்க வைத்திருப்பது மிகவும் கடினமானதொரு செயற்பாடாகும்.

க.பொ.த (சா/த) பரீட்சை 2010 இல் இப் பாடசாலையில் இருந்து 218 மாணவர்கள் முதல் முறையாக பரீட்சைக்கு தோற்றினர். இவர்களுள் தமிழ்மொழி மூலம் 184 பேரும் ஆங்கிலமொழிமூலம் 34 பேரும் பரீட்சைக்கு தோற்றினர் பரீட்சை எழுதிய சகல மாணவிகளும் க.பொ.த உயர்தரவகுப்பில் கல்வி கற்க தகுதி பெற்றுள்ளனர். இவர்களுள் இருவரை தவிர ஏனை 216 பேரும் விஞ்ஞான பிரிவுக்கு தகுதி பெற்றுள்ளனர் என்பது மகிழ்ச்சிக்குரியது.

பரீட்சார்த்திகள் பாடங்களில் A தர அடிப்படையில் பெறுபேறுகளை நோக்குகையில் 2010 இல் 11 மாணவிகள் எல்லாப்பாடங்களிலும் A சித்தி பெற்றுள்ளார்கள். அட்டவணை-II 2008, 2009 2010 ஆண்டுகளில் உயர் சித்திபெற்ற மாணவர்களின் விபரம் பின்வருமாறு.

அட்டவணை-II

| | 2008 | 2009 | 2010 |
|---|---|---|---|
| 9ஏ | 11 | 14 | 11 |
| 8ஏ | 31 | 21 | 40 |
| 7ஏ | 23 | 24 | 26 |
| 6ஏ | 26 | 30 | 30 |

2010 இல் 117 பேர் 6 A யும் அதற்கு கூடிய பெறுபேறுகளையும் பெற்று சித்தியடைந்துள்ளனர் .இவ் எண்ணிக்கை மொத்த பரீட்சார்த்திகளின் எண் ணிக்கையில் 53.67 வீதமாகும். 4A உம் அதற்கு கூடிய பெறுபேறுகளையும் பெற்றவர்களின் எண்ணிக்கை மொத்தத்தொகையில் 75 வீதத்திற்கு மேல் இருக்கின்றது.

218 பரீட்சார்த்திகள் தலா ஒன்பது பாட அலகு எண்ணிக்கைகளின் படி (218X9) மொத்தமாக 1962 பாட அலகுகளுக்கு தோற்றியிருந்தனர். இதில் 6 அலகுகளில் மாத்திரமே சித்திபெறவில்லை.(ஆங்கிலம் -1, ஆங்கில இலக்கியம்-2, வரலாறு -1, தமிழ் இலக்கியம் -1, சங்கீதம்-1) இது மொத்தப்பாட அலகுகளில் 031 வீதமாகும். பாட அலகில் பெற்ற பெறுபேறுகளின் அடிப்படையில் கடந்த 5 வருடத்திற்குரிய தரவுகள் அட்டவணை-III தரப்பட்டுள்ளன

அட்டவணை - III

2010(184X9)

| தரம் | எண்ணிக்கை | விகிதம் |
|---|---|---|
| A | 1147 | 58.46 |
| B | 374 | 19.06 |
| C | 349 | 17.79 |
| S | 86 | 4.37 |
| W | 06 | .31 |
| | 1962 | 100 |

2009(182X9)

| தரம் | எண்ணிக்கை | விகிதம் |
|---|---|---|
| A | 951 | 58.06 |
| B | 345 | 21.08 |
| C | 255 | 15.57 |
| S | 81 | 4.95 |
| W | 06 | 0.36 |
| | 1632 | 100 |

2008(194X9)

| தரம் | எண்ணிக்கை | விகிதம் |
|---|---|---|
| A | 1049 | 60.11 |
| B | 372 | 21.32 |
| C | 235 | 13.47 |
| S | 77 | 4.41 |
| W | 12 | 0.69 |
| | 1745 | 100 |

2007(219X10)

| தரம் | எண்ணிக்கை | விகிதம் |
|---|---|---|
| A | 1520 | 69.3 |
| B | 257 | 16.3 |
| C | 221 | 3.7 |
| S | 81 | 0.3 |
| W | 07 | 0.69 |
| | 2186 | 100 |

2006(232X10)

| தரம் | எண்ணிக்கை | விகிதம் |
|---|---|---|
| A | 1385 | 59.7 |
| B | 438 | 18.9 |
| C | 349 | 15.0 |
| S | 137 | 5.9 |
| W | 13 | 0.5 |
| | 2320 | 100 |

2010 பெறுபேறுகளில் A, B, C ஆகிய மூன்று பிரிவுகளையும் தொகுத்து நோக்கும் பொழுது 1962 பாட அலகுகளில் 1870 பாட அலகுகளில் C அல்லது அதற்குமேல் பெற்றுள்ளனர். இது மொத்தப் பெறுபேற்றில் 95.31 வீதமாகும்.

பாட அடிப்படையில் அட்டவணை IV இல் தமிழ்மொழி மூல பெறுபேறுகளும் அட்டவணை-V ஆங்கில மொழிமூலப் பெறுபேறுகள் தரப்பட்டுள்ளன.

நான்கு கட்டாய பாடங்களான சமயம், தமிழ், விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களில் சகல பரீட்சார்த்திகளும் சித்தி பெற்றிருக்கிறார்கள். ஆங்கிலத்தில் ஒரு பரீட்சார்த்தியும் வரலாற்றில் ஒரு பரீட்சார்த்தியும் சித்தி பெற தவறி விட்டனர்.

தமிழ்மொழி மூலம் 184 மாணவிகள் பரீட்சை எடுத்து இவர்களுடைய பரீட்சைப் பெறுபேறுகள் உயர்வாக இருக்கின்றன. அதிலும் குறிப்பாக கணிதத்தில் இவர்களது அடைவு பாராட்டத்தக்கது. தமிழ்மொழிமூல பரீட்சார்த்திகளின் அடைவும் மீத்திறன் பரம்பல் பண்பைப் பிரதிபலிக்கிறது. அட்டவணை-VI தமிழ் மொழி மூல பரீட்சார்த்திகளின் பெறுபேறுகளின் தொகுப்பு, தரரீதியில் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை - VI

| தரப்பிரிவு | எண்ணிக்கை | விகிதம் |
|---|---|---|
| A | 926 | 55.92 |
| B | 336 | 20.29 |
| C | 313 | 18.90 |
| S | 76 | 4.59 |
| W | 5 | 0.30 |
| | 1656 | 100 |

ஆங்கிலமொழி மூலம் 34 மாணவிகள் பரீட்சை எடுத்தனர். இவர்கள் 34X9) 306 அலகுகளுக்கு தோற்றினர். இவர்களது பரீட்சைப் பெறுபேறுகள் மிகவும் உயர்வாக இருப்பது கவனிக்கத்தக்கது. இவர்கள் பெற்ற தர ரீதியாக பெற்ற பெறுபேறுகள் பின்வருமாறு,

அட்டவணை -VII

| தரப்பிரிவு | எண்ணிக்கை | விகிதம் |
|---|---|---|
| A | 221 | 72.22 |
| B | 38 | 12.42 |
| C | 36 | 11.77 |
| S | 10 | 3.27 |
| W | 01 | 0.32 |
| | 306 | 100 |

ஆங்கிலமொழி மூலம் தோற்றிய மாணவர்கள் யாவரும் சமய பாடத்தில், கணிதத்தில் ஆங்கிலத்தில் A



Prof. பொ. பாலசுந்தரம்பிள்ளை
PhD.Durham
Doctor of Letters(Jaffna)
முன்னாள் துணைவேந்தர்

சித்தி பெற்றிருப்பது கவனிக்கத் தக்கது. தமிழ் மொழியில் 32 பேரும் A சித்தி பெற்றிருக்கின்றார்கள். இவர்கள் கணிதத்தில் பெற்ற பெறுபேறுகளுக்கு இணையாக விஞ்ஞான பாடத்தில் பெறவில்லை என்பது கவனிக்கத்தக்கது. விஞ்ஞான பாட பெறுபேற்றை வருங்காலத்தில் அதிகரிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். வரலாற்றுப் பாடத்தில் பெற்ற பெறுபேறுகள் ஏனைய பாடங்களில் பெற்ற பெறுபேறுகளுடன் ஒப்பிடுமிடத்து மிகவும் குறைவாக இருப்பது கவனிக்கத்தக்கது.

தமிழ் மாணவர்கள் வரலாற்றுப் பாடத்தில் நல்ல பெறுபேறுகள் பெறுவது மிகவும் குறைவாக இருக்கிறது. இதற்கு வேம்படியும் விதிவிலக்கல்ல. தமிழ் மாணவர்கள் வரலாற்றை கற்க பல பிரச்சனைகள் அல்லது சில இடர்பாடுகள் இருப்பதுபோல் தெரிய வருகிறது

க.பொ.த (சா/த) பரீட்சையில் சிங்கள மாணவர்கள் வரலாற்று பாடத்தில் உயர் புள்ளிகளைபெற தமிழ் மாணவர்கள் வரலாறுப் பாடத்தில் குறைவான புள்ளிகளையே பெறுகின்றார்கள். சிங்களம், பௌத்தம், இலங்கை வரலாறு ஆகிய மூன்று பாடங்களும் ஒன்றுடன் ஒன்று மிகவும் இணைந்திருப்பதனால் அவர்களுக்கு இலங்கை வரலாற்றை (15ஆம் பக்கம் பார்க்கவும்)

அட்டவணை -IV

வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை க.பொ.த (சா/த) பரீட்சை 2010 தமிழ் மொழி மூலம்

| பாடம் | No. Applied | No. SAT | FIRST SITTING | | | | | % passed |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | A | B | C | S | W | |
| சைவசமயம் | 169 | 169 | 157 | 07 | 05 | - | - | 100 |
| கத்தோலிக்கம் | 03 | 03 | 03 | - | - | - | - | 100 |
| கிறிஸ்தவம் | 02 | 02 | - | 02 | - | - | - | 100 |
| தமிழ்மொழியும் இலக்கியமும் | 174 | 174 | 93 | 44 | 37 | - | - | 100 |
| ஆங்கிலம் | 174 | 174 | 48 | 35 | 55 | 33 | 03 | 98.2 |
| விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் | 174 | 174 | 68 | 42 | 53 | 11 | - | 100 |
| கணிதம் | 174 | 174 | 139 | 18 | 16 | 01 | - | 100 |
| வரலாறு | 174 | 174 | 55 | 34 | 69 | 16 | - | 100 |
| சித்திரம் | 13 | 13 | 03 | 04 | 05 | 01 | - | 100 |
| சங்கீதம் | 13 | 13 | 04 | 05 | 03 | 01 | - | 100 |
| நடனம் | - | - | - | - | - | - | - | - |
| ஆங்கில இலக்கியம் | 18 | 18 | 01 | 04 | 02 | 09 | 02 | 88.8 |
| தமிழ் இலக்கியம் | 80 | 80 | 26 | 24 | 20 | 06 | 04 | 95.0 |
| நாடகமும் அரங்கியலும் | 47 | 47 | 07 | 24 | 16 | - | - | 100 |
| புவியியல் | 13 | 13 | 10 | 02 | 01 | - | - | 100 |
| வர்த்தகமும் கணக்கியலும் | 146 | 146 | 58 | 30 | 39 | 17 | 02 | 98.6 |
| குடியுரிமைக் கல்வி | 15 | 15 | 11 | - | 03 | 01 | - | 100 |
| தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் | 132 | 132 | 27 | 31 | 51 | 22 | 01 | 99.0 |
| உடற்கல்வியும் சுகாதாரமும் | 39 | 39 | 10 | 20 | 09 | - | - | 100 |
| வடிவத் தொழில்நுட்பம் | 03 | 03 | - | 02 | 01 | - | - | 100 |

# வருகிற தேர்தலில் காங்கிரஸையும் அதன் கூட்டணியையும் அப்புறப்படுத்தவேண்டும்

## வைகோ-சீமான் கூட்டாகப் பேட்டி

நாம் தமிழர் இயக்கத் தலைவர் சீமான், ம.தி.மு.க. அலுவலகத்திற்கு (02-04-11) நேற்று முன்தினம் 10.55 மணிக்கு வந்தார். ஒன்றரை மணி நேரம் அவர் வைகோவைச் சந்தித்துப் பேசினார். பின்னர் இருவரும் நிருபர்களுக்குப் பேட்டி அளித்தனர். அப்பொழுது வைகோ கூறியதாவது: தமிழீழ மக்களின் உரிமைகளுக்காகவும், தமிழீழ விடுதலைக்காகவும் அர்ப்பணிப்பு உணர்வுடன் போராடும் போராளி சீமான் மீது இரண்டுமுறை, தேசியப் பாதுகாப்பு தடுப்புச்சட்டம் தவறாகப்பயன்படுத்தப்பட்டது. சிறைச்சாலைகளில் அடக்குமுறை, இலட்சியதாகம் கொண்டவர்களை ஒடுக்கமுடியாது. சீமான் கைது செய்யப்பட்டதும் முதற்கண்டன அறிக்கை ம.தி.மு.க. கொடுத்தது.

“சீமான் பேசிய அதே பேச்சை நான் தமிழ்நாடு முழுவதும் கூட்டங்களில் பேசினேன். அவர் பேச்சில் எந்தத் தவறும் இல்லை. வேலூர் சிறையில் நானும் நெடுமாறனும் சீமானைச் சந்தித்தோம். அப்பொழுது எந்தத் தவறும் செய்யாமல் ஸ்ரீபெரும் புதூரில் நடந்த ஒரு கொலைக்காக 20 ஆண்டு களாக சிறையில் வாடும் தம்பிகளையும் பார்த்தேன். சீமானைக் கைது செய்தது சட்டவிரோதம் என்று கோர்ட்டு விடுவித்துள்ளது.

விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசுவது எங்கள் உரிமை அதை யாரும் தடுக்க முடியாது. கடந்த பாராளுமன்றத் தேர்தலில் ஆட்சி அதிகாரத்தை பிடிப்பதற்கு ஆயிரத்து 200 கோடி ரூபா செலவு செய்தும் கூட 13 இலட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் தான் தி.மு.க- காங்கிரஸ் கூட்டணி வெற்றி பெற்றது. வருகின்ற சட்டசபைத் தேர்தல் தமிழர்களின் தன்மானத்திற்கு விடும் அறைகூவல். தமிழ்நாட்டில் பள்ளிக்குழந்தைகளின் உயிருக்கு பாதுகாப்பு இல்லை, சுதந்திரமாக தொழில் செய்ய பாதுகாப்பு இல்லை, வரப்போகும் தேர்தலில் விலைவாசி உயர்வு, மணல் திருட்டு, வாழ்வாதார சீரழிவு, 2ஜி ஸ்பெக்ட்ரம் முறைகேடு பற்றி தெருத் தெருவாகப் பிரசாரம் செய்வோம்.

ஸ்பெக்ட்ரம் முறைகேட்டில் காங்கிரசுக்கும் தொடர்பு இருப்பதால்தான் இரண்டு வருடங்களாக நடவடிக்கை எடுக்கவில்லை. இப்போது மத்திய மந்திரி கபில்சிபல், எதுவுமே நடக்கவில்லை என்கிறார். அப்படியென்றால் இராசாவை ஏன் பதிவிநீக்கம் செய்ய வேண்டும். எல்லாவற்றையும் மக்கள் பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள். தேர்தற்களத்தை சந்திக்க வலுவான வஜ்ஜிராயுதமாக சீமான் இருப்பார். கலையுலகில் இருக்கும் தமிழ் இன உணர்வாளர்களும் இணைந்து வெற்றியை ஈட்டுவார்கள்.



**சீமான் கூறியதாவது:-** நான் சிறையில் இருந்தபோது விடுதலையாக வேண்டுமென்று மனப்பூர்வமாக வை. கோபாலசாமி அறிக்கை வெளியிட்டார். அதைப்போல நான் விடுதலை செய்யப்பட்டேன். அவரது அன்பிற்கும் ஆதரவிற்கும் நன்றி செலுத்த கடமைப்பட்டவன். வருகிற தேர்தலில் காங்கிரசையும் அதன் கூட்டணிக் கட்சியையும் அப் புறப்படுத்த வேண்டும் என்ற இலட்சிய வெறியோடு பணியாற்று வோம். வை. கோபாலசாமி தேசிய அரசியலில் பல வருடங்கள் இருந்து விட்டார். மாநில அரசியலுக்கு அவர் வரவேண்டும். எம்.எல்.ஏ ஆக சட்டசபைக்குள் செல்லவேண்டும். அங்கு தமிழர்கள் ஆதரவுக்குரல் ஒலிக்க வேண்டும் என்று நான் அவரிடம் வலியுறுத்தினேன். அவர் யோசிக்கிறேன் என்று கூறியிருக்கிறார். யோசிப்பதற்கு எதுவும் இல்லை. இந்தமுறை எப்படியாவது அவர் எம்.எல்.ஏ தொகுதியில் போட்டியிட வேண்டும்.

**கேள்வி:-** ஜெயலலிதாவைச் சந்திப்பீர்களா?

**பதில்:-** எங்களுடைய சந்திப்பு அண்ணன்-தம்பி சந்திப்பு; அரசியலுக்கு அப்பாற்பட்டது.

**கேள்வி:-** கடந்த தேர்தலில் இரட்டை இலைக்கு ஆதரவாக வாக்குப்போடச் சொன்னீர்கள். இந்தத்தேர்தலிலும் அவ்வாறு கேட்பீர்களா?

**பதில்:-**

இரட்டை இலைக்கு வாக்களியுங்கள் என்று கடந்த தேர்தலில் சொன்னேன்; காங்கிரசுக்கு எதிராக களத்தில் நிற்கும் பெரிய கட்சி அ.தி.மு.கழகம். காங்கிரசை வீழ்த்த இரட்டை இலைக்கு ஆதரவு அளியுங்கள் என்றேன். இப்போதும் அப்படித்தான் சொல்வேன். இதைக் கூடச் சொல்வதற்கு தைரியம் இல்லை என்றால் நான் எப்படி போரளியாக முடியும். யாருக்கு வேண்டுமானாலும் வாக்குப் போடுங்கள் என்று குடுகுடுப்பைக்காரன்போல ஜோசியம் சொல்ல மாட்டேன். யார் வர வேண்டும் என்பதல்ல யார்வரக் கூடாது என்பது தான் எங்கள் குறிக்கோள்.

# வவுனியாவில் புத்தர்சிலை அமைப்பதாயின் நகரசபையின் அனுமதி பெறப்பட வேண்டும்

## வவுனியா நகரசபை உபதலைவர் எம்.எம்.ரதன் தெரிவிப்பு

உலகிலேயே மிகப்பெரிய புத்தர் சிலை வவுனியாவில் அமைக்கப்படவுள்ளதாக அறிகின்றோம். எமது நகரசபையின் எல்லைக்குள் அமைக்கப்படுவதாயின்சபையின்அனுமதி பெற்றே அமைக்கப்பட வேண்டுமென தமிழ் தேசிய கூட்டமைப்பின் வவுனியா நகரசபையின் உபதலைவர் எம்.எம்.ரதன் தெரிவித்துள்ளார்.

தந்தை செல்வாவின் 113 ஆவது பிறந்த தின நிகழ்வின் போதே கலந்து கொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார். இந்நிகழ்வு வவுனியா மணிக்கூட்டு கோபுர சந்திக்கு அருகாமையில் உள்ள தந்தை செல்வாவின் உருவச்சிலைக்கு முன்றலில் இலங்கை தமிழரசுக்கட்சியின் வவுனியா மாவட்ட கிளைத்தலைவர் டேவிற் நாகநாதன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு அவர் மேலும் உரைநிகழ்த்துகையில், இலங்கை தமிழரசுக்கட்சியின் கட்சியின் ஸ்தாபகரும் தமிழ் இனத்தின் தந்தை எனப்போற்றப்படும் தந்தை செல்வாவின் 113 ஆவது பிறந்த தினமாகும். 31.03.1898 ஆம் ஆண்டு பிறப்பெடுத்த தந்தை செல்வாவின் வாழ்வு 1948 ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் கிடைத்த நாளுக்கு பின்னர் முற்றாக மாற்றம் அடைந்தது.

1956 ஆம் ஆண்டு தந்தை செல்வா-பண்டா ஒப்பந்தம் சிறப்புக்குரியது. அவ்வொப்பந்தம் கிழித்தெறியப்பட்டது. 1956 ஆம் ஆண்டு யூன் 5 ஆம் திகதி சிங்களம் மட்டுமே உத்தியோகபூர்வமொழி என அறிவித்த போது தந்தை செல்வா அதனை எதிர்த்தார். இதேபோன்று 1972 ஆம் ஆண்டு தனிச்சிங்கள சட்டம் கொண்டுவரப்பட்ட போது தந்தை செல்வா பாராளுமன்ற பதவியை துறந்தார். 1956 ஆம் ஆண்டும் திருகோணமலையில் இலங்கை தமிழரசுக்கட்சியின் மகாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை இன்றைய அரசு புரிந்து கொள்ளவேண்டும்.

உள்ளூராட்சி மன்ற சட்டமுறை சட்டத்தின் பிரகாரம் மக்கள் பிரதிகளை கொண்ட ஒரு நகரத்தில் என்ன விடயம் நடந்தாலும் அதற்கு அச்சபையின் அனுமதிபெறுதல் வேண்டும். தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட நகரசபைக்குள் புத்தர் சிலை அமைப்பதாயின் சபையின் அனுமதி பெறப்படுதல் அவசியம் என வேண்டுகின்றோம். இதேபோலதான் அண்மையில் வவுனியா வைத்தியசாலைக்கும் புத்தர் சிலையினை எமது அனுமதி இல்லாமல் வைத்தார்கள். நாம் அதை தட்டிக்கேட்டபோது ஒவ்வொருவர் ஒவ்வொரு காரணத்தை சொன்னார்கள்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கும் இன்றைய அரசுக்கும் இடையிலான பேச்சுவார்த்தையில் இனப்பிரச்சினைக்கான தீர்வை எமது கட்சி முன்வைக்க இருக்கின்றது. இந்த பேச்சுவார்த்தை காலத்தை இழுத்தடிக்கும் ஒரு பேச்சுவார்த்தையாக இருக்கக்கூடாது. இவ் அரசாங்கம் எமது தீர்வை ஏற்காது விடின் நாம் இந்தியாவிடமும் சர்வதேசத்திடமும் முறையிடுவோம் என அவர் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

## காத்தவராயர் நூல் வெளியீட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு கிழக்கு மாவுதிடல் அருள் மிகு ஸ்ரீபெரிய காத்தவராயர் தேவஸ்தானத்தில் இன்று திங்கட்கிழமை நடைபெறும் மணவாளக் கோலத்திருவிழாவில் சிறப்பு நிகழ்வாக ‘பெரிய காத்தவராயர்’ எனும் ஆலய வரலாற்று ஆவணநூல் வெளியிடப்படவுள்ளது.

இந்நூலின் ஆய்வுரையினை மதுரகவி காரை.எம்.பி.அருளாநந்தன் நிகழ்த்தவுள்ளார். ஆலய தர்மகத்தா இறைச்செம்மல் ந.இரத்தினலிங்கம் தலைமையில் வெளியீட்டு நிகழ்வு நடைபெறவுள்ளது. (ஸ்ரீ-2)

# விடுதலைப் புலிகளின் 39 படகுகள் விசேட அதிரடிப்படையினரால் மீட்பு

மாங்குளம் -நத்தன்கண்டால் வனப் பிரதேசத்தில் பொதியிட்டு மறைத்து வைக்கப்பட்டிருந்த தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு உரித்தானது என கருதப்படும் 39 படகுகள் மீட்கப்பட்டுள்ளன.

மாங்குளம் பொலிஸ் விசேட அதிரப்படை குழுவிற்கு கிடைத்த தகவல்களின் அடிப்படையிலேயே நேற்று முன்தினம் இந்த படகுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

நத்தன்கண்டால் பிரசேத்தில் அடர்ந்த காட்டில் ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டு பொதியிடப்பட்டிருந்த படகுகள் சூட்சுமமாக மறைத்து வைக்கப்பட்டிருந்ததாக மாங்குளம் பொலிஸார் கூறியுள்ளனர்.குறித்த படகுகள் மோதல் இடம்பெற்ற காலத்தில் யாழ்ப்பாண குடாநாட்டில் தாக்குதல் மேற்கொள்வதற்காகவே மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# மக்களை கொன்ற குற்றத்திலிருந்து இலங்கை அரசு தப்பவே முடியாது

# நாடுகடந்த தமிழீழத்தின் பிரதமர் உருத்திரகுமாரன் செவ்வி

**நாடுகடந்த தமிழீழத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் சண்டே லீடருக்கு அண்மையில் வழங்கிய செவ்வி இங்கு பிரசுரமாகின்றது. (ஆ-ர்)**

நேற்றைய தொடர்ச்சி...

**கேள்வி :-** அண்மையில் ஜெனீவாவில் நடந்த ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகத்தின் அமர்வுகளில் இலங்கையின் அமைச்சர் மகிந்த சமரசிங்க விடுதலைப் புலிகளின் சர்வதேச வலையமைப்பு தொடர்ந்து செயற்படுகிறது என்றும், இது பல "குற்றச் செயல்களில்" ஈடுபடுகிறது என்றும் கூறியுள்ளார். இது பற்றி உங்கள் கருத்து என்ன?

**பதில் :-** இலங்கை அரசின் குற்றச்செயல்கள், நல்லிணக்கக் குழு என்ற ஏமாற்றுச் செயற்பாடுகள் மற்றைய மோசமான குறைபாடுகளைக் காரணங்காட்டி சர்வதேச மன்னிப்புச் சபை, சர்வதேச நெருக்கடிகளுக்கான குழு போன்ற அமைப்புகள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் ஆதாரங்களோடு; மீண்டும் மீண்டும் தன்மீது சுமத்தும் குற்றச்சாட்டுகளால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள இலங்கை அரசு வழமைபோல் உலகின் கவனத்தைத் திசை திருப்பும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறது. ஆயினும், ஆதாரங்கள் மிகவும் பலமாக இருப்பதனால், இலங்கை அரசு இந்தமுறை தனது தந்திரங்களில் வெற்றிபெற மாட்டாது.

ஐ.நா. சபையில் பல செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. ஐ.நா.செயலாளர் நாயகத்தின் ஆலோசகர் குழு தயாரித்த இலங்கையின் போர்க்குற்றம் பற்றிய அறிக்கை இந்த மாதம் கையளிக்கப்படவுள்ளது.இந்த அறிக்கை பகிரங்கப்படுத்தப்பட வேண்டுமெனவும் அத்தோடு ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கும், ஐ.நா. பாதுகாப்புசபைக்கும் அனுப்பப்பட வேண்டும் என்று நாம் கோரவுள்ளோம்.

அண்மையில் லிபியாவுக்கு எதிராக இந்த இரு சபைகளும் எடுத்த நடவடிக்கைகள் இலங்கைக்கு என்ன நடக்கப்போகிறது என்பதைக் கோடிட்டுக் காட்டியுள்ளது. 60ஆயிரம் தமிழ்ப் பொதுமக்களை கொன்ற குற்றத்திலிருந்து இலங்கை தப்பமுடியாது.

**கேள்வி :-** வடக்கு கிழக்கை அபிவிருத்தி செய்யவும், சாதாரண நிலையை உருவாக்கவும் புலம்பெயர்ந்த தமிழர்களது ஆதரவினை வரவேற்பதாக இலங்கை அரசு அறிவித்துள்ளது. இவ்வாறான ஆதரவு தமக்குக் கிடைக்கும் என்று இலங்கை அரசு உறுதியாக நம்புவதாகவும் அரச பேச்சாளர் கெகலிய ரம்புக்வெல எமது பத்திரிகைக்கு தெரிவித்துள்ளார். ஆனால், புலம்பெயர்ந்த தமிழர்கள் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு அங்கு போதிய சுதந்திரம் இல்லை என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. இது பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன? புலம்பெயர்ந்த தமிழர்களின் தலைவர்கள் இலங்கைக்கு வருவதற்கும் இவ்வாறான ஆதரவை வழங்கவும் தயாராக உள்ளனரா?

**பதில் :-** வடக்கு கிழக்கில் இன்று சாதாரணநிலை இல்லை. இராணுவ ஆக்கிரமிப்புக்கு மத்தியில் மக்கள் பீதியுடன் வாழ்கின்றனர். கொலை, சித்திரவதை, பாலியல் வல்லுறவு, வன்முறை மூலம் காணாமல் போகச் செய்தல், வன்முறை மூலமான

## இராணுவ ஆக்கிரமிப்பின் மத்தியில் அபிவிருத்தி இடம்பெற முடியாது

விபச்சாரம் ஆகியவை எங்கும் பரந்துள்ளன. இலங்கை அரசு போரில் வெற்றிபெற்றுவிட்டதாக சொல்லிக்கொள்ளும் அதேவேளை இராணுவ ஆக்கிரமிப்பு நிலைத்திருக்கிறது. மியன்மார் (பர்மா), பாகிஸ்தான், மத்திய கிழக்கு நாடுகள் போல, இலங்கையிலும் இராணுவம் வணிகச் செயற்பாடுகளில் இறங்கியுள்ளது. நிரந்தரமாக வடக்கு கிழக்கை இராணுவ ஆக்கிரமிப்பில் வைத்திருக்கும் நோக்கத்தை இலங்கை கொண்டிருப்பதை இவை போதுமான அளவில் உறுதிப்படுத்துகின்றன. இராணுவ ஆக்கிரமிப்பின் மத்தியில் அபிவிருத்தி இடம்பெற முடியும் என நாம் நம்பவில்லை. மேலும் அபிவிருத்தி என்ற பெயரில் இலங்கை உண்மையில் தமிழர் நிலங்களில் சிங்களக் குடியேற்ற ஆக்கிரமிப்பிலேயே இறங்கியுள்ளது.

இலங்கை அரசு அபிவிருத்தி பற்றி பேசுகின்ற அதேவேளை அதன் நடவடிக்கைகள் வேறுவிதமானவையாக இருக்கின்றன. வடக்கு கிழக்குப் பகுதிகளுக்கு செல்லும் நிதியுதவிகளையும் எல்லா நிறுவனங்களையும் இலங்கை மிகவும் கடுமையாக கட்டுப்படுத்தி வருகிறது. நிறுவனங்கள் தாம் முதன்மைப்படுத்தும் செயற்திட்டங்களில் பணத்தை செலவிடுவது தடுக்கப்பட்டு, இலங்கை அரசு முதன்மைப்படுத்தும் திட்டங்களுக்கு பணம் திசை திருப்பப்படுவதனால் அது பாதகமாக இருக்கிறது.

இலங்கை அரசில் காணப்படும் மோசமான ஊழலும் இன்னுமொரு பிரச்சினையாக இருக்கிறது. ஊழல்களற்ற நிறுவனங்கள் 10 புள்ளிகள் பெறும் ரான்ஸ்பரன்சி இன்ரநசனலின் அளவுகோலில் இலங்கை 3.2 புள்ளிகளை பெற்று மிகவும் கீழான நிலையில் இருக்கிறது. இலங்கைக்குக் கிடைக்கும் பெருமளவிலான நிதியுதவி தேவையான மக்களுக்கு போய்ச் சேருவதில்லை. இவற்றிற்கு மேலாக, முடிபுகள் எடுக்கும் உரிமைகள் இல்லாத, அரசியல் சுதந்திரம் அற்ற நிலையில் அபிவிருத்தி இடம்பெற முடியாது என்பதை நாம் குறிப்பிட விரும்புகிறோம்.

நோபல் பரிசு பெற்ற அமர்த்தியா சென் அவர்கள் குறிப்பிட்டது போல விடுதலை என்பது அபிவிருத்திக்கான முக்கியமான பாதையாகவும் அதனது முதன்மையான விளைவாகவும் இருக்கின்றது. ஆகவே எந்தவிதமான அர்த்தமுள்ள அபிவிருத்திக்கும், முதலில் இராணுவம் அகற்றப்பட்டு, பங்குபற்றுபவர்கள் சுயமாக முடிபெடுக்கும் அதிகாரத்தைக் கொண்டிருக்க வேண்டும்.

**கேள்வி :-** இலங்கையில் உள்ள தமிழ் மக்களுக்கு புலம்பெயர்ந்த தமிழரின் முயற்சிகள் எவ்வாறு பயனளிக்கும்?

**பதில் :-** நான் முன்னர் தெரிவித்தது போல, புலம்பெயர்ந்த தமிழர்கள் ஈழத் தமிழ்த் தேசத்தின் பிரிக்கமுடியாத அங்கமாக அமைகின்றனர். இலங்கைத் தீவில் வாழும் தமிழரும், வெளியே வாழ்பவர்களும் ஒன்றே. இலங்கைத் தீவில் வாழும் தமிழர்கள் தமது அரசியல் அபிலாஷைகளை முழுமையாக வெளிப்படுத்துவதற்



கான அரசியல்வெளி அவர்களுக்கு மறுக்கப்படும்வரை, உலகெங்கும் உள்ள ஜனநாயக நாடுகளில் வாழும் புலம்பெயர்ந்தவர்கள் அச்செயற்பாட்டினைப் பொறுப்பெடுக்க வேண்டியிருக்கிறது.

எமது தாயகத்தில் வாழும் மக்களும் அவர்களது அரசியல் தலைவர்களும் தாம் உயிர்வாழ்வதற்கான அடிப்படை உரிமை முதல், தமது சமூக, பொருளாதார நலனுக்காகவும், தமது வதிவிடத்துக்கான இயல்பான உரிமைக்காகவும், தமிழர் பிரதேசத்தைப் பாதுகாக்கவும், அன்றாடம் போராட வேண்டியிருக்கிறது.


எமது தேசத்தின் இருப்புக்காகவும், அதன் அடிப்படைப் பாதுகாப்புக்காகவும் இப் போராட்டங்கள் அத்தியாவசியமானவையாக இருக்கின்றன. மேலும், கிடைக்கும் ஒவ்வொரு சிறிய இடைவெளியிலும் இவை வெளிப்படுத்தப்பட வேண்டியுள்ளது. சர்வதேச மட்டத்திலான எமது முயற்சிகளின் விளைவாக இலங்கைத் தீவிலும் அரசியற்களம் விரிவடையும் என்பது எமது நம்பிக்கையாகும்.

எமக்கென சுதந்திரமான தனியரசை அமைத்துக் கொள்வதற்கான இலங்கை தீவுக்குள்ளும் வெளியிலுமான எமது போராட்டம் ஒத்தியங்கும் நாள் வெகு தொலைவில் இல்லை என்பது எமது நம்பிக்கையாகும்.

# காசநோய் சமூக அணுகுமுறை

26

## காசநோய்க்கான விழிப்புணர்வு



Dr,சி.யமுனானந்தா, MBBS,DTCD
மாவட்ட காசநோய்க் கட்டுப்பாட்டு அதிகாரி,
மார்புநோய் சிகிச்சை நிலையம்,
பண்ணை,யாழ்ப்பாணம்.

15.தற்போது காசநோய் தொடர்பான சமூகப்பார்வை பயநிலையில் இருந்து நீங்கியுள்ளது. ஆனால் சிலரிடம் காசநோயினால் பாதிக்கப்பட்டவர்கள் தீண்டத்தகாதவர் என்ற எண்ணம் உள்ளது. இது ஒரு மடமையாகும். சிலரிடம் நீண்டநாட்கள் இருமல் இருந்தாலும் வெளியில் காட்ட பயம்,வெட்கம் இருக்கிறது. ஏனெனில் அது காசநோயாக இருக்குமோ என்று. ஆனால் அத்தகையவர்கள் பயப்படாது சளிப்பரிசோதனைக்கு முன்வரல் வேண்டும்.

16.காசநோயாளிகளில் பெரும்பாலானோர் ஏழைகளாக இருப்பதனால் அவர்களுக்கு உரிய ஊக்குவிப்பு பணம் அல்லது சமூக உதவி அதிகரிக்கப்பட வேண்டும்

17.சிலர் மருந்துகளின் ஒவ்வாத்தன்மையினால் மருந்துகளை எடுப்பதனை விரும்புவதில்லை.அவ்வாறான நிலை காணப்படின் வைத்தியரின் ஆலோசனையுடன் மாற்று மருந்துகளை எடுத்தல் வேண்டும்.

18.ஒருவர் மருந்துகளை எடுக்காது விட்டால் அவர் வாழும் சூழலில் உள்ள குழந்தைகள் அதிகம் பாதிக்கப்படும். ஏனெனில் அந்நோயாளியால் அதிக அளவு கிருமிகள் சூழலுக்கு பரப்பப்படும். இதனால் 5வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு கட்டாயம் BCG போடப்பட்டுள்ள்தா என அவதானிக்க வேண்டும். INAH என்ற தடுப்பு மருந்தும் அளிக்க வேண்டும்.

19.காசநோய் தொடர்பாக புதுமையான விழிப்புணர்வு சமூகத்திற்குத் தேவை. இது 2010 ஆம் ஆண்டு உலக காசநோய் தினத்தின் தொனிப்பொருளிலும் அடங்கியுள்ளது.

20. பல நோயாளிகளைக் கட்டாயப்படுத்தியே மருந்து எடுக்க செய்ய வேண்டியுள்ளது. அவர்களிடம் மருந்து எடுக்கத் தயக்கம் காணப்படுகின்றது. மேலும் அவர்களுடன் உள்ள குடும்ப உறவுகளை பரிசோதனைக்கு அழைத்து வருவதற்கும் தயக்கம் காணப்படுகின்றது. எனவே இதனை அனைவரும் மாற்ற நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

21. காசநோய் மருந்துகளை எடுக்கும் போது உணவில் விருப்பம் குறையலாம். இதன்போது சிறிய சிறிய அளவில் பல தடவைகள் உணவினை உண்ணலாம்.

22. காசநோய் அறிகுறிகள் பற்றிய அறிவு இருந்தும் எங்கே, எப்படி அணுகுவது என்று தெரியாது பலர் உள்ளனர். உண்மையில் அவர்கள் அரச வைத்தியசாலைக்குச் சென்று அங்குள்ள வைத்தியரிடம் தனது அறிகுறிகளைக் கூறி, காசநோய் இல்லை என்பதையோ உண்டு என்பதையோ உறுதிப்படுத்த உதவுமாறு கோரலாம். காசநோய்க்கான சிகிச்சை முற்றிலும் இலவசம் என்பதனையும் கூறலாம்.

23. காசநோய் இருப்பதற்கான அறிகுறிகள் மக்களுக்கு தெரியாது, தெரிந்தாலும் காசநோய் அறிகுறிகள் பற்றி மக்கள் கூறுவது குறைவு. சகல வைத்திய நிலையங்களிலும் காசநோய் வந்ததென ஏற்றுக் கொள்ளும் தன்மை அல்லது கருதும் தன்மை குறைவாக உள்ளது. எனவே காசநோய் அறிகுறியுடன் நோயாளிகள் வந்தால் சளிப் பரிசோதனை செய்வதற்குரிய வசதிகள் செய்யப்படல் வேண்டும்.

24.யோகப்பில் (வாய் அகலமானது) சளியினை எடுப்பதால் போதிய அளவு சளியினை இலகுவாகச் சேகரிக்கலாம். சளிப் பரிசோதனையை எங்கே செய்யலாம் எனப் பொதுமக்களுக்கு விளக்கலாம். நோயை இனம் காண நாளெடுப்பதால் மற்றவர்களில் நோய் பரவும் சந்தர்ப்பம் அதிகரிக்கும்.

25.பாடசாலை, வேலை செய்யும் இடங்கள்,சிகிச்சை நிலையங்கள் என்பவற்றில் காசநோய் தொடர்பான கிரமமான விழிப்புணர்வு அவசியம்.

26.சமூகத்தில் வயது முதிர்ந்தவர்கள் இளவயதினில் விசேட கவனம் எடுத்தல் வேண்டும். பலருக்கு காசநோய் தொடர்பாக வைத்திய ஆலோசனை பெற நேரம் ஒரு தடையாக உள்ளது. ஏனெனில் மார்பு நோய் சிகிச்சை நிலையம் வேலை நோக்கில் மட்டுமே தொழிற்படுகின்றது. எனவே சிறந்த நேர முகாமைத்துவம் மூலம் தமது நோய் அறிகுறிகளினூடு வைத்திய ஆலோசனை பெறல் அவசியம். மற்றும் தொழில் வழங்குநர்களும் இதற்கான வசேட விடுமுறையினை வழங்கல் வேண்டும்.

27.வைத்தியசாலையில் காசநோயாளிகளை ஒதுக்குப் புறத்தில் வைத்திருத்தல், அவர்களுக்கு வாய் கவசம் கட்டுதல் என்பன நோயாளியினை புறக்கணிக்கும் செயல்களே. காசநோயாளி என சளிப் பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டால் அவர்களுக்கு உடனடியாகவே மருந்தினைக் கொடுத்தால் 85%கிருமிகள் உடனடியாக அழிந்துவிடும். ஏனைய கிருமிகளும் 2 கிழமைகளில் அழிந்துவிடும். பெரும்பாலும் நோய் அடையாளம் காணப்பட்ட பின் தொற்றும் சந்தர்ப்பம் குறைவு. அடையாளம் காணப்படுவதற்கு முன்னரே தொற்றும் சந்தர்ப்பம் அதிகம்.எனவே,மேற்கூறிய செயல்களால் பொதுமக்கள் தமக்கு காசநோய் உண்டென பரிசோதிக்க வரமாட்டார்கள் .இதுகாசநோய் கட்டுப்பாட்டில் பாரிய பின்னடைவைத்தரும்.

28.சில வர்த்தகவிளம்பரங்கள் தொடர்சியான இருமல்,காய்ச்சல் இருந்தால் தங்களது இயற்கை மருந்துகளால் குணப்படுத்தலாம் எனக் கூறுகின்றன. இதுவும் மக்களிடையே தவறான கருத்தினை நிலைக்க வைத்து காசநோய் அறிகுறிகள் காணப்படுமிடத்து சளிப் பரிசோதனைக்கு வருதலைத் தடுக்கிறது. இத்தகைய தப்பான விளம்பரங்களைத் தவிர்த்தல் நல்லது.

29.சமூகத்தில் யாராவது காசநோய் அறிகுறியுடையவர்களை மார்புநோய் சிகிச்சை நிலையத்திற்கு கூட்டி வரலாம் அல்லது வழிகாட்டலாம். சமூகத்தில் சகலமட்டத்தினரது பங்களிப்பினையும் எடுத்தல் வேண்டும்.

**காசநோயினை கண்டுபிடிப்பதில் உள்ள பிரச்சினைகள்.**

1. நோயாளிகளுக்கு போதிய விளக்கங்கள் இல்லை.
2. நோயாளிகளால் தமக்கு காசநோய் வந்துள்ளதை ஏற்றுக்கொள்ள முடியாமை.
3. சமூகத்தில் தனிமைப்படுத்தப்படு வோம் என்ற பயம்.

போதிய போசாக்கு இன்மை காசநோய் ஏற்படக் காரணமாக அமையலாம்.

30. அதிக வசதி படைத்தவர்களும் கௌரவம் காரணமாக சளிப்பரிசோதனைக்கு வருவதில்லை. (தொடரும்)

# சார்க் நாடுகளின் பொலிஸ்மாஅதிபர்கள் கலந்து கொள்ளும் மாநாடு கொழும்பில்

சார்க் நாடுகளைச் சேர்ந்த பொலிஸ் மா அதிபர்கள் கொழும்பில் மாநாடு ஒன்றை நடத்தவுள்ளனர்.

இன்றும் நாளையும் நடைபெறும் இந்த மாநாட்டில் ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ்,பூட்டான்,மாலைதீவு, நேபாளம், இந்தியா, பாகிஸ்தான் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளின் பொலிஸ் மா அதிபர்கள் கலந்து கொள்கின்றனர்.

இந்த மாநாட்டில் சார்க் நாடுகளில் இடம் பெறும் குற்றச் செயல்களை சிறந்த முறையில் கட்டுப்படுத்துவது குறித்து விரிவாக ஆராயப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

குற்றச் செயல்களை கட்டுப்படுத்துவது குறித்தும் சார்க் நாடுகளுக்கு இடையே ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது குறித்தும் இந்த மாநாட்டில் ஆராயப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சார்க் நாடுகளின் உட்துறை அமைச்சர்கள் கூடி தமது பிராந்திய பாதுகாப்புக் குறித்து ஆராய்வதற்கான மாநாட்டின் முன்னோடி மாநாடாக பொலிஸ் மாஅதிபர்கள் ஒன்று கூடுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.


இதேவேளை சார்க் நாடுகளின் பொலிஸ் மாஅதிபர்கள் கலந்துகொள்ளும் ஒன்பதாவது மாநாடு இதுவென்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# இலவச புத்தகப் பொதி வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யா/புன்னாலைக்கட்டுவன் மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் 31 வறிய மாணவர்களுக்கு இலவச புத்தகப் பொதிகள் வழங்கும் நிகழ்வு இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இப்புத்தகப் பொதிகளை தொண்டைமானாறு செல்வச் சந்நிதியான் ஆச்சிரமம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)





தந்தை செல்வாவின் 113 ஆவது ஜெனன தின நிகழ்வு அண்மையில் வவுனியாவில் நடைபெற்றது. இந்நிகழ்வில் இலங்கை தமிழரசுக்கட்சியின் வவுனியா மாவட்ட கிளைத்தலைவர் டேவிற் நாகநாதன் அன்னாரின் உருவச்சிலைக்கு மலர்மாலை அணிவிப்பதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம்.




யாழ்/செங்குந்த இந்துக்கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர்போட்டி அண்மையில் அதிபர் இ.பாலகுமார் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர் பா.ஸ்ரீபவன் ,சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்ட யாழ்.பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளை முகாமை யாளர் ஆ.சத்தியமூர்த்தி, பழைய மாணவன் லயன் வ.பரம சிவம், கௌரவ விருந்தினரான கியூடெக் கரித்தாஸ் நிறுவன யாழ். கிளை இயக்குநர் வண.பிதா பேணாட் றெக்னோ ஆகியோர் அழைத்து வரப்படுவதையும், அதிபர் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

# இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் விடயத்தில் அரசாங்கம் தீர்மானமொன்றிற்கு வரவேண்டும்

## ரணில் வலியுறுத்து



இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் விடயத்தில் அரசாங்கம் தீர்மானமொன்றிற்கு வரவேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.

யுத்தம்முடிவடைந்துள்ளநிலையில்இதனை மேலும் இழுத்தடிக்க முடியாதெனக் கூறியுள்ளார். உள்ளூராட்சித் தேர்தலில் பசறை பிரதேச சபையை ஐ.தே.க. கைப்பற்றியுள்ளது.

அச்சபை உறுப்பினர்களின் சத்தியப்பிரமாண பதவியேற்பு நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றபோதே அந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய ரணில் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

ஐ.தே.க. மறுசீரமைக்கப்பட்டு கட்சிக்குள் ஒற்றுமை ஏற்பட்டுள்ளது. உறுப்பினர்களைப் பலப்படுத்தி கட்சியை பழைய நிலைக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இன்றைய வாழ்க்கைச் செலவு அதிகரிப்புக்கு ஏற்ப தொழிலாளர்களுக்கு சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும். எதிர்வரும் ஜூன் மாதத்திற்கு முன் அரசாங்கம் இதனைச் செய்யாவிடின் நாம் அடுத்தகட்ட நடவடிக்கைக்கு ஐ.தே.க. செல்லும்.

எரிபொருள், எரிவாயுவினது விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிக்கு முன் அரசாங்கம் இதனைச் செய்துள்ளது. இதன் தாக்கத்தை மக்கள் உணர்வர். பொருட்களின் விலைகள் மேலும் அதிகரிக்கப் போகின்றது. இதுகுறித்து அரசுக்குக் கவலையில்லை. கிரிக்கெட் போட்டியைப் பார்ப்பதற்கு ஜனாதிபதியும் அமைச்சர்களும் சென்றுள்ளனர். மக்களின் கவனத்தைத் திசை திருப்ப அரசாங்கம் முயற்சிக்கிறது. அபிவிருத்தி என்ற பெயரில் கடன் பெறப்படுகிறது. இதன் சுமையை மக்களே சுமக்கப்போகின்றனர்.

இனப்பிரச்சினை குறித்து அரசு அக்கறையின்றி உள்ளது. யுத்தம் முடிவடைந்த நிலையில் அப்பகுதி மக்கள் நெருக்கடியான நிலையில் உள்ளனர். தீர்வுகாண வேண்டுமென முதலில் சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவை அரசு உருவாக்கியது. அக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்தவில்லை. இது தொடர்பாக இழுத்தடிக்கும் நிலையே காணப்படுகிறது என்றும் ரணில் விக்ரமசிங்க சுட்டிக்காட்டினார். (ஸ்ரீ-2)

# எத்தகைய சவாலாயினும் எதிர்கொண்டு முன்னேறுவோம்

## ஐ.தே.க. பொதுச் செயலர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி சவால்களை எதிர் கொண்டாலும் முன்னோக்கிச் செல்லக்கூடிய அரசியல் கட்சி என கட்சியின் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

பாத்ததும்பர பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் பங்கேற்று உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் புத்தாண்டுக்குப் பின் புதிய மத்திய செயற்குழுவொன்றையும் ஆலோசனைக்குழுவொன்றையும் ஸ்தாபிக்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை நாட்டின் முன்னோக்கிய செயற்பாடுகளுக்கு பயனளிக்கக்கூடிய எந்தவொரு திட்டங்களும் ஐக்கிய தேசியக் கட்சியிடம் இல்லை என அரசாங்கம் தெரிவித்துள்ளது. களுத்துறைப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய துறைமுக மற்றும் பெருந்தெருக்கள் பிரதியமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை ஓகஸ்ட் 21 இல் நடைபெறும்

## பரீட்சைத் திணைக்களம் அறிவிப்பு

(கொழும்பு)

ஐந்தாம் தரத்திற்கான புலமைப்பரிசில் பரீட்சைக்கான திகதி பரீட்சைகள் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 21 ஆம் திகதியில் நாடளாவிய ரீதியில் ஐந்தாம் ஆண்டுக்கான புலமைப்பரிசில் பரீட்சை நடத்தப்படவுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அநுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

இதற்கான முதற்கட்ட நடவடிக்கையாக அனைத்து பாடசாலைகளிலும் இந்தப் பரீட்சைக்கு தோற்றத் தகுதி பெற்றுள்ள மாணவர்களுக்கான அனுமதிப் படிவங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இம்முறை ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான பெரும்பாலும் பாடசாலை அதிபர்கள் அதற்கான அனுமதி படிவங்களுக்கான விண்ணப்பங்களை விரைவில் கிடைக்கக் கூடிய வகையில் அனுப்பி வைத்திருந்ததாக அவர் கூறியுள்ளார்.

இதேவேளை ஐந்தாம் தரத்திற்கான புலமைப்பரிசில் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் ஏற்கும் திகதி நாளையுடன் நிறைவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# அரசு நிறுவன பிரதிநிதிகளுக்கான கருத்தரங்கு வவுனியாவில்

(கொழும்பு)

அரச கரும மொழிகள் அமைச்சு, ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்டத்துடன் இணைந்து அரசாங்க நிறுவன பிரதிநிதிகளுக்கான கருத்தரங்கொன்றினை எதிர்வரும் 6 ஆம் திகதி வவுனியா பிரதேச சபை மண்டபத்தில் நடத்தவுள்ளதாக அறிவித்துள்ளது.

அமைச்சின் உயர் அதிகாரிகள் மற்றும் குடிவரவு-குடியகல்வு அதிகாரிகள் கலந்து கொள்ளும் இந்த கருத்தரங்கானது எதிர்வரும் வாரங்களில் வவுனியா பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இடம்பெறவுள்ளது.

அரசகரும மொழிகள் அமைச்சின் அதே இடத்தில் சேவை என்ற தொனிப்பொருளிலான நடமாடும் சேவைக்கான கருத்தரங்காக இது இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இந்நிலையில் எதிர்வரும் வாரங்களில் இடம்பெறவுள்ள நடமாடும் சேவையில் பிற ப்பு, இறப்பு, திருமண பதிவுகளை மக்கள் பெற்றுக்கொள்ள கூடியதாக இருக்குமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இந்தியாவில் பிறந்த குழந் தைகளுக்கு பிரஜாவுரிமை பெறல் மற்றும் அவர்களுக்கு பிறப்பு சான்றிதழ்பெறும் சேவைகளும் இடம்பெறுமெனவும் நடமாடும் சேவையின் திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் பிரதேச செயலகம் அறிவித்துள்ளது.

(ஸ்ரீ-2)


அன்பான வாடிக்கையாளர்களே!



நாதன்'ஸ்




ஆயுர்வேத மருந்துக்கடை

ஆயுர்வேத மருந்துச்சரக்குகள், ஆலய அபிஷேகப்பொருட்கள், சகலவிதமான கிரியைப்பொருட்கள், பிள்ளைப்பேற்று நாள்சரக்குகள், ஆலய தீபாராதனைப் பொருட்கள், குழந்தைகளுக்கான **கிரந்திஎண்ணெய்** மற்றும் சகலவிதமான எண்ணெய் வகைகளும் பெற்றுக் கொள்ளலாம்.

டிப்போ சந்தி அருகாமை,
கனகபுரம் வீதி, கிளிநொச்சி.

(சி-2866)

ஆலடிச் சந்தி,
மானிப்பாய்.

# ஏன் ஆனந்தமாக இல்லை?

**இடையறாத பயணம்**

உங்களுடைய அனுபவங்களுக்கு ஆதாரமாக இருப்பது நீங்கள்தான். நம்மை அறியாமலேயே, விழிப்புணர்வு இல்லாமலேயே நாம் செய்தவற்றைப் பற்றிக் குறிப்பிடுவதற்காக, நாம் கண்டுபிடித்த சொல்தான் 'விதி' அல்லது 'ஊழ்வினை' என்பது. விதி என்பது எங்கிருந்தோ உங்கள் மீது விழுந்ததல்ல; வேறு எவராலோ எழுதப்பட்டதும் அல்ல. நீங்கள் செய்யும் செயல்கள் மற்றும் நீங்கள் உள்வாங்கிக் கொண்ட பதிவுகள் ஆகிய இவை மொத்தமும் சேர்த்துத்தான் விதி என்று அழைக்கப்படுகிறது.

உங்களுக்குள் பல பதிவுகள் உள்ளன. ஐந்து புலன்களின் மூலம் நீங்கள் பெற்ற பதிவுகளின் சிக்கலான கலவையானது நாளடைவில் சிறுகச்சிறுக ஒருவித சுபாவத்தை உங்களிடம் ஏற்படுத்துகின்றது. இந்த மனோபாவம் உங்களை ஒரு குறிப்பிட்ட திக்கில், சில குறிப்பிட்ட விடயங்களை நோக்கித்தள்ளுகிறது.

இடையில் நீங்கள் வேறு ஒரு வழியில் போகநினைத்தாற்கூட அது உங்களை அனுமதிக்காது. அதன் வழியில் உங்களை அழைத்துச் செல்லப்பார்க்கும். இது நீங்கள் ஒரு பேருந்தினுள் ஏறி பின்னர், பேருந்து செல்லும் வழியில் உங்கள் கவனத்தை கவரும் வகையில் சில நிகழ்ச்சிகள் நடப்பது போன்றதாகும். பேருந்துக்கு வெளியே நடப்பவைகளை நீங்கள் நின்றுபார்க்க முயன்றாலும், பேருந்து போய்க்கொண்டே இருக்கும்.

அங்குநடக்கும் நிகழ்ச்சிகளை நீங்கள் சென்று காணவேண்டுமென்று இப்போது விரும்பினாலும் சாத்தியப்படாது. அந்த இடத்தைத் தாண்டி பேருந்து சென்றுகொண்டிருப்பதால் நீங்கள் செய்வதறியாது காணப்படுவீர்கள். பேருந்துக்குள் சென்றது நீங்களே என்பதை உணராமல் உங்களை நீங்களே வருத்திக் கொண்டு அழுது கூச்சலிடுகிறீர்கள்.

அநேகமாக ஓடும் நதி ஒன்றின் மீது மிதப்பது என்பதையொட்டி உதாரணம் சொன்னால் நீங்கள் நன்றாகப் புரிந்து கொள்ளக்கூடும். நீங்கள் நதியில் இறங்கிவிட்டீர்கள்; நதி உங்களை அதன்போக்கில் அப்படியே இழுத்துக்கொண்டு செல்கிறது என்று வைத்துக்கொள்வோம். அதன் சுபாவத்தின்படி அது போய்க் கொண்டே இருக்கிறது.

இது போலத்தான் உங்கள் சுபாவங்களும். இந்த சுபாவங்கள் உங்களால் உருவாக்கப்பட்டவையல்ல. ஆனால் நீங்கள் செய்த செயல்கள் மற்றும் உள்வாங்கிக்கொண்ட பதிவுகள் மொத்தமும் சேர்த்துத்தான் இந்த சுபாவத்தை உருவாக்கி இருக்கின்றன. இந்த சுபாவம் உருவாக்கிய சேகரிப்புத்தான் நீங்கள்.

சுத்தமாக விழிப்புணர்வே இல்லாமல் இவை அனைத்தையும் நீங்கள் சேகரித்தால், எங்கிருந்தோ ஏதோ உங்கள் மீது வந்து விழுவது போல எல்லாம் தோற்றமளிக்கின்றன. ஏனென்றால், வாழ்வின் தன்மை இப்படித்தான் உள்ளது. எது உங்கள் கவனத்துக்கு வரவில்லையோ, எது உங்கள் அனுபவத்தில் இல்லையோ... அது உங்களைப் பொறுத்தவரை 'இல்லை' தான். அது எவ்வளவு பெரிய சக்தியாக இருந்தாலும்சரி.. நீங்கள் இப்போது இங்கே அமர்ந்திருக்கிறீர்கள். ஆனால், இங்கே இருக்கும் இந்தப்பெரிய மலையைப் பற்றி உங்களுக்குக் கவனம் இல்லை. மலையைப்பற்றிய கவனம் , அல்லது விழிப்புணர்வு உங்களிடம் இல்லை என்கிறபோது, உங்களைப் பொறுத்தவரை அப்படி ஒரு மலை இங்கு இல்லை.

**நூறுசதவீத அகங்காரம்**


உங்களின் மோசமான குணங்களை அகங்காரம் என்று நீங்கள் அடையாளப்படுத்துகிறீர்கள். உங்களுக்குள் மறைந்துள்ள மற்றும் ஒரு அங்கம்தான் 'அகங்காரம்' என்று சொல்கிறீர்கள் ஆனால் இது உண்மையல்ல. மோசமாக நடந்து கொள்வது நீங்கள் தான்; உங்களது அகங்காரம் அல்ல முன்பு நீங்கள் அடிக்கடி மோசமாக மாறியிருக்கிறீர்கள்; ஆனால் இப் பொழுது நீங்கள் மோசமாகமாறுவது மிகவும் அரிதாக நடக்கிறது.

நீங்கள் மோசமாக மாறுவது ஏன் குறைந்துள்ளது என்று யோசித்துப் பாருங்கள்... உங்களது வாழ்வில் நடைபெற்ற பல்வேறு விடயங்களுக்கு இவை, இவை மற்றும் இவைதான் காரணம் என நினைத்துக் கொண்டிருந்தவற்றை எல்லாம் நீங்களே கைவிட்டிருக்கவேண்டும்; அல்லது ஏதாவது ஒரு வழியில் அவை காரணமாக இல் லாமல் போயிருக்க வேண்டும். உண்மையான காரணம் நீங்கள்தான் என்பதைப் புரிந்து கொள்ளத் தொடங்கியிருக்கிறீர்கள், ஆனால் இன்னும் இதை நீங்கள் நூறு சதவீதம் உணரவில்லை. "எல்லாவற்றிற்கும் நான் தான், நான் மட்டும் தான் காரணம். எனது அகங்காரமோ, எனது பெற்றோரோ, எனது கலாசாரமோ, எனது செல்வாக்கோ, எனது இதுவோ அல்லது அதுவோ எதுவுமே காரணமல்ல. நான்,நான்,நான் மட்டுமே காரணம்" என நூறுசதவீதம் முழுமையாகப் பார்க்கத்தொடங்கிய அடுத்தகணமே, உங்களது மோசமான குணம் மறைந்துவிடும்.

உங்களால் இதை அனுபவிக்க இயலவில்லை என்றால், இதை உங்களை அனுபவிக்கவிடாமல் தடுப்பது யார் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். உங்களது துக்கத்திற்கும், ஆனந்தத் திற்கும் மூலகாரணம் நீங்களே; வேறுயாருமல்ல, நிச்சயமாக வேறு யாருமல்ல, உங்களைத் தவிர வேறு எதுவும் காரணமல்ல என்கிற உணர்வை உங்களுக்குள் நீங்கள் ஆழமாக ஊடுருவச் செய்ய வேண்டும்.

இதை நீங்கள் புரிந்து கொண்டால், அனுபவித்துப் புரிந்து கொண்டால்,மோசமனது என்று எதுவுமே அதன்பின்னர் இருக்காது. எக்காரணத்தைக் கொண்டும் நீங்கள் மோசமாக நடந்துகொள்ள உங்களது புத்திசாலித்தனம் உங்களை அனுமதிக்காது. ஏனென்றால், எல்லாமே நீங்கள்தான் என்பது இப்போது உங்களுக்குத் தெரியும். வேறுயாரோ ஒருவர் காரணம் என்று நீங்கள் நினைத்தால்தானே உங்களால் மோசமாக நடந்துகொள்ள முடியும்... அப்படித்தானே?

உங்களது மோசமான குணத்திற்கு, அகங்காரம் போன்று குழப்பமான வேறு அடையாளங்களைக் காரணம் காட்டாதீர்கள். அப்படி எதுவுமே கிடையாது. நீங்கள்தான்.. நீங்கள் மட்டும்தான் காரணம்! உங்களால் எப்படி இனிமையாக நடந்து கொள்ளமுடியுமோ அதுபோலவே உங்களால் மோசமாகவும் நடந்து கொள்ளமுடியும். வழியெங்கிலும் நீங்கள்தான்...



**ஆன்மீகம் 14**

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

# ஈழத்தில் சிறுவர் இலக்கியம்-ஒரு நோக்கு

**05**

"குண்டிடுக்கி குடுகிடுக்கிக் கூடை
கையில்ஏந்தி
குனிந்து நின்று பழம்பொறுக்கும்
குறத்தியடி அம்மே.."

"நந்தவனத்திலோர் ஆண்டி- அவன்
நாலாறுமாதமாய்க் குயவனை
வேண்டி கொண்டுவந்தான் ஒரு
தோண்டி- அதைக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்
தாண்டி..."

"பச்சைமலை பவளமலை எங்கள்
மலை அம்மே.."

இத்தகைய பாடல்களே பாடசாலைகளில் அபிநயப்பாடல்களாகக் கற்பிக்கப்பட்டன. இந்த நிலையினை மாற்றி குழந்தைகளுக்கும் சிறுவர்களுக்கும் அவர்களது வயது, அறிவு, அனுபவம், ஆர்வம், விருப்பு, சூழல் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டார். அருணந்தி அவரது கருத்துக்கமைய ஆசிரியர்களிடையே குழந்தைப் பாடற் போட்டி ஒன்றினை நடத்த வட இலங்கைத் தமிழாசிரியர் சங்கம் முன்வந்தது.

இப்போட்டி இரு பிரிவாக நடைபெற்றது. பிரிவு ஒன்று குழந்தைப் பாடற் போட்டியாகவும் பிரிவு இரண்டு சிறுவர் பாடற் போட்டியாகவும் அமைந்தது. இப்போட்டிக்கு நாவலர்களாக சுவாமி விபுலானந்தர், சுவாமி ஞானப்பிரகாசர், பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை முதலானோர் பணியாற்றினர். போட்டியின் இறுதியில் முதலாம் பிரிவில் மா.பீதாம்பரம்,சி.அகிலேசசர்மா, க.சோமசுந்தரப்புலவர் ஆகியோர் முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றனர். பிரிவு இரண்டிற்கான (சிறுவர்பாடல்) போட்டியில் க.சோமசுந்தரப்புலவர், மா. பீதாம்பரம், எஸ். தங்கசாமி ஆகியோர் முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றனர். இவர்களுடன் மேலும் எட்டுப்பேரதும்

**"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"**

பாடல்கள் ஒன்று திரட்டப்பட்டு பிள்ளைப்பாட்டு என்னும் பெயரில் 74 பாடல்கள் கொண்டதாக 1935இல் இலங்கையிலும் தமிழகத்திலும் வியந்துரைக்கப்பெற்ற சிறுவர் பாடற்றொகுப்பாக இது வெளிவந்தது. இத்தொகுப்புநூலின் மூலம் ஈழத்துக் கலைஞர்களின் கவித்துவச் சக்தியை தமிழ் கூறும் நல்லுலகு நன்கறிந்து கொள்ள முடிந்தது. இந்த அரிய சாதனையை குழந்தைஇலக்கிய கர்த்தாவான முனைவர் பூவண்ணன் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன்னரே இலங்கை எண்ணற்ற குழந்தைக் கவிஞர்களை ஈன்றெடுத்தது. அந்தக்கவிஞர்களின் குழந்தைப் பாடல்களை அப்போதே ஒன்று திரட்டி கே.எஸ். அருள்நந்தி என்பவர் பிள்ளைப்பாட்டு என்ற பெயரில் வெளியிட்டார். குழந்தை இலக்கியம் கொடிகட்டிப்பறக்கும் நம் நாட்டில் 1970இல் தான் அப்பபடிப்பட்ட குழந்தைக் கவிதைத் தொகுதி வெளிவந்துள்ளது.

பிள்ளைப்பாட்டு வெளிவந்த காலத்தில் சிறந்த குழந்தைப்பாட்டுக் கவிஞர்களாக க.சோமசுந்தரப்புலவர், மா.பீதாம்பரம், சி. அகிலேசசர்மா, ச. பஞ்சாட்சர ஐயர், யே.எஸ். ஆழ்வாப்பிள்ளை, க.சின்னத்தம்பி ஆகியோரை இனங்காண முடிந்தது. இவர்களைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் (வே. சிவக்கொழுந்து) முதுதமிழ்ப்புலவர் மு.நல்லதம்பி, அல்வாயூர் கவிஞர் மு.செல்லையா, வித்துவான் க.வேந்தனார். , கனக. செந்திநாதன் ஆகியோர் ஈழத்துக் குழந்தைப் பாடல் வரலாற்றில் முத்திரை பொறித்தோராக கருதப்படுகின்றனர். இவர்களதுபாடல்கள் குழந்தைகளின் உள இயல்புகளுக்கு ஏற்றனவாகவும் இனிய சந்தங்கள் கொண் டனவாகவும் அமைந்திருந்தன. இயற்கைக் காட்சிகள், வளர்ப்புப் பிராணிகள், விளையாட்டுப் பொருட்கள், குடும்பஉறவினர்கள், நண்பர்கள் ஆகியோரைப் பற்றியனவாக இவை பெரும்பாலும் அமைந்திருந்தன.

கவிஞர் யாழ்ப்பாணனின் "அந்த நாளும் வந்திடாதோ! என்ற அருமையான பாடல் சிறுவர்களின் பாட சாலை நினைவுகளை மீட்டுப்பார்க்கும் வகையில் அமைந்துள்ளமை வியந்து போற்றுதற்குரியதாகும்.

"குமுக்காக் கணபதியாய்க்
குழல் அண்ணாச்சாமியாய்
தமுக்குத்தமுக்கெனவே
தாளங்கள் பல போட்ட...
அந்த நாளும் வந்திடாதோ!"


என ஆவலுடன் பாடத்தூண்டும் வகையில் அமைந்துள்ள பாடலாகும். கவிஞரின் மற்றொரு பாடல் ஆட்டுக்குட்டி பற்றியது. சின்னஞ்சிறிய ஆட்டுக் குட்டியுடன் சிறுவன் பேசும் வகையில் அமைந்தது.

**த. துரைசிங்கம்**
**(ஓய்வுபெற்ற கல்விப்பணிப்பாளர்)**

"ஆட்டுக்குட்டி எந்தன் குட்டி
அருமையான சின்னக் குட்டி
ஓட்டம் ஓடி வந்திடுவாய்
உனக்கு முத்தம் தந்திடுவேன்"

சின்னஞ்சிறுவன் நிலைக்கு இறங்கி வந்து அவனது உள்ளத்து உணர்வுகளைப் பிரதிபலிக்கும் வகையில் கவிஞர் தம்மை ஓர் சிறுவனாகப் பாவித்து பாடியுள்ள பாடலிதுவாகும் .

(தொடரும்)



"வாழ்க்கைத் திறனொன்றாக ஆங்கிலமொழி" என்ற நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் யாழ். வலயத்தின் ஆங்கில ஆசிரியர்களுக்கான 10 நாட்கள் உள்ளடங்கலான செயலமர்வு அண்மையில் இடம்பெற்றது. இச் செயலமர்வின் இறுதி நாள் நிகழ்வில் கலந்து கொண்ட யாழ். வலய கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் உரையாற்றுவதையும் கலந்து கொண்ட ஆசிரியர்களையும் படங்களில் காணலாம்.

## இந்தியாவிலிருந்து மீண்டும் புகையிரதப் பெட்டிகள் இறக்குமதி

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட புகையிரதப் பெட்டிகளில் பழுது காரணமாக இடை நிறுத்தி வைக்கப்பட்ட மிகுதி 17 புகையிரதப் பெட்டிகளை இலங்கைக்கு இறக்குமதி செய்வதற்கு தீர்மானித்துள்ளதாக போக்குவரத்து அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடன் அடிப்படையில் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட புகையிரதப் பெட்டிகளில் ஏற்பட்ட பழுது காரணமாக மார்ச் 11 ஆம் திகதி மிகுதி புகையிரத பெட்டிகளின் இறக்குமதியை போக்குவரத்து அமைச்சு தற்காலிகமாக இடைநிறுத்தியிருந்தது.

மிகுதி புகையிரத பெட்டிகளில் உள்ள கோளாறுகளை பரிசீலித்து இலங்கைக்கு அனுப்பும் படி இந்திய ரைட்ஸ் நிறுவனத்திற்கு போக்குவரத்து அமைச்சர் கடந்த 31 ஆம் திகதி அறிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட இயந்திரங்களை திருத்துவதற்கு கடந்த வாரம் இந்தியாவிலிருந்து விசேட குழுவொன்று இலங்கைக்கு வந்துள்ளனர்.

இந்தப் புகையிரத இயந்திரங்களுள் ஏற்பட்ட கோளாறுகளை 75 நாட்களுக்குள் திருத்திக் கொடுப்பதாக இந்திய ரைட்ஸ் நிறுவனக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

இதற்காக இந்திய நிறுவனத்திற்கு மேலதிக கட்டணங்கள் செலுத்தப்படமாட்டாது என புகையிரத திணைக்களத்தின் திட்ட முகாமையாளர் விஜயசமரசிங்க தெரிவித்திருந்தார். (ஸ்ரீ-2)

## பாதுகாப்பு அமைச்சு, இராணுவத் தலைமையகத்தை இடமாற்ற 2 ஆயிரத்து 500 கோடி ரூபா செலவு

கொழும்பில் அமைந்துள்ள பாதுகாப்பு அமைச்சையும் இராணுவத் தலைமையகத்தையும் பத்தரமுல்லைக்கு இடமாற்றுவதற்கு 2 ஆயிரத்து 500 கோடி ரூபா செலவாகும் என கணக்கிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக பாதுகாப்புச் செயலாளர், ஜனாதிபதி மூலமாக அமைச்சரவைக்கு சமர்ப்பித்துள்ள அறிக்கைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

பாதுகாப்பு அமைச்சும் இராணுவத் தலைமையகமும் ஹொங்கொங்கை தளமாகக் கொண்ட முன்னணி ஹோட்டல் அமைக்கும் ஷங்ரிலா நிறுவனத்திடம் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது.

இதிலிருந்து கிடைக்கும் நிதியைக் கொண்டும் பாதுகாப்புப் பிரிவை பத்தரமுல்லையில் அமைப்பதற்கான செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்பு அமைச்சின் 10 ஏக்கர் கொண்ட நிலப்பரப்பில் ஷங்ரிலா நிறுவனம் 7 நட்சத்திர ஹோட்டல் நிர்மாணிக்க 500 மில்லியன் அமெரிக்க டொலர்களை முதலிட்டுள்ளது.

இந்த ஹோட்டல் 500 அறைகளைக் கொண்டதாக அமையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. பாதுகாப்புப் பிரிவை பத்தரமுல்லைக்கு இடமாற்றுவதற்கான நிர்மாணப் பணிகள் இவ்வருடம் முதல் முன்னெடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

## வடபகுதியில் 3 இலட்சத்து 11 ஆயிரத்து 31 நிலக்கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன

வடபகுதியில் இதுவரை 3 இலட்சத்து 11 ஆயிரத்து 31 நிலக்கண்ணி வெடிகள் அகற்றப்பட்டுள்ளன என இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் உபய மெதவல தெரிவித்துள்ளார்.

வடபகுதியில் நிலக்கண்ணி வெடிகள் அகற்றப்படாமல் 500 சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்பே காணப்படுவதாகவும் இதுவரை 3 ஆயிரத்து 716 சதுரகிலோ மீற்றர் நிலப்பரப்பில் நிலக்கண்ணி வெடிகள் முற்றாக அகற்றப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

வடக்கில் வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் மற்றும் கிழக்கில் யுத்தம் இடம்பெற்ற பிராந்தியங்களில் நிலக்கண்ணி வெடிகள் அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நிலக்கண்ணிவெடிகள் அகற்றும் பணிகளில் இராணுவத்தின் பொறியியல் படையைச் சேர்ந்த ஆயிரம் பேர், 7 அரச சார்பற்ற நிறு வனங்களுடன் இணைந்து ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

2011.04
04

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1814 - நெப்போலியன் முதற்தடவையாக முடி துறந்தான்.

★ 1850 - இங்கிலாந்தின் கொட்டன்ஹாம் என்ற ஊரின் பெரும் பகுதி தீயில் அழிந்தது.

★ 1865 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: கூட்டுப்படைகள் வேர்ஜீனியாவின் ரிச்மண்ட் நகரைக் கைப்பற்றிய அடுத்த நாள் ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் கூட்டமைப்பின் தலைநகருக்கு விஜயம் செய்தார்.

★ 1866 - ரஷ்யாவின் இரண்டாம் அலெக்சாண்டர் கீவ் நகரில் கொலை முயற்சி ஒன்றில் இருந்து தப்பித்தான்.

★ 1905 - இந்தியாவில் கங்க்ரா அருகில் இடம்பெற்ற நிலநடுக்கத்தில் 20 ஆயிரம் பேர் வரை பலியாயினர்.

★ 1945 - இரண்டாம் உலகப் போர்: சோவியத் இராணுவத்தினர் ஹங்கேரியை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

★ 1949 - பன்னிரண்டு நாடுகள் ஐக்கிய அமெரிக்காவின் தலைமையில் ஒருங்கிணைந்து நேட்டோ அமைப்பை உருவாக்கின.

★ 1968 - அமெரிக்காவின் கறுப்பினத் தலைவர் மார்டின் லூதர் கிங் டென்னிசி மாநிலத்தில் கொலை செய்யப்பட்டார்.

★ 1968- அப்பலோ 6 விண்கப்பல் நாசாவினால் விண்ணுக்கு ஏவப்பட்டது.

★ 1969 - டெண்டன் கூலி என்பவர் உலகின் முதலாவது தற்காலிக செயற்கை இதயத்தைப் பொருத்தினார்.

★ 1973 - உலக வர்த்தக மையம் நியூயோர்க் நகரில் நிறுவப்பட்டது.

★ 1975 - வியட்நாம் போர்: சாய்கோன் நகரில் அநாதைக் குழந்தைகளை ஏற்றிச்சென்ற அமெரிக்க விமானம் வீழ்ந்து நொருங்கியதில் 172 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1976 - இளவரசர் நொரொடோம் சிஹானூக் கம்போடியா தலைவர் பதவியில் இருந்து விலகினார். இவர் பின்னர் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார்.

★ 1979 - பாகிஸ்தானின் முன்னாள் ஜனாதிபதி சுல்பிக்கார் அலி பூட்டோ தூக்கிலிடப்பட்டார்.

★ 1983 - சலேஞ்சர் பிறப்புக்கள் விண்ணோடம் தனது முதலாவது விண்வெளிப் பயணத்தை ஆரம்பித்தது.

★ 1999 - பாப்பரசரின் வேண்டுகோளையும் புறக்கணித்து நேட்டோ வான்படைகள் உயிர்த்த ஞாயிறு நாளன்று முன்னாள் யூகொஸ்லாவியா மீது குண்டுகளை வீசின.

★ 2002 - அங்கோலாவின் உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டு வரும் நோக்கில் அங்கோலா அரசும் யுனிட்டா போராளிகளும் அமைதி ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன.

### பிறப்புக்கள்

★ 1855 - மனோன்மணியம் பெ.சுந்தரம் பிள்ளை, தமிழ் அறிஞர் (இ.1897)

★ 1976 - சிம்ரன், இந்தியத் திரைப்பட நடிகை.

### இறப்புக்கள்

★ 1841 - வில்லியம் ஹென்றி ஹாரிசன், ஐக்கிய அமெரிக்காவின்9 ஆவது ஜனாதிபதி (பி.1773)

★ 1929 - கார்ல் பென்ஸ், பெற்றோலினால் இயங்கும் ஊர்தியைக் கண்டுபிடித்த ஜேர்மனிய வாகனப் பொறியாளர் (பி.1844)

★ 1968 - மார்டின் லூதர் கிங், கறுப்பினத் தலைவர் (பி.1929)

★ 1979 - சுல்பிகார் அலி பூட்டோ, பாகிஸ்தான் ஜனாதிபதி (பி.1928)

★ 1990 -கி.இலட்சுமண ஐயர், ஈழத்து எழுத்தாளர்.




1975-மைக்ரோசொப்ட் நிறுவனம் பில் கேட்ஸ் மற்றும் போல் அலென் ஆகியோரால் தொடங்கப்பட்டது.

### மெக்சிக்கோவில்

## ஆயிரக்கணக்கான மக்கள் காணாமல் போயுள்ளனர்

### மனித உரிமை பாதுகாவலர் அமைப்பு தெரிவிப்பு

கடந்த 2006 ஆம் ஆண்டு தொடக்கம் மெக்சிக்கோவில் இருந்து ஆயிரக்கணக்கான மக்கள் காணாமல் போய் உள்ளதாக மெக்சிக்கோ மனித உரிமை பாதுகாவலர் அமைப்பு தெரிவித்துள்ளது.

மெக்சிக்கோ ஜனாதிபதி பிலிப் கல்தேரன் போதை வஸ்து உற்பத்தியாளர் மற்றும் கடத்தல்காரர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் 5 ஆயிரத்து 397 பேர் காணாமல் போய் உள்ளதாக இந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

காணாமல் போனவர்களில் சிலரது விடயங்களுக்குப் பின்னால் பாதுகாப்புப் படையினர் செயற்பட்டிருக்கலாம் என ஐக்கிய நாடுகளின் அறிக்கை ஒன்றில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# ஜப்பான் அணுமின் நிலைய

# கதிர்வீச்சு கடலில் கலந்தது

ஜப்பானின் புகுஷிமா அணுமின் நிலையத்தில் இருந்து மிக அதிகளவு கதிர்வீச்சு கொண்ட நீர் கடலில் கலந்திருப்பது கண்டறியப்பட்டுள்ளது. நிலநடுக்கத்திற்குப் பின் கதிர்வீச்சுப் பாதித்த நீர்கடலில் கலப்பது இதுவே முதன் முறையாகும்.

ஜப்பானின் புகுஷிமா டாய் இச்சி அணுமின் நிலையத்தில் உள்ள ஆறு உலைகளிலும் தற்போது மின்சார இணைப்புக் கொடுக்கப்பட்டு உலைகளைக் குளிரூட்டும் பணி இடம்பெற்று வருகிறது.

இந்நிலையில் 2ஆம் உலைக்கும் கடலுக்கும் இடைப்பட்ட இடத்தில் தரையில் 8 அங்குலம் அளவிற்கு ஒரு கீறல் விழுந்தது. இக்கீறலைத் தொடர்ந்து அங்கு ஏற்பட்ட சிறிய குழியில் நீர் தேங்கிக் கிடந்தது. இதைக் கண்டறிந்த அணுமின் நிலையப் பணிப்பாளர்கள், அந்த நீரை ஆய்வு செய்த போது அதில் வழக்கத்தை விட ஆயிரம் மடங்கு அதிகமாக கதிர்வீச்சு இருப்பது தெரியவந் தது.



குழி இருந்த இடத்திற்கு அடியில் கடல் நீரை உலைக்குக்கொண்டு செல்லும் குழாய்கள் பதிக்கப்பட்டுள்ளன. நீர் எவ்விதம் கசிந்தது என்பது தெரியவில்லை. கடலில் அதிகளவு கதிர்வீச்சுக் கொண்டநீர் கலந்திருக்கக் கூடும் என்று டோக்கியோ எலக்ட்ரிக் பவர் கம்பனி (டெப்கோ) அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த மார்ச் 11 ஆம்திகதி நிகழ்ந்த நிலநடுக்கம் மற்றும் சுனாமிக்குப் பின் கதிர்வீச்சுக் கலந்த நீர் கடலில் கலப்பது இதுவே முதன்முறை. அக்குழியையும் கீறலையும் கொங்கிறீட் கலவை கொண்டு நேற்று முன்தினம் மூடினர். எனினும் அப்பகுதியில் பல இடங்களில் இதுபோன்ற சிறிய கீறல்கள் ஏற்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. கடற்கரையைச் சுற்றியுள்ள 15 கி.மீற்றர் சுற்றளவில் காற்றில் கதிர்வீச்சின் அளவைக் கணிக்கும் முயற்சியில் டெப்கோ ஈடுபட்டுள்ளது. இந்நிலையில் பிரதமர் நவோட்டோ கான் நேற்று முன்தினம் முறையாக சுனாமியால் பாதிக்கப்பட்ட இடங்களை நேரில் பார்வையிட்டார். கதிர்வீச்சு அபாயகரமான அளவில் வெளிப்பட்ட நிலையிலும் தளராது பணியாற்றிய டெப்கோ ஊழியர்களுக்கு கான் நன்றி தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# ஐவரிகோஸ்டில் இடம்பெற்ற கலவரத்தில் 800 பேர் பலி

ஆபிரிக்க ஐவரிகோஸ்ட் நாட்டில் கடந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் நடந்தது. அதில் அலாஸ்சான் குவாட்டாரா வெற்றி பெற்று புதிய ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஆனால் தேர்தலில் முறைகேடுகள் இடம் பெற்றதாக குவாக்போ ஜனாதிபதி பதவிவிலக மறுத்துவிட்டார். ஆனால் ஐ.நா.சபை குவாட்டாராவை ஜனாதிபதியாக அங்கீகரித்துள்ளது. இந்நிலையில் குவாட்டாரா மற்றும் குவாக்போவின் ஆதரவாளர்கள் இடையே ஆங்காங்கே மோதல் வெடித்தது. இந்த மோதல் கலவரமாக மாறியுள்ளது. அதில் இதுவரை சுமார் 800 பேர் பலியாகியுள்ளனர். வன்முறைச் சம்பவங்கள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

எனவே மக்கள் வீடுகளை விட்டு வெளியேறாமல் உள்ளேயே முடங்கிக் கிடக்கின்றனர். இதற்கிடையே தேர்தலில் தோல்வியடைந்த குவாக்போ உடனடியாக பதவிவிலக ஆபிரிக்க யூனியன் வலியுறுத்தியுள்ளது. இருந்தும் அவரது ஆதரவாளர்கள் தொடர்ந்து மோதலில் ஈடுபட்டு வருகின்றனர். அவர் பதவி விலக வேண்டும் என்ற பேச்சுக்கே இடமில்லை என்று திட்டவட்டமாகக் கூறியுள்ளனர்.

கலவரம் காரணமாகஅங்கு கொள்ளைச் சம்பவங்களும் பெருமளவில் நடைபெறுகின்றன. எனவே அவர்கள் அனைவரும் பிரான்ஸ் இராணுவத்தினரால் மீட்கப்பட்டு அவர்களின் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். கலவரம் தொடர்ந்து பரவிவருகிறது. (ஸ்ரீ-2)




# இராணுவ நடவடிக்கையின் மூலமே கடாபியை வெளியேற்ற முடியும்


### அமெரிக்கா தெரிவிப்பு

இராணுவ நடவடிக்கை ஒன்றின் மூலம் தான் லிபிய ஜனாதிபதி முவம்மர் கடாபியை ஆட்சியிலிருந்து வெளியேற்ற முடியும் அமெரிக்கா கூறியுள்ளது. அமெரிக்க ஜனாதிபதியின் இல்லமான வெள்ளை மாளிகையின் செய்தித் தொடர்பாளர் ஜே.கார்னே இது குறித்து மேலும் கூறியதாவது,

கடாபி ஜனாதிபதி பதவியில் தொடரக் கூடாது என்றுதான் அந்நாட்டு மக்கள் விரும்புகிறார்கள். அவர் அழைப்பு விடுக்கும் போர் நிறுத்தத்திலும் சமாதானப் பேச்சிலும் அவர்களுக்கு நம்பிக்கையில்லை.

கடாபி லிபிய ஜனாதிபதியாகத் தொடரக் கூடாது. தங்களை யார் ஆளவேண்டுமென்பதை லிபிய மக்கள்தான் முடிவு செய்ய வேண்டுமென்பதே ஜனாதிபதி ஒபாமாவின் நிலைப்பாடு லிபியாவில் ஜனநாயகம் ஏற்பட வேண்டும். நியாயமாகவும் சுதந்திரமாகவும் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதற்கே நாங்கள் ஆதரவு அளிக்கிறோம். கடாபியை ஆட்சியில் இருந்து அகற்ற வேண்டும். அவரிடமுள்ள சர்வாதிகாரத்தை முடிவுக்குக் கொண்டு வரவேண்டும் என்பதே எங்கள் நோக்கம்.

கடாபியின் கொடூர ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வரவே சர்வதேச சமூகத்துடன் இணைந்து அமெரிக்க இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. கடாபி இப்போதுமூழ்கி வரும் கப்பலின் நிலையில் இருக்கிறார். இதற்கு அமெரிக்கா மேற்கொண்ட நடவடிக்கைகளே காரணம் என்றார் அவர். (ஸ்ரீ)



மியன்மாரின் புதிய தலைநகர் நைபிடாவில், புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட அந்நாட்டு ஜனாதிபதி தெயின் செயின் (நடுவில்), பாராளுமன்றத்தில் உரையாற்றினார். அருகில் துணை ஜனாதிபதி டின் அவுங் மியின்ட் ஓ காணப்படுகிறார்.

# பூட்டோவின் மரணதண்டனை குறித்து மீண்டும் விசாரணை

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பூட்டோவுக்கு 32 ஆண்டுகளுக்கு முன்பு அப்போதைய இராணுவ ஆட்சியாளர்களால் மரண தண்டனை விதிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து அவர் தூக்கிலிடப்பட்டார். பலரைக் கொலை செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டு அவருக்கு இந்தத் தண்டனை விதிக்கப்பட்டது.

இந்தநிலையில் அவரது வழக்கை உயர் நீதிமன்றம் மீண்டும் விசாரிக்க வேண்டும் என்று ஆளும் பாகிஸ்தான் மக்கள் கட்சி விரும்பியது. இதைத் தொடர்ந்து அக்கட்சியின் தலைவரும் ஜனாதிபதியுமான சர்தாரி உயர்நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்யும்படி சட்ட மந்திரி பாபர் அலானுக்கு உத்தரவிட்டார்.

இதுகுறித்து மந்திரி சபைக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதனடிப்படையில் மீண்டும் விசாரணை நடத்தும்படி உயர்நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது. அந்த மனுவைப் பரிசீலனை செய்து தன் முடிவை நீதிமன்றம் விரைவில் அறிவிக்கவுள்ளது. பாகிஸ்தான் அரசியல் சட்டம் 186 ஆவது பிரிவின் படி முக்கியமான பொதுப்பிரச்சினை குறித்து உயர்நீதிமன்றத்திடம் எந்தவிதமான கேள்வியும் கருத்தும் கேட்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு. அதனடிப்படையில் உயர்நீதிமன்றில் கருத்துக் கேட்டிருக்கிறார்.

தூக்கிலிடப்பட்ட பூட்டோவின் மகள் பெனாசிரின் கணவர்தான் சர்தாரி என்பது இங்கு நினைவு கூரத்தக்கது.

பூட்டோவை தூக்கிலிட்டவர்களைப் பழிவாங்கும் நோக்கத்துடன் இந்தக் கோரிக்கை வைக்கப்படவில்லை. ஒருதலைவரைப் பற்றிய தவறான தகவல் வரலாற்றில் இடம்பெறக் கூடாது என்பதற்காகதான் இந்த மறு விசாரணை கோரப்பட்டுள்ளது என்று மக்கள் கட்சித் தலைவர்களில் ஒருவர் தெரிவித்தார். (ஸ்ரீ-2)



கென்யா, நெய்வாசாவில் உள்ள மின் உற்பத்தி நிலையத்தை ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ மூன் (நடுவில்) பார்வையிடுவதைப் படத்தில் காணலாம்.

# யாழ். பல்கலைக்கழகத்தின் புதிய துணைவேந்தருக்கு வாழ்த்துச்செய்தி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தின் புதிய துணை வேந்தராக மருத்துவ பீட பேராசிரியர் செல்வி வசந்தி அரசரட்ணம் நியமிக்கப்பட்டமை நம் தமிழ்ப் பெண்களின் வரலாற்றில் முதன்மை பெறுகிறது என ஸ்ரீ இராம கிருஷ்ண சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுவாமி விவேகானந்தர் பெண்களுடைய முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு தாம் வாழ்ந்த காலத்தில் பெண்களுக்கென ஒரு மடம் அமைக்க விரும்பினார். இது அவரது காலத்தில் நிறைவேறவில்லை. தூய அன்னை ஸ்ரீ சாரதாதேவியின் நூறாவது ஜயந்தியன்று 1953 ஸ்ரீ சாரதா மடம் ஆரம்பிக்கப்பட்டு அது தனியாக இயங்கி வருகிறது.

முதன் முதலில் தூய அன்னை ஸ்ரீ சாரதாதேவி துளிகூட கல்வி கற்காதவர். தமது காலத்தில் சகோதரி நிவேதிதை ஆரம்பித்த பாடசாலையை ஆரம்பித்து பெண்களின் கல்விக்கான அவசியத்தை முதலில் உலக்கு உணர்த்திய பெருமை இவரையே சாரும்.

அக்கால கட்டத்தில் வாழும் நம் அனைவருக்கும் ஒரு வரப்பிரசாதமாக யாழ். பல்கலைக்கழகத்தின் புதிய துணை வேந்தராக மருத்துவ பீட பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் நியமிக்கப்பட்டது நம் தமிழ் பெண்களின் வரலாற்றில் முதன்மை பெறுகிறது. சேர் பொன்னம்பலம் இராமநாதனின் கனவுதான் இன்று நனவாகி விட்டது.

அம்மையாரின் பதவிக் காலத்தில் யாழ். பல்கலைக்கழகம் மென்மேலும் சீரும் சிறப்பும் பெற அடியயேன் தூய அன்னை ஸ்ரீ சாரதாதேவியிடம் மனதார வேண்டிக் கொள்கிறேன் என்று தெரிவித்தார். (ஸ்ரீ)




தமிழ் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு
மாபெரும் மலிவு விற்பனை
இந்தியாவிலிருந்து நேரடியாக இறக்குமதிசெய்யப்பட்ட அழகிய சல்வார் மற்றும்கொட்டன் சாறிகள் ( cotton Saree) என்பன
சாவகச்சேரியில்
மாபெரும் மலிவு விற்பனை
இடம்:
"கலா காமென்ட்,"
16A, கண்டி வீதி, சாவகச்சேரி.
(கொமர்ஷல் வங்கி அருகில்)
திகதி:
03.04.2011 தொடக்கம் 08.04.2011 வரை
நேரம் :
காலை 9.00 மணி முதல் இரவு 8.00 மணிவரை
(சி-2867)


# வேம்படி பெண்கள்...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி..)

கற்பதில் அவர்களுக்கு பல அனுகூலங்கள் இருக்கின்றன. இத்தகைய அனுகூலங்கள் தமிழ் மாணவர்களுக்கு இல்லை எனலாம். இலங்கை வரலாற்று பாடவிடயங்கள், பாட நூல்கள், தமிழ் மாணவர்கள் இலகுவாக கற்கக் கூடியதாக அமையவில்லை. மேலும் தமிழ் பிரச்சினையாக உள்ளது. சில ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ் மாணவர்கள் சித்திர பாடத்திலும் இதே மாதிரியான குறைந்த பெறுபேறுகளைப் பெற்று வந்தனர். இதற்கு தீர்வாக யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் சித்திர வடிவமைப்பு கற்கைநெறி ஆரம்பித்து அதன் வழியாக பட்டதாரிகள் வெளியேறி

அட்டவணை - V

வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை க.பொ.த (சா/த) பரீட்சை 2010 தமிழ் மொழி மூலம்

| பாடம் | No. Applied | No. SAT | FIRST SITTING | | | | | % passed |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | A | B | C | S | W | |
| SAIVAISM | 33 | 33 | 33 | - | - | - | - | 100 |
| R.C | 01 | 01 | 01 | - | - | - | - | 100 |
| NON R.C | - | - | - | - | - | - | - | - |
| TAMIL LANG & LIT | 34 | 34 | 32 | 02 | - | - | - | 100 |
| ENGLISH | 34 | 34 | 34 | - | - | - | - | 100 |
| SCIENCE & TECH | 34 | 34 | 21 | 03 | 09 | 01 | - | 100 |
| MATHS | 34 | 34 | 34 | - | - | - | - | 100 |
| HISTORY | 34 | 34 | 12 | 08 | 13 | 01 | - | 100 |
| ART | - | - | - | - | - | - | - | - |
| MUSIC | 01 | 01 | - | 01 | - | - | - | - |
| DANCE | 02 | 02 | 01 | 01 | - | - | - | 100 |
| ENGLISH LIT | 25 | 25 | 01 | 04 | 11 | 08 | 01 | 96 |
| TAMIL LIT | 01 | 01 | 01 | - | - | - | - | 100 |
| DRAMA & THEATRE | - | - | - | - | - | - | - | - |
| GEOGRAPHY | 03 | 03 | 01 | 02 | - | - | - | 100 |
| DEVELOPMENT ST. | - | - | - | - | - | - | - | - |
| COMM.& ACC. | 29 | 29 | 20 | 06 | 03 | - | - | 100 |
| CITIZENSHIP | 02 | 02 | - | 02 | - | - | - | 100 |
| AGRICULTURE | - | - | - | - | - | - | - | - |
| HOME SCIENCE | - | - | - | - | - | - | - | - |
| INFORM.TECHNO. | 20 | 20 | 16 | 04 | - | - | - | 100 |
| HYG.& PHY.ED. | 14 | 14 | 11 | 03 | - | - | - | 100 |

மாணவர்கள் வரலாற்றை விரும்பிக் கற்கும் நிலையில் இல்லாமல் பரீட்சைக்கு ஒரு கட்டாயத்தின் பெயரிலேயே கற்பதுபோல் தெரிய வருகிறது. தமிழ் மாணவர்களுக்கு வரலாற்றை கற்பிப்பதற்கு போதியளவு பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் இன்மையும் முக்கிய ஆசிரியர்களாக நியமனம் பெற்றதன் பின்னர் இக்குறைபாடு நீங்கியது. ஆகவே தமிழ் மாணவர்கள் வரலாறு கற்பதில் எதிர் நோக்கும் பிரச்சினைகளுக்கு உரிய கற்பித்தல் செயற்பாட்டுப் பின்பு லத்தை உருவாக்கி வரலாற்று பாடம் கற்பிக்கப்படுமாக இருந்தால் நல்ல பெறுபேறுகளை வருங்காலத்தில் மாணவர்கள் பெறமுடியும்.

இப்பாடசாலையில் சிறந்த பெறுபேறுகளை மாணவிகள் பெற்று வருவதற்கு பல காரணிகள் உதவியாக உள்ளன. மீத்திறன் பிரிவைச்சேர்ந்த மாணவிகளாக இருப்பதுடன் இவர்களுடையே நிலவும் கல்விசார் போட்டியும், ஊக்கமும், பாடசாலை பாரம்பரியமும், பாடசாலைப் பௌதீக சூழலும், கற்றல் செயற்பாட்டிற்கு சாதகமாக இருக்கின்றன. அதிபர், பிரதி அதிபர், உப அதிபர் ஆசிரியர்களின் கல்வி செயற்பாட்டிற்கான அர்ப்பணிப்புள்ள பங்களிப்புகள் மிகவும் சிறப்பானதாக இருக்கின்றன. இன்றைய அதிபர் திருமதி கமலேஸ்வரி பொன்னம்பலத்தின் சிறந்த கல்விசார் தூரநோக்கு முகாமையும் நிர்வாகமும், கடின உழைப்பும், மனிதநேயமும், சிறந்த தொடர்பாடல் பண்பும், பாட சாலை மாணவிகளின் மேம்பாட்டிற்கு காட்டும் கரிசனையும் மாணவிகளின் வளர்ச்சிக்கு பெரும் உந்துசக்தியாக இருக்கின்றது.

இவரின் கடந்த இரண்டு தசாப்த கடின உழைப்பால் வேம்படியின் உட்கட்டுமானங்கள் - வகுப்பறைகள், நூல் நிலையம், மேபிள் தம்பையா மண்டப புனர்நிர்மாணம், ஆசிரியர் பொது அறை உருவாக்கம், மாணவர் கணனி அறைகள் உருவாக்கம், விளையாட்டு மைதான விருத்தி, மாணவர் நவீன சிற்றுண்டிச்சாலை என்பன புதிதாக அமைக்கப்பட்டும் ஆய்வுகூடங்கள் புதுப்பொலிவு பெற்றன. இதனால் பாடசாலை வளாகம் கற்கும் மாணவிகளின் கல்வி செயற்பாட்டிற்கு பாடசாலை வாழ்விற்கும் மனநிறைவுதரும் இடமாக அமைந்தது சிறந்த பெறுபேறுகள் பெற வழிசமைத்தன.

புலமைப்பரிசில் பரீட்சைக்குப் பின் 6 ஆண்டுகள் மாணவிகளின் கல்வி செயற்பாட்டைத் தொய்யவிடாது மேல் நிலைக்கு கொண்டுவந்ததில் பாடசாலை சமூகத்தின் பங்களிப்பு மிகவும் முக்கியமாக உள்ளது. பாடசாலை உட்கட்டுமானம் வளவிருத்தி கல்வி செயற்பாடுகளை முன்னெடுப்பதில் பாடசாலை அபிவிருத்தி சபை பாடசாலை பழைய மாணவிகள் சங்கம், பாடசாலை அபிவிருத்திக்குழுவின் பங்களிப்புக்கள் காத்திரமானவையாக இருக்கின்றது. வேம்படி மாணவிகள் வரும்காலங்களிலும் மேலும் மேலும் சிறந்த சாதனைகளை செய்ய வேண்டுமென சமூகம் எதிர்பார்க்கின்றது.

## தோட்ட தொழிலாளர்களின் சம்பளவுயர்வு குறித்த பேச்சுவார்த்தை இன்று

மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வேதன உயர்வு கூட்டு ஒப்பந்த பேச்சுவார்த்தைகள் இன்று இடம்பெறவுள்ளது.

கொழும்பில் இடம்பெறும் இந்தப் பேச்சுவார்த்தைகளில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்,இலங்கைத் தொழிலாளர் சங்கம் மற்றும் தோட்டத் தொழிற்சங்கக் கூட்டு கமிட்டி ஆகிய தொழிற்சங்கங்கள் முதலாளிமார் சம்மேளனத்துடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளது.

முதலாளிமார் சம்மேளனத்துடன் மேற்கொள்ளப் பட்ட உடன்படிக்கை மார்ச் மாதத்துடன் நிறைவடைந்த நிலையில் இந்த பேச்சுவார்த்தைகள் இடம்பெறுகின் றன.

கைச்சாத்தான கூட்டு உடன்படிக்கையை புதுப்பிக்கும் நோக்கில் இன்று பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுவதாக இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவர் முத்து சிவலிங்கம் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குட்பட்ட குருநகர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவிற்குட்பட்ட வளர்ப்பு நாய்களு க்கு விலங்கு விசர் நோய் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

இதற்கமைய இன்று திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12.30 மணி வரை 6 ஆம் குறுக்குத் தெரு சந்தியில் வைத்து வழங்கப்பட வுள்ளது.

எனவே, இச்சந்தர்ப்பத்தைப் பயன்ப டுத்தி தமது வளர்ப்பு நாய்களுக்கு மேற்குறித்த ஊசியினை ஏற்றிக் கொள்ளுமாறு யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதி காரி டாக்டர் ம.மரியதாசன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## வருடாந்த பொங்கல் வேள்வி விழா

குஞ்சுப்பரந்தன் பொறிக்கடவை கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த பொங் கல் வேள்வி விழா இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

தீமிதிப்பு, அம்மன் வீதியுலாவைத் தொடர்ந்து பொங்கல் வேள்வி நடைபெற்று மறுநாள் செவ்வாய்க்கிழமை அடியார்களுக்கு நீர்ச்சோறு வழங்கப்படும் என்றும் அடியார்கள் கலந்து கொண்டு அன்னையின் அருளைப் பெறுமாறும் ஆலய அறங்காவலர் அவையினர் அறிவித்துள்ளனர். (ஸ்ரீ-3-29)

# ஆ.ராசா உட்பட ஒன்பது பேர் மீது சி.பி.ஐ. குற்றப்பத்திரிகை தாக்கல்

(புதுடில்லி)


2ஜி அலைக்கற்றை ஒதுக்கீடு விவகாரத்தில் ஏல முறையைக் கடைப்பிடிக்காமல் முதலில் வந்தவருக்கே முன்னுரிமை என்ற அடிப்படையில் நடந்த முறைகேடுகள் தொடர்பாக அப்போதைய தொலைத்தகவல் தொடர்புத்துறை அமைச்சர் ஆ.ராசா உட்பட 9 பேர் மீது மத்திய புலனாய்வுத் துறை கழகம் (சி.பி.ஐ.) குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தது.

இந்த நடவடிக்கையால் அரசுக்கு ஏற்பட்ட வருவாய் இழப்பு 30 ஆயிரத்து 984 கோடி ரூபாய் மட்டுமே என்று முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

டில்லியில் இதற்காகவே ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் சிறப்பு சி.பி.ஐ நீதிமன்றில் நீதிபதி ஓ.பி. சைனி முன்னிலையில் நேற்று முன்தினம் இந்த குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

80 ஆயிரம் பக்கங்களைக் கொண்ட இந்த குற்றப்பத்திரிகையில் மத்திய அரசின் தலைமையரசு வழக்கறிஞர் குலாம் இ வாஹன்வதி, அதிகாரத் தரகர் நீரா ராடியா உட்பட 125 பேர் சாட்சிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இந்த வழக்கை விசாரித்து வரும் சி.பி.ஐ அமைப்பு இந்த மாத இறுதிக்குள் கூடுதல்



குற்றப்பத்திரிகையைத் தாக்கல் செய்வதாகவும் எதிர்வரும் மே மாதம் 31 ஆம் திகதிக்குள் இந்த வழக்கில் விசாரணையை முடித்து விடுவதாகவும் நீதிபதியிடம் தெரிவித்தது.

இந்த வழக்கு தொடர்பான குற்றப்பத்திரிகை, ஆவணங்கள், சாட்சிகளின் வாக்கு மூலங்கள், இதர ஆதாரங்கள் ஆகியவற்றைப் படித்துப் பார்த்ததாகவும் இந்த வழக்கைத் தொடர போதிய காரணங்களும் ஆதாரங்களும் இருப்பதாக தமக்கு திருப்தி ஏற்பட்டிருப்பதாகவும் எதிர்வரும் காலங்களில் வழக்கு விசாரணையைத் தொடரலாம் என்றும் நீதிபதி ஓ.பி.சைனி குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

# வடிவேலுவின் இரகசியங்கள் அனைத்தையும் வெளியிடுவேன்

## நடிகர் சிங்கமுத்து எச்சரிக்கை


வடிவேலுவின் இரகசியத்தை வெளியிடுவேன் என நடிகர் சிங்கமுத்து எச்சரிக்கை விடுத்துள்ளார். விழுப்புரம் தொகுதியில் அ.தி.மு.க.வை ஆதரித்து நடிகர் சிங்கமுத்து விழுப்புரம் பழைய பஸ் நிலையம் அருகிலும் வளவனூரிலும் நேற்று முன்தினம் பிரசாரம் செய்தார். அப்போது அவர் பேசியதாவது,

இந்த தேர்தலில் தொலை நோக்கு திட்டங்களை அறிக்கையாக ஜெயலலிதா அறிவித்துள்ளார். இலவச டி.வி.குட்டி போடாது. ஆனால் ஆடுகளை கொடுக்கும் போது ஆடு குட்டி போட்டு ஏழைகளின் வறுமையை போக்கும். அன்றாட வருமானத்தை பெருக்கும். கிராமத்து கிழவி பணத்தை மடியில் செருகிக் கொண்டு மகிழ்வாள். மிக்சி கொடுப்பதாக கருணாநிதி கூறியுள்ளார்.

மிக்சி கொடுத்தால் மட்டும் போதுமா? மின்சாரம் வேணுமே அதற்குத்தான மிக்சியும் கிரைண்டரும் கொடுப்பதோடு தடையில்லா மின்சாரத்தையும் வழங்குவதாக ஜெயலலிதா அறிவித்துள்ளார். விஜயகாந்த் பிரசார வானுக்குள் விழுந்த வயரை எடுக்கச் சொல்லி தனது வேட்பாளரிடம் கூறியுள்ளார். அதற்குள் அந்த வேட்பாளரை விஜயகாந்த் அடித்து விட்டதாக கிராபிக்ஸ் செய்து காண்பித்து விட்டனர். காமெடி பீஸ் (நடிகர் வடிவேலு) மாதிரி காசு வாங்கிக் கொண்டு பிரசாரம் செய்ய நான் இங்கு வரவில்லை.


எனது சொந்த பிரச்சினையை சொல்வதற்காகவும் வரவில்லை. தே.மு.தி.க விஜயகாந்தை திட்டும் காமெடி பீஸ் ஜெயலலிதாவை திட்டுவதில்லை. ஏனென்றால் அவர் தான் ஆட்சிக்கு வரப்போகிறார் என்று இவருக்கு நன்றாக தெரியும். ஆட்சிக்கு வந்த பின்னர் ஜெயலலிதா பக்கம் காமெடி பீஸ் சென்று விடும். இந்த டீலிங் எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு.

விஜயகாந்துக்கு காலை அமுக்கி விட்டு அவரிடம் சான்ஸ் கேட்டவர் இன்றைக்கு அவரையே திட்டுவதா? வடிவேலுவிற்கு நான் ஒரு எச்சரிக்கை விடுக்கிறேன். விஜயகாந்தை விமர்சனம் செய்வதை இத்தோடு நிறுத்திக் கொள்ள வேண்டும். நீ சீண்டினால் நான் நோண்டுவேன். இரவு 7 மணிக்கு மேல் நீ என்னென்ன செய்வாய் என்று எனக்கு தெரியும். அதையெல்லாம் நான் சொல்வேன். இவ்வாறு நடிகர் சிங்கமுத்து பேசினார். (ஸ்ரீ)




"மக்களில் ஒருவனாக" என்று கூறிக்கொண்டு தி.மு.க.கூட்டணிக்கு ஆதரவாக குறிப்பாக விஜயகாந்தை தாக்கி நடிகர் வடிவேலு பிரசாரம் செய்து வருகிறார். தற்போது வடிவேலுவின் வண்டவாளங்களை வெளிப்படுத்துவேன் என கூறி ஆயிரம் விளக்கு தொகுதியில் போட்டியிடும் அ.தி.மு.க வேட்பாளர் வளர்மதிக்கு ஆதரவாக பிரசாரம் செய்ய காமெடி நடிகர் சிங்கமுத்து தேர்தல் களத்தில் குதித்துள்ளார்.

# பாரதச் செய்திகள்



# சத்யசாய்பாபா நலமாகவுள்ளார்



(புட்டபர்த்தி)

ஆந்திர மாநிலம் புட்டபத்தியில் ஆச்சிரமம் நடத்தி பல்வேறு சமூக நலப்பணிகளை செய்து வரும் சாய்பாபாவுக்கு வயது-85 ஆகும். கடந்த மாதம் 28 ஆம் திகதி திடீரென்று உடல் நலக்குறைவு ஏற்பட்டது. இதயத் துடிப்பு குறைந்து மூச்சு விட சிரமப்பட்டதாலும் அவருக்கு மயக்கம் ஏற்பட்டதாலும் அங்குள்ள நவீன வசதிகளுடன் கூடிய சிறப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

அங்கு வைத்தியர்கள் அவருக்கு சத்திர சிகிச்சை செய்து இதயத் துடிப்பை சீர்ப்படுத்த பேஸ்மேக்கர் கருவியை பொருத்தினார்கள். தொடர்ந்து அவர் அங்கு சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்த நிலையில் கடந்த முதலாம் திகதி இரவு சத்யசாய்பாபாவுக்கு மீண்டும் சுவாச பிரச்சினை ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து அவருக்கு செயற்கை சுவாச கருவி பொருத்தப்பட்டது. இது பற்றி வைத்தியசாலையின் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,


சத்யசாயிபாபாவுக்கு சுவாச பிரச்சினை ஏற்பட்டதைத் தொடர்ந்துஅவருக்கு செயற்கை சுவாச கருவி பொருத்தப்பட்டதாகவும் தற்போது அவர் நன்றாக சுவாசிப்பதாகவும் அவரது உடலில் உள்ள முக்கிய உறுப்புக்கள் அனைத்தும் நன்றாக செயற்படுவதாகவும் கவலைப்படும் படி எதுவும் இல்லை என்றும் கூறப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)



மும்பை வான்கேடே மைதானத்தில் இந்தியா- இலங்கை அணிகளுக்கிடையேயான இறுதிப் போட்டியைக் காண சென்ற இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ மற்றும் இந்திய ஜனாதிபதி பிரதீபா பட்டீல் ஆகியோர் கலந்துரையாடுவதைப் படத்தில் காணலாம்.

# அனைத்து முக்கிய பிரச்சினைகளையும் மன்மோகன்சிங்குடன் விவாதித்தேன்

## பாகிஸ்தான் பிரதமர் தெரிவிப்பு



காஷ்மீர் பிரச்சினை உட்பட இரு நாடுகளிடையில் உள்ள அனைத்து முக்கியப் பிரச்சினைகள் குறித்தும் இந்திய பிரதமர் மன் மோகன் சிங்குடன் விவாதித்தேன் என்று பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரஸாக் கிலானி தெரிவித்துள்ளார்.

உலகப் கோப்பை கிரிக்கொட்டில் இந்தியா-பாகிஸ்தான் ஆட்டத்தைக் காண மன்மோகன் சிங் விடுத்த அழைப் பின் பேரில் கிலானி இந்தியாவுக்கு வந்திருந்தார். அப்போது மன்மோகன் சிங்குடன் பல்வேறு விடயங்கள் குறித்தும் கலந்துரையாடியுள்ளார். இது தொடர்பாக இஸ்லாமாபாத்தில் நேற்று முன்தினம் தொலைக்காட்சி நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அவர் கூறியவை வருமாறு,

மன்மோகன் சிங்கை சந்தித்த போது இருநாடுகளிடையே உள்ள அனைத்து முக்கியப் பிரச்சினைகள் குறித்தும் விவாதித்தேன். காஷ்மீர் விடயம் குறித்தும் பேசப்பட்டது. இப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணாமல் இரு நாடுகளிடையிலான உறவில் அடுத்த கட்ட முன்னேற்றம் ஏற்படாது.

கிரிக்கெட் ஆட்டத்தை காண எனக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து மன்மோகன் சிங்குடன் பேச்சு நடத்த வாய்ப்பு கிடைத்ததையும் நல்ல வாய்ப்பாகவே கருதுகிறேன். இரு நாடுகளிடையே உள்ள அனைத்துப் பிரச்சினைகளுமே பேசித்தீர்த்துக் கொள்ளக் கூடியவைதான். பாகிஸ்தானில் இப்போது ஜனநாயக ஆட்சி நடைபெற்று வருகிறது.

முன்பு முஷாரப் போன்ற இராணுவ ஆட்சியாளர்களின் காலகட்டத்தில் இந்தியாவுடன் நடத்தப்பட்ட பேச்சுகளை விட இப்போது நடத்தப்படும் பேச்சு மிகவும் அர்த்தமுள்ளதாக இருக்கும் என்றார்.

இந்தியா-பாகிஸ்தான் வெளியுறவு செயலர்கள் நிலையிலான பேச்சு வெற்றிகரமாக நடைபெற்றுள்ளது. இரு நாட்டுக்கு இடையே உள்ள பிரச்சினைகளைத் தீர்க்க மூன்றாவது நாட்டின் தலையீடு தேவையில்லை. நமது பிரச்சினைகள் என்ன என்பது நமக்கு மட்டும் தான் தெரியும் என்றார் கிலானி. (ஸ்ரீ-2)

தன்னிடம் தானே நம்பிக்கையிழப்பது இறைவனிடம் நம்பிக்கையிழப்பதாகும்.
- சுவாமி விவேகானந்தர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# முருகண்டியில் மச்சக் ஹோட்டல் முருகனிடமோ வேண்டுதல்

சர்வதேச கிரிக்கெட் போட்டி ஒரு மாதிரியாக முடிந்துவிட்டது. கிரிக்கெட்டில் இலங்கையா? இந்தியாவா? வெல்லும் என்ற கருத்துக் கணிப்புகள், வாதப்பிரதிவாதங்கள், சண்டை சச்சரவுகள் மத்தியில் இந்தியா உலகக் கிண்ணத்தைத் தனதாக்கிக் கொண்டது.

சர்வதேச கிரிக்கெட் இறுதிப் போட்டியில் இலங்கையும் இந்தியாவும் களமிறங்கி விளையாடிய போது; இலங்கை, இந்திய இரசிகர்கள் அதனை கிரிக்கெட் போட்டியாகவே பார்க்கவில்லை.

மாறாக இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே மிகப்பெரியதொரு அரசியல் பலப்பரீட்சை நடப்பது போலவும் இதில் இலங்கை வென்றுவிட்டால் இந்தியா அனைத்து விடயங்களிலும் தோற்றுப்போனதாக அர்த்தம் பெறும் என்ற நினைப்பும் சேர்ந்து இறுதிப் போட்டியை மிகவும் பரபரப்பாக்கிக் கொண்டது.

மும்பையில் நடந்த இப்போட்டியை நேரில் கண்டுகளிக்க ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அங்கு சென்றிருந்தார்.

முன்னதாக இலங்கை கிரிக்கெட் அணி வெற்றி பெற வேண்டுமென்பதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ திருப்பதிக்குச் சென்று வெங்கடேஸ்வரரை வேண்டுதல் செய்திருந்தார்.

இதேபோல் யாழ்ப்பாணத்திலும் படைத்தலைமை நல்லூர் முருகன் கோயிலுக்குச் சென்று கிரிக்கெட் வெற்றிக்காக வழிபாடு செய்தது.

இவற்றின் மத்தியில், இந்தியா உலகக் கிண்ணத்தைத் தனதாக்கிக் கொண்டதை அறிந்ததோடு பரிசளிப்புகள் ஆட்டம்பாட்டம் என்பவற்றையெல்லாம் தவிர்த்து உறங்கிக்கொண்டோம்.

உறக்கத்தின் மத்தியில் ஒரு கனவு.

கனவில் மயிலைக் காண்பது முருகனைக் காண்பதற்கு ஒப்பானதென்று சொல்வார்கள். ஆனால் நாமோ மயிலையும் நல்லூர் முருகனையும் ஒன்றாகக் கண்டேன்.

முருகா! ஆறுமுகக் கடவுளே! சரணம் என்று வணங்கினேன். ஓ! கிரிக்கெட் பக்தா... வெற்றி யாருக்கு முருகன் வினவினார். ஏன் முருகா தாங்கள் அறியாததா என்று கேட்டேன்.

மெல்லச் சிரித்தார் முருகன். மும்பையில் கிரிக்கெட் நடைபெறுவதாக என் மாமன் வெங்கடேஸ்வரன் திருப்பதியிலிருந்து தெரிவித்தார்.

இலங்கைக்கு வெற்றி தரும்படி கேட்கிறார்கள். கொடுக்கலாமா என்று வினவினார். இல்லையென்று கூறிய நான், என்னிடமும்தான் அவர்கள் வந்தார்கள். எதுவும் செய்ய முடியவில்லை என்றார் முருகன்.

ஏன் முருகா! அட உனக்கு எதுவும் தெரியாது. முருகண்டியில் எனது அண்ணர் பிள்ளையார் கடும் கோபத்தில் இருக்கிறார். மரக்கறி ஹோட்டல் என்று சொல்லிவிட்டு இப்போது மச்சம் சமைக்கிறார்களாம். அந்த அசைவ மணத்தில் அங்கு தன்னால் இருக்க முடியவில்லையாம். அதனால்தான் எங்கள் இருவராலும் இலங்கை கிரிக்கெட் அணிக்கு எதுவும் செய்ய முடியவில்லை என்றார் முருகன்.

முருகா... முருகா... உன் திருவிளையாடலை கிரிக்கெட்டில் இருந்தா ஆரம்பித்திருக்கிறாய்? முருகண்டியான் பொல்லாதவன். முருகா! அவன் சும்மா விடான்! இப்படி நான் முணுமுணுக்க முருகன் மயிலேறிச் செல்ல முருகா... முருகா... என்ற கத்தலோடு விழித்துக்கொண்டேன். அப்போது நல்லூர் முருகன் மணியோசை ஒலித்துக்கொண்டது.

# யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவு சங்கத்தை கட்டிக் காப்பது பால் வழங்குநர்களின் கடமை

1976ஆம் ஆண்டு காலப்பகுதியிலிருந்து யாழ்.மாவட்ட அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் பால் கொள்வனவு, விற்பனை விநியோகத்தில் ஈடுபட்டு வருகின்றது. யாழ்.மாவட்டத்திலுள்ள பண்ணையாளர்கள் இச்சங்கத்தின் அங்கத்தவர்களாக உள்ளனர். ஆரம்ப காலங்களில் ஒன்று, இரண்டு கிளைகளுடன் இயங்கிய இச்சங்கம் தற்போது 29 கிளை நிலையங்களை அமைத்து இயங்கி வருவதுடன் ஒரு கால்நடை தீவன உற்பத்தி ஆலை, பாற்பொருட்கள் உற்பத்தி அலகு என தனது செயற்பாட்டை விஸ்தரித்து யாழ்.மாவட்டத்திலுள்ள பால் உற்பத்தியாளர்களின் முன்னேற்றம் கருதிப் பல்வேறு செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

யாழ்ப்பாணத்தில் இயல்புநிலை குழம்பிய காலகட்டங்களில் பல்வேறு இன்னல்களைச் சந்தித்த போதும் தொடர் முயற்சியாலும் அங்கத்தவர்களின் பங்களிப்பினாலும் சங்கம் ஸ்திரத்தன்மையுடன் நிலைத்துநின்று அங்கத்தவர்கள், வாடிக்கையாளர்களுக்குச் சேவையாற்றி வருகின்றது. தற்போது யாழ்.மாவட்டத்தில் சுமுகநிலை திரும்பிய நிலையில் சொந்த இலாபம் கருதிய சில தனியார் நிறுவனங்கள் யாழ்.மாவட்டத்தில் இயங்கிவரும் யாழ்.மாவட்ட அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தினால் மேற்கொள்ளப்படும் பால் கொள்வனவு, விநியோகம், பாற்பொருட்கள் உற்பத்திகள் சம்பந்தமான செயற்பாட்டைச் சிதைக்கும் நோக்குடன் செயற்பட்டு வருவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. கடந்த காலங்களில் யாழ்.மாவட்ட கால்நடை வளர்ப்போரின் நிலைமை பற்றி கவனத்திற்கெடுக்காத நிறுவனங்கள் தற்போது தங்களது இலாபநோக்கம் கருதி கால்நடை வளர்ப்போரை அணுகுவதை கால்நடை வளர்ப்பில் ஈடுபடும் மக்கள் நன்கு அறிவர்.

தற்போது யாழ்.மாவட்டத்தில் பால் கொள்வனவில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் யாழ்.மாவட்ட அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தினால் கொள்வனவு செய்யப்படும் விலையிலும் பார்க்க குறைந்த விலையிலேயே அங்கத்தவர்களிடம் பால் கொள்வனவை ஆரம்பித்தன. இது வெற்றியளிக்காது போகவே தற்போது யாழ்.மாவட்ட அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தினால் கொள்வனவு செய்யப்படும் விலையிலும் பார்க்க கூடுதலான விலையில் கொள்வனவு செய்யவுள்ளதாகப் பிரசாரப்படுத்துகிறார்கள். இவர்களது உள்நோக்கம் யாழ். மாவட்டத்திலுள்ள பால் வழங்குநர்களுக்கும் பால் வாங்கும் வாடிக்கையாளர்களுக்கும் இலாப நோக்கமற்ற ரீதியில் சேவையாற்றி வரும் யாழ்.மாவட்ட அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் செயற்பாட்டை முடக்கி அதன்பின் பால் விலை நிர்ணயத்தை தங்களது கைகளில் எடுக்கும் நோக்கம் கொண்டதாகும். இதனைப் பால் உற்பத்தியாளர்கள் நன்கு புரிந்து கொள்வார்கள்.

மேலும் யாழ்.மாவட்டத்தில் பால் கொள்வனவில் ஈடுபடும் நிறுவனங்கள் அதனை யாழ்.மாவட்ட மக்களின் தேவைக்கு விநியோகிக்காமல் கொள்கலன்களில் தென்பகுதிக்குக் கொண்டு சென்று அங்கிருந்து பால்பொருட்களை மிக அதிக விலையில் யாழ்.மாவட்டத்திலுள்ள மக்களுக்கு விநியோகித்து வருகின்றன. இதன்மூலம் யாழ்.மாவட்டத்திலுள்ள மக்களின் பால் தென்பகுதி நிறுவனங்களின் கையகப்படுத்தப்படுவதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

**பொதுமுகாமையாளர்**
**யாழ்கோ லிமிட்டெட்**
**யாழ்ப்பாணம்**

எனவே தொடர்ந்தும் யாழ்.மாவட்டத்திலுள்ள கால்நடை வளர்ப்போரும் பால் பொருட்களைக் கொள்வனவு செய்யும் அங்கத்தவர்களும் யாழ்.மாவட்ட அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் செயற்பாடுகளுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குவது அவசியமாகின்றது.

# உள்ளூராட்சி தேர்தல் திருத்த சட்டமூலம் நாளை நாடாளுமன்றில் சமர்ப்பிப்பு


உள்ளூராட்சி சபை தேர்தல் திருத்த சட்ட மூலம் நாளை செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளதாக ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

குறித்த சட்டமூலம் கடந்த மாதம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. எவ்வாறாயினும் அன்றைய தினம் பிற்போடப்பட்ட விவாதமே நாளைய தினம் இடம் பெறவுள்ளது.

திருத்தப்பட்ட உள்ளூராட்சி சபை சட்ட மூலத்தில் உள்ளூராட்சி சபை தேர்தல் விகிதாசார முறையின் கீழ் 30 சதவீதமும் தொகுதி அடிப்படையில் 70 சதவீதத்திலும் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

குறித்த சட்டமூலத்திற்காக திருத்தங்களுடன் ஆதரவை வழங்க தாம் எதிர்பார்த்துள்ளதாக ஐக்கிய தேசிய கட்சியின் பொது செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்



வெளிச்சக்தி எதுவும் பாதிக்க முடியாத போது,எந்த மாறுதல்களையும் உண்டாக்க இயலாத போதுதான் சுதந்திரம் என்பது இருக்க முடியும்.எல்லா நியதிகளுக்கும்,எல்லா எல்லைகளுக்கும்,எல்லா விதிகளுக்கும்,காரண காரியம் எல்லாவற்றுக்கும் அப்பால்தான் சுதந்திரம் என்பது இருக்க முடியும்.

எனவே எந்த வகை மாறுதலுக்கும் உட்படாததுதான் சுதந்திரமாகவும் அழிவற்றதாகவும் இருக்க முடியும். இருக்கின்ற இதுதான் அதாவது மனிதனது உண்மைத்தத்துவம்தான் ஆன்மா. இது மாறுதல் இல்லாதது, கட்டுப்பாடுகளுக்கு உட்படாதது. எனவே இதற்குப் பிறப்பும் இல்லை, இறப்பும் இல்லை.

ஒவ்வொரு மனித ஆளுமையையும் ஒரு கண்ணாடிக் கோளத்திற்கு ஒப்பிடலாம். ஒவ்வொன்றின் நடுவிலும் இறைவனிடமிருந்து வெளிப்படும் தூய வெள்ளொளி இருக்கிறது. ஆனால் கண்ணாடிகள் பல நிறங்களிலும், பல கனங்களிலும் இருப்பதால் வெளிவரும் கதிர்கள் பல்வேறு தோற்றங்களைப் பெறுகின்றன. எல்லா நடு ஒளிகளும் ஒரே மாதிரியானவை, ஒரே அழகைக் கொண்டவை, வித்தியாசமாகத் தோன்றுவதற்குக் காரணம் அது வெளிப்படுகின்ற புறக்கருவிகளில் உள்ள குறைபாடுகளே. நாம் மேலே உயர உயர, அந்தக் கருவி மேலும் தெளிவாக ஒளி வீசும் தன்மையை அடைகிறது.

# ஆன்மீகத் தேடலை வழிப்படுத்தும் தவக்காலம்

## சாவின் பள்ளத்தாக்குக்கல்ல வாழ்வின் மேட்டுக்கு ஏறக் காத்திருப்போம் (யோ :4:43:54)

"அரச அலுவலரிடம் இயேசு நீர் புறப்பட்டுப்போம்.உம் மகன் பிழைத்துக் கொள்வான்" என்றார்.அவரும் இயேசு சொன்ன வார்த்தையை நம்பிப் புறப்பட்டுப் போனார்.என்று இன்றைய நற்செய்தியில் வாசிக்கிறோம். அவருடைய நம்பிக்கை வீண் போகவில்லை.அவர் மகன் பிழைத்துக் கொண்டான்.எனவே,அவரும்அவர் வீட்டாரும் இயேசுவை நம்பினர்.

இறைவனின் இயல்புகளுள் ஒன்று அவர் வாக்கு மாறாதவர் என்பது. எனவே தான்,காலையில் அவரது பேரன்பையும்,இரவில் அவரது வாக்குப் பிரமாணிக்கத்தையும் புகழ்வது நல்லது என்று திருப்பாடல் 92 இல் பார்க்கின்றோம்.

இன்று மேலை நாட்டுக் கலாச்சாரத்தாக்கம் எம் மத்தியில் ஊடுருவிக் கொண்டிருக்கிறது. ஆபாசக்கலாசாரம் தொலைபேசியிலும் பரவி எம் இளையோரை பாழாய்ப்படுத்துகின்றது. பெற்றோர் பலர் நொந்து நொடிந்து வெந்து கொண்டிருக்கிறார்கள். கலாச்சார சீர் கேடு, என் மகனை நான் இழந்து விடுவேனோ? ஆலயம் தோறும் ஆண்டவனிடம்ஐயா? என் மகனை நான் இறக்கு முன் வாரும் என்று எத்தனையோ பெற்றோரின் வேண்டுதல்கள் நம் செவிகளில் கேட்கின்றன.

இளமையின் வேகத்தில் பெற்ற பெற்றோரை மறந்து,ஒட்டி,ஊட்டி உறவாடிய பாசத்தை மறந்து,வாழ்வின் விளிம்பில் நின்று,சாவின் பள்ளத்தாக்கில் இறங்கக் காத்திருக்கும் மகனு(ளு)க்காக, "ஐயா, என் மகன்(ள்) இறக்கு முன் வாரும்" விண்ணப்பிக்கும் பெற்றோர்கள் அதிகரிக்கின்றனர்.

எத்தனையோ விதம் விதமான விசித்திரக் கரங்களால் இன்று, நம் பிள்ளைகள், உடலில், உள்ளத்தில், பொருளாதாரத்தில், ஆன்மீகத்தில், குடும்ப வாழ் வில் அரசியலால் இறந்து கொண்டிருக்கிறார்கள்.பெற்றோர் பலர், "ஐயா என் மகன் இழக்கு முன் வாரும்" "ஐயா என் மகளை நாம் இழக்க முன் வாரும்" என்று அபயக்குரல் எழுப்பி, கோயில் குளம் என்றெல்லாம் அலைந்து, தம் மகனுக்காக மகளுக்காக கெஞ்சி கதறியழுது வாழும் பெற்றோரைப்புரிந்து கொள்வோம். இறை வார்த்தைகளை எம் பிள்ளைகளுக்கும் நிலைவாழ்வைத் தரும் என நம்புவோம்.நம் வாழ்வையும் இதில் அமைத்துக் கொள்வோம். எம் பிள்ளைகள் அந்த வார்த்தையில் வாழ வல்ல தேவனிடம் வேண்டுவோம்.

ம. பிரான்சிஸ்,
கத்தோலிக்க சுதந்திர,
பத்திரிகையாளர்.

# பல்கலைக்கழகங்களில் பகிடிவதை சம்பவங்கள் குறைவடைந்துள்ளன

## பல்கலை.மானியங்கள் ஆணைக்குழு தெரிவிப்பு

அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் பகிடிவதையில் ஈடுபடுவது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளமையினால் பகிடிவதையில் ஈடுபடும் 50 சதவீதமானவர்கள் அதனைக் கைவிட்டுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

பெற்றோர்களின் முறைப்பாட்டினை அடுத்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் போதே இவ்விடயம் தெரிய வந்துள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்க தெரிவித்துள்ளார்.

எது எவ்வாறெனினும் சில பல்கலைக்கழகங்களில் தற்போதும் மோசமான பகிடிவதைகள் இடம்பெறுவதாக மாணவர்களும் பெற்றோர்களும் சுட்டிக்காட்டியுள்ளனர். (ஸ்ரீ-2)

## சிறப்பு சொற்பொழிவு

கோப்பாய் விளையாட்டரங்க வீதி அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளியம்பாளின் ஆலயத்தில் இன்று திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு பங்குனித் திங்கள் நாள் நிகழ்வுகள் நடைபெறும். அதனைத் தொடர்ந்து தீமிதிப்பு நிகழ்வு இடம்பெறும். அத்துடன் *விழிக்கே அருளுண்டு* எனும் தலைப்பில் மதுரகவி காரை எம்.பி. அருளானந்தன் சிறப்புச் சொற்பொழிவொன்றை ஆற்றவுள்ளார். (ஸ்ரீ-2)

# புகலிடம் கோரிய இலங்கைத் தமிழ் அகதிகளை திருப்பியனுப்பக் கூடாது

## பேர்ண் பாராளுமன்றின் முன் கோரிக்கை



சுவிற்ஸர்லாந்திலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்பக்கூடாது எனக் கோரி ஒன்றுகூடல் நிகழ்வொன்று பேர்ண் பாராளுமன்றத்தின் முன்னால் நடைபெற்றது.

சுவிஸ் ஈழத்தமிழர் அவையின் ஏற்பாட்டில் நடைபெற்ற இவ் ஒன்றுகூடல் நிகழ்வில் அச்சுறுத்தலுக்குள்ளான இனங்களுக்கான சர்வதேச அமைப்பு, சர்வதேச மன்னிப்புச்சபை உட்பட மனித உரிமை அமைப்புக்களும் சுவிஸ்நாட்டின் அரசியல் கட்சிகளான பசுமைக்கட்சி, சோசலிசக்கட்சி ஆகியவற்றின் பிரதிநிதிகளும்கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கருத்துக்களையும் தமது கோரிக்கைகளையும் சுவிஸ் அரசாங்கத்திற்கு முன் வைத்தனர்.

இந்த ஒன்று கூடலில் உரையாற்றிய மனித உரிமை அமைப்புக்களின் பிரதிநிதிகள் இலங்கையின் தமிழர்களுக்கு ஆபத்து நீங்கிவிட வில்லை எனவும் போர் முடிந்தாலும் அச்சுறுத்தல்களும் ஆட்கடத்தல்களும் இடம்பெற்று வருவதாகவும் சுட்டிக்காட்டினார்.

இலங்கையில் மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்ந்து இடம்பெற்று வருவதாகவும் அதற்கான போதிய ஆதாரங்கள் இருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இலங்கையின் தமிழ் மக்களின் அவலங்களையும் அவர்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சனைகளையும் சித்திரிக்கும் வகையில் அரங்க நிகழ்வு ஒன்றும் பேர்ண் நாடாளுமன்றத்திற்கு முன்பாக நிகழ்த்திக் காட்டப்பட்டது. சுவிஸ் நாடாளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கான மனுவில் கையொப்பங்களும் இந்த நிகழ்வின் இறுதியில் பெறப்பட்டதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஸ்ரீ-2)



மு/அளம்பில் றோமன் கத்தோலிக்க வித்தியாலய சாரணர் சின்னஞ்சூட்டும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் அதிபர் நேவிற் ஜீவராசா, சாரணத் தலைவர்களான சி.கௌரிதரன், நா.விஜயகுமார், த.றெஜினிற்றா மற்றும் ஆசிரியர்களுடன் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட சாரணர் குழுவினரையும் படத்தில் காணலாம்.

# கடற்படை சிப்பாய்கள் தொடர்பான மர்மம் நீடிப்பு

## விமானப்படை விமானங்கள் மூலம் தேடுதல்

கடந்த 29 ஆம் திகதி முல்லைத்தீவு கடலில் காணாமல்போன இலங்கை கடற்படைச் சிப்பாய்கள் தொடர்பான மர்மம் தொடர்வதாகவும் அவர்கள் தொடர்பில் எந்த தகவல்களும் இல்லை என்றும் இலங்கை கடற்படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வீதிப் பகுதியில் சுற்றுக்காவல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த சமயம் இலங்கைக் கடற்படையினர் நால்வர் காணாமல் போயிருந்தனர். இந்த சம்பவத்தை தொடர்ந்து இலங்கைப் படையினரால் வடமராட்சி கிழக்கு தொடக்கம் முல்லைத்தீவு கரையோரம் வரை பெருமெடுப்பிலான தேடுதல்களை மேற்கொண்ட போதும் அவர்களை கண்டறிய முடியவில்லை.

உட்கரையோர சுற்றுக்காவல் படகில் சென்ற அவர்களின் படகும் ஆயுதங்களும் கரை ஒதுங்கியுள்ளன. ஆனால் படகில் இருந்த இயந்திரம் காணாமல்போயுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அவர்கள் எவ்வாறு காணாமல்போனவர்கள் என்பது தொடர்பில் எந்த முடிவுக்கும் வரமுடியவில்லை என இலங்கைப்பொலிசார் தெரிவித்துள்ளனர்.

கடற்படையினர் காணாமல் போன பகுதியில் விமானப்படை விமானங்கள் மற்றும் கடற்படை கப்பல்கள் மூலமும் தேடுதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் கடற்படை சிப்பாய்களின் குடும்பத்தினரிடமும் விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளதாக அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே இந்தச் சம்பவம் தொடர்பில் இந்திய கடற்படையினரிடமும் உதவி கோரப்பட்டுள்ளதாக இலங்கை கடற்படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஸ்ரீ-2)

# தைக்கப்பட்ட ஆடை ஏற்றுமதி மூலம் பெருமளவு அந்நியசெலாவணியை பெறலாம்

(கொழும்பு)

எதிர்வரும் 2015 ஆம் ஆண்டளவில் தைக்கப்பட்ட ஆடை ஏற்றுமதியின் மூலம் 500 கோடி அமெரிக்க டொலர்களை அந்நிய செலாவணியாக பெற முடியும் என நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

தற்போது ஏனைய நாடுகளுடன் சிறந்த முறையில் போட்டி போடக்கூடிய தன்மை இலங்கைக்கு ஏற்பட்டுள்ளதாக தைக்கப்பட்ட ஆடை ஏற்றுமதியாளர் சங்கத்தின் தலைவர் ரம்யா வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

அசாதாரண சூழ்நிலை இலங்கையில் நிலவிய காலத்தில் கூட தைக்கப்பட்ட ஆடைகளின் ஏற்றுமதி வர்த்தகம் பாதிப்படையவில்லை என அவர் தெரிவித்தார்.

இதேவேளைஇலங்கையின் தேசிய வருமானத்தின் 50 சதவீதமானவற்றை மீன்பிடித்துறை மூலம் பெற முடியும் என மீன்பிடி அபிவிருத்தித்துறை அமைச்சர் ராஜித சேனரத்ன தெரிவித்துள்ளார்.

தற்போது இலங்கையின் மீன் தேவைகள் உள்ளூரிலேயே பூர்த்தி செய்யப்படுவதாகவும் இந்நிலையில் இந்தத் துறையில் முதலீடுசெய்ய முதலீட்டாளர்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை என்றும் அமைச்சர் தெரிவித்தார். (ஸ்ரீ-2)


பாராட்டி வாழ்த்துகின்றோம்





வடபிராந்திய போக்குவரத்து சபை தொழிலாளர்களின் விருப்பத்தை ஏற்று எமது யாழ். கோண்டாவில் சாலையிலேயே திறமைவாய்ந்த பிரதான பிராந்திய பொதுமுகாமையாளரை எமக்கு பெற்றுத்தர சகல வழிகளிலும் உதவி புரிந்த

கௌரவ சிறுதொழில் அபிவிருத்தி அமைச்சர்

**கே.என்.டக்ளஸ் தேவானந்தா** அவர்களையும்

**முருகேசு சந்திரகுமார் (அசோக் தோழர்)** அவர்களையும்

யாழ். கோண்டாவில் சாலை தொழிலாளர்கள் மற்றும் வடமாகாண ஜனநாயக போக்குவரத்து ஊழியர் சங்கம் சார்பாகவும் பாராட்டி வாழ்த்துவதோடு நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(4296)

ந.கெங்காசுதன்
வட.மா.ஜ.போ.ஊ.சங்கம், யாழ். சாலை, கோண்டாவில்.



ஓம் விராட் விஸ்வப்பிரமனே நம

மங்களகரமான நகைக்கடைத் திறப்புவிழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விகிர்தி வருடம் பங்குனி மாதம் 21ஆம் நாள் (04.04.2011) இன்று திங்கட்கிழமை முற்பகல் 10.01 மணி முதல் 11.47 மணி வரையுள்ள மிதுன லக்கினமும் ரேவதி நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபவேளையில் இறைவன் திருவருள் துணைகொண்டு

**சுவர்ணா நகையகம்**



என்னும் நகையகத்தை ஆரம்பிக்க உள்ளமையால் அத்தருணம் வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவரையும் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:
திரு.திருமதி தவச்செல்வன்
குடும்பத்தினர்.

கனகபுரம் வீதி,
கிளிநொச்சி.

தொ.பே: 021 4925687
077 3268381

(C-2865)



உலகக் கிண்ண கிரிக்கெட் தொடருடன் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெற்ற இலங்கை அணியின் நட்சத்திர வீரர் முத்தையா முரளிதரன் மும்பையிலிருந்து நேற்று தாயகம் திரும்பியவேளை வரவேற்பளிக்கப்பட்ட போது...

# உலக லெவின் அணிக்கு சங்கக்காரவுக்கு தலைவர் பதவி

உலகக் கிண்ணத் தொடரில் அசத்திய வீரர்களைக் கொண்டு தெரிவுசெய்யப்பட்டுள்ள உலக லெவின் ஒருநாள் அணிக்கு இலங்கை அணித்தலைவர் குமார் சங்கக்கார அணித்தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். உலகக் கிண்ணம் வென்ற அணித்தலைவர் தோனிக்கு இந்த அணியில் இடமில்லை.

சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி) சார்பில் உலகக் கிண்ணத் தொடரில் சிறப்பாகச் சாதித்தவர்கள் திறமையின் அடிப்படையில் உலக ஒருநாள் லெவின் அணி தேர்வு செய்யப்பட்டுள்ளது. இதில் இந்தியா சார்பில் சச்சின், யுவராஜ் சிங், சகிர் கான் ஆகிய மூன்று பேர் இடம் பெற்றனர். அதிகபட்சமாக இலங்கை அணியில் சங்கக்கார, ஜெயவர்த்தன, டில்சான், முரளிதரன் ஆகிய நான்கு பேர் தேர்வாகியுள்ளனர்.

தென்னாபிரிக்க அணியிலிருந்து இரண்டு, அவுஸ்திரேலியா, பாகிஸ்தான் அணியிலிருந்து தலா ஒருவர் இதில் இடம்பெற்றுள்ளனர். அணியின் தலைவர் பதவிக்கு விக்கெட் காப்பாளர், அணித்தலைவரான தோனி, சங்கக்கார இடையே கடும் போட்டி நிலவியது. ஆனால் இத்தொடரில் தோனி சரியானபடி துடுப்பாட்டம் செய்யாததால் சங்கக்கார இந்த இடத்தைத் தட்டிச் சென்றார்.

**11 பேர் கொண்ட அணி விபரம்**

சங்கக்கார (விக்கெட் காப்பாளர், அணித்தலைவர்), சச்சின், யுவராஜ், சகிர்கான், ஜெயவர்த்தன, டில்சான், முரளிதரன், தென்னாபிரிக்காவின் டிவில்லியர்ஸ், ஸ்ரையன், வோட்சன் (அவுஸ்திரேலியா), அப்ரிடி (பாகிஸ்தான்), 12ஆவது வீரராக டிம் சௌத்தி (நியூசிலாந்து) இடம்பெற்றார்.

## இலட்சினை அறிமுகம்

(மும்பை)

பதினோராவது உலகக் கிண்ணத் தொடருக்கான இலட்சினையை (லோகோ) ஐ.சி.சி. நேற்று முன்தினம் வெளியிட்டது.

பத்தாவது உலகக் கிண்ணத் தொடர் இந்தியத் துணைக்கண்டத்தில் நடைபெற்று முடிந்தது.

இந்நிலையில் பதினோராவது உலகக் கிண்ணத் தொடர் எதிர் வரும் 2015ஆம் ஆண்டு அவுஸ்திரேலியா, நியூசிலாந்து நாடுகளில் நடைபெறுகின்றது.

இத்தொடருக்கான உத்தியோகபூர்வ இலட்சினையை ஐ.சி.சி. வெளியிட்டுள்ளது.

## தோல்வியைத் தழுவியது வேதனையைத் தருகிறது

### சங்கக்கார சோகம்

பத்தாவது உலகக் கிண்ணத் தொடரில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட இலங்கை அணியினர் தாயகம் திரும்பினர்.

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்த இலங்கை அணியினர் சுதந்திர சதுக்கத்திற்கு அழைத்துவரப்பட்டனர்.

அங்கு இடம்பெற்ற விசேட நிகழ்வில் இலங்கை கிரிக்கெட் அணியின் முக்கியஸ்தர்கள் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்தனர்.

இந்திய அணியின் விராட் கோலி மற்றும் கௌதம் ஆகியோரின் இணைப்பாட்டமும் மகேந்திரசிங் தோனியின் சிறப்பான துடுப்பாட்டமும் போட்டியின் போக்கை முற்றாக மாற்றியதாக இலங்கை அணித் தலைவர் குமார் சங்கக்கார தெரிவித்துள்ளார்.

இதேவேளை முரளிதரனின் வெற்றிடத்தை சுராஜ் ராண்டீவ் மற்றும் ஹேரத், மெண்டிஸ் அதே போன்று எஸ்.எஸ்.சி. கழகத்திற்காக விளையாடும் சேனநாயக்க என்ற புதிய வீரரும் நிரப்புவார்கள் என தான் எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து இரண்டுமுறைகள் இறுதிப் போட்டி வரை வந்து தோல்வியைத் தழுவியமை தமக்கு மன வேதனையைத் தந்துள்ளதாகவும் குமார் சங்கக்கார தெரிவித்தார்.

## எனது கிரிக்கெட் வாழ்நாளில் மறக்க முடியாத தருணம்

### சச்சின் மகிழ்ச்சி



தனது நீண்ட நாள் இரசிகனுடன் உலகக் கிண்ணத்தைப் பகிரும் டெண்டுல்கர்.

சொந்த ஊரில் உள்ளூர் இரசிகர்களின் ஆதரவோடு உலகக் கிண்ணத்தை வென்றது, என் வாழ்நாளில் மறக்க முடியாத தருணம் என இந்திய நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் தெரிவித்துள்ளார்.

இந்தியத் துணைக்கண்டத்தில் பத்தாவது உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் நடந்தது. மும்பையில் உள்ள வான்கடே மைதானத்தில் நடந்த இத்தொடரின் இறுதிப் போட்டியில் இந்திய அணி 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் இலங்கையை வீழ்த்தி 28 ஆண்டுகளுக்குப் பின் உலகக் கிண்ணத்தை வென்று சாதித்தது.

இது குறித்து இந்தியாவின் சச்சின் கூறியதாவது,

சுமார் 28 ஆண்டுகளுக்குப் பின், உலகக் கிண்ணத்தை வென்றது மகிழ்ச்சி அளிக்கிறது. சொந்த ஊரில், உள்ளூர் இரசிகர்களின் ஆதரவோடு உலகக் கிண்ணத்தை வென்ற தருணத்தை எனது வாழ்நாளில் என்றும் மறக்கமுடியாது.

இதைவிட வேறு எதையும் அடைய விரும்பவில்லை. இதன் மூலம் எனது நீண்டநாள் கனவு நிறைவேறியது. அபார ஆட்டத்தை வெளிப்படுத்தி, உலகக் கிண்ணத்தை வெல்லக் காரணமாக இருந்த சக வீரர்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்திய அணியின் வெற்றிக்குப் பின்னால் இருந்து ஊக்குவித்த பயிற்றுவிப்பாளர் ஹரி கிறிஸ்டன், அப்டன் மற்றும் உதவியாளர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இவ்வாறு சச்சின் கூறினார்.

## தோனியின் சமனிலை இராசி

தோனியின் சமனிலை இராசி உலகக் கிண்ணத் தொடரிலும் நீடித்தது. இத்தொடரில் இங்கிலாந்துக்கு எதிரான போட்டி சமனிலையானது. இறுதியில் இந்திய அணி உலகக் கிண்ணத்தை வென்று அசத்தியது.

கடந்த 2007இல் தோனி தலைமையிலான இந்திய அணி இருபது-20 உலகக் கிண்ணத்தை வென்று சாதித்தது.

கடந்த ஆண்டு நடந்த ஐ.பி.எல். மற்றும் 2ஆவது சம்பியன் லீக் இருபது-20 தொடர்களில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி கிண்ணத்தைக் கைப்பற்றியது. இந்த நான்கு முக்கிய தொடர்களின் போது ஒரு போட்டி சமனிலையானது.

கடந்த 2007இல் தென்னாபிரிக்காவில் நடந்த இருபது-20 உலகக் கிண்ணத் தொடரில், டர்பனில் நடந்த லீக் போட்டியில், இந்திய-பாகிஸ்தான் அணிகள் மோதின. இரு அணிகளும் 141 ஓட்டங்கள் எடுக்க போட்டி சமனிலையானது. பின் போல்ட் அவுட் முறையில் இந்திய அணி வெற்றிபெற்றது.

கடந்த ஆண்டு சென்னையில் நடந்த மூன்றாவது ஐ.பி.எல். இருபது-20 லீக் போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ்-கிங்ஸ்லெவின் பஞ்சாப் அணிகள் மோதின. இதில் இரு அணிகளும் 136 ஓட்டங்களை எடுக்க போட்டி சமனிலையானது. பின் சுப்பர் ஓவர் முறையில் பஞ்சாப் அணி வெற்றிபெற்றது.

கடந்த ஆண்டு தென்னாபிரிக்காவில் நடந்த 2ஆவது சம்பியன் லீக் இருபது-20 தொடரில் லீக் போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ்-விக்டோரியா அணிகள் மோதின இதில் இரு அணிகளும் 162 ஓட்டங்களை எடுக்க போட்டி சமனிலையானது. பின் சுப்பர் ஓவர் முறையில் விக்டோரியா அணி வெற்றிபெற்றது.

இந்த உலகக்கிண்ணத் தொடரில் பெங்களூரில் நடந்த லீக் போட்டியில் இந்தியா-இங்கிலாந்து அணிகள் 338 ஓட்டங்கள் எடுக்க போட்டி சமனிலையானது.

நான்கு தொடர்களில் தோனி தலைமையிலான அணி விளையாடிய ஒரு போட்டி சமனிலையானது. இந்த இராசி கைகொடுக்க இறுதியில் உலகக்கிண்ணத்தை வென்று அசத்தியது.

## இந்திய அணிக்கு அபராதம்

உலக சம்பியனான இந்திய கிரிக்கெட் அணிக்கு சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸில் அபராதம் விதித்துள்ளது. நேற்றுமுன்தினம் நடைபெற்ற இலங்கையுடனான இறுதிப் போட்டியில் உரிய நேரத்திற்குள் பந்துவீசி முடிக்கத் தவறியமையே இதற்கான காரணமாகும்.

உரிய நேர அவகாசத்தில் இந்தியா ஒரு ஓவர் குறைவாக வீசியதை போட்டி மத்தியஸ்தரான நியூசிலாந்து அணியின் முன்னாள் தலைவர் ஜெவ் குரொவ் கண்டறிந்தார்.

அதையடுத்து ஐ.சி.சி. விதிகளின் படி இந்திய அணித்தலைவர் மஹேந்திர சிங் தோனிக்கு போட்டிக்கான அவரின் ஊதியத்தில் 20 சதவீதமும் ஏனைய வீரர்களுக்கு அவர்களின் ஊதியத்தின் 10 சதவீதமும் அபராதமாக விதிக்கப்பட்டது.

ஐ.சி.சியின் இத்தீர்ப்பை இந்தியா ஆட்சேபிக்காமல் ஏற்றுக்கொண்டுள்ளது.

# காணி...

திருத்தச்சட்டத்தின் ஒரு அங்கமாகவுள்ள காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை அடிப்படையாகக் கொண்டு இந்த அதி காரங்கள் இரண்டினையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.

எனினும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் இந்தக் கோரிக்கைக்கு அரசாங்கம் திட்டவட்டமாக மறுப்புத் தெரிவித்துள்ளது.

காணிஅதிகாரங்களும், பொலிஸ்அதிகாரங்களும் மத்திய அரசாங்கத்தின் கீழ் இருக்க வேண்டிய முக்கிய கட்டமைப்புக்களாகும்.

எனவேதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யோசனைத்திட்டமாக முன்வைத்து கோரியுள்ள காணி அதிகாரங்களையும், பொலிஸ் அதிகாரங்களையும் வழங்கமுடியாது.

அத்தோடு காணி அதிகாரம் தொடர்பாக தற்போது பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனினும் இதன் இறுதி முடிபுகள் எதுவும் எட்டப்படவில்லை என்றார். (ந-5)

# கிரிக்கெட் போட்டியில் இலங்...

அவருக்கும் அவருடன் சென்ற பிரமுகர்களுக்கும் ஒதுக்கப்பட்டிருந்தது.

அத்துடன் இப் போட்டியை பார்வையிட இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் வருவார் என எதிர்பார்த்திருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, போட்டியை பார்வையிட பிரதமர் மன்மோகன் சிங் வராததையிட்டு ஏமாற்றமடைந்தார். இந்திய ஜனாதிபதி பிரதீபா பட்டேல் மட்டுமே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் அமர்ந்திருந்து போட்டியைக் கண்டுகளித்தார்.

இதேவேளை இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான அரையிறுதி ஆட்டத்தின்போது பிரதமர்களுக்கு இரு அணி வீரர்களையும் அறிமுகம் செய்து வைக்கும் நிகழ்ச்சி இடம்பெற்றது.

ஆனால் உலகக்கிண்ண இறுதிப் போட்டியில் கலந்துகொண்ட இரு நாடுகளின் ஜனாதிபதிகளும் இப் போட்டியை காணச்சென்றிருந்த போதிலும் துடுப்பெடுத்தாட்ட வீரர்களை அறிமுகம் செய்யும் நிகழ்ச்சி இடம்பெறவில்லை.

மறு புறத்தில் பல இந்திய அமைச்சர்கள் பாரதீய ஜனதாக்கட்சியின் தலைவர் நிதின் கட்கரி மற்றும் எதிர்க்கட்சி தலைவர் அத்வானி உட்பட இந்தியாவின் முக்கிய அரசியல் பிரமுகர்கள் பலர் இப் போட்டியைக் காணச் சென்றிருந்த போதிலும் அவர்கள் எவரும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்திக்கவில்லை.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மிகின் லங்கா சிறப்புவிமானம் மூலம் திருப்பதி சென்று அங்கிருந்து மும்பைக்குச் சென்றிருந்தார். அவருடன் அவரது மகன் நாமல் ராஜபக்ஷ உட்பட பலரும் சென்றிருந்தனர்.

அதேவேளை இப்போட்டியைக் காண கொழும்பிலிருந்து 32 அமைச்சர்கள் தலா 95ஆயிரம் ரூபாய் கட்டணம் செலுத்தி சிறிலங்கன் விமான சேவையின் சிறப்பு விமானத்தில் மும்பைக்குச் சென்றிருந்தனர்.

இந்தியா-இலங்கை அணிகளுக்கிடையில் மும்பையில் நடைபெற்ற உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி வெற்றி பெறும் தருணத்தில் அவ் வெற்றியை போரில் உயிரிழந்த படையினருக்குக் காணிக்கையாக்குவதற்கு அரசாங்கம் எண்ணியிருந்தது.

இப் போட்டியில் இலங்கையின் துடுப்பாட்ட அணி உறுதியாக வெற்றிபெறும் என நம்பியிருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வெற்றிபெறும் இலங்கை அணியுடன் ஒரே விமானத்தில் நாடு திரும்பவே தீர்மானித்திருந்தார்.

ஆனால் இப் போட்டியில் இலங்கை துடுப்பாட்ட அணி தோல்வியுற்றதால் அரசாங்கத்தின் கனவு தகர்ந்து போனதால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று அதிகாலை 3.05 மணியளவில் சிறப்பு விமானமொன்றில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார்.

அதேவேளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் கொழும்பு செல்ல திட்டமிட்டிருந்த துடுப்பெடுத்தாட்ட அணி நேற்று காலை வேறு விமானம் மூலம் கொழும்பு திரும்பியமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

# அபிவிருத்திக்கு...

இதில் 313 கோடியே 70இலட்சம் ரூபாய் உணவு உற்பத்தி நடவடிக்கைகளுக்காக வடபகுதி இளைஞர்களின் மேம்பாட்டுக்காகவும் கடனடிப்படையில் வழங்கப்படவுள்ளன.

இதேவேளை வீதி அபிவிருத்தி திட்டங்களுக்காகவும், மின்சார விநியோக நடவடிக்கைகளுக்காகவும், சீன அபிவிருத்தி வங்கி கூட்டுத்தாபனம் 50கோடி ரூபாயினை வழங்க முன்வந்துள்ளது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் முன்னுரிமை திட்ட அடிப்படையில் வீதி அபிவிருத்தி அவசியம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலமே உயர்தர உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கிடைக்கப்பெறும் நிதியுதவிகளில் பெரும்பாலானவை வடமாகாண மக்களுக்காகவே செலவிடப்படவுள்ளதாக தகவல் துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே பல அபிவிருத்தி திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். (ந-5)

# அமைச்சர் பீரிஸைச் சந்தி...

வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் கடந்த வாரம் ஐரோப்பிய நாடுகளுக்கான விஜயத்தை மேற்கொள்வதற்கு முன்பாக பிரித்தானிய வெளிவிவகார அமைச்சரைச் சந்திப்பதற்கு நேரம் ஒதுக்கித் தருமாறு வேண்டுகோள் விடுத்திருந்தார்.

ஆனால் இவ் விஜயத்தை மேற்கொள்வதற்கு முன்னர் இச் சந்திப்பிற்கான நேரம் ஒதுக்கப்பட்டிராத நிலையிலும் பிரித்தானிய வெளிவிவகார அமைச்சரை சந்திக்கலாம் என்ற நம்பிக்கையுடன் அமைச்சர் பீரிஸ் லண்டனுக்கு விஜயம் செய்தார்.

ஆயினும் அவரை பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் வில்லியம் ஹக் சந்தித்துப் பேசவில்லை.

இதனால் பிரித்தானியா வின் பாதுகாப்பு அமைச்சர் லியாம் பொக்ஸ், வர்த்தக முதலீட்டு அமைச்சர் லோர்ட் கிறீன், பொதுநலவாய நாடுகளில் விவகாரங்களுக்கான பிரதியமைச்சர் அலிஸ்ரெயர் பேர்ட் மற்றும் பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரையும் பீரிஸ் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இந் நிலையில் பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் வில்லியம் ஹக்குடனான சந்திப்பு இடம்பெறாத நிலையில் தமது உத்தியோக பூர்வ விஜயத்தை இடை நடுவில் முடித்துக்கொண்டு தனிப்பட்ட ரீதியாக லண்டனில் தொடர்ந்து தங்கியுள்ளதாக பீரிஸ் அறிவித்துள்ளார்.

இவரின் மகளும் பேரக்குழந்தையும் லண்டனில் வசித்து வருவதை காரணம் காட்டி இந்த அறிவிப்பை பீரிஸ் வெளியிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இதேவேளை லண்டனிலிருந்து அடுத்த கிழமை கொழும்பு திரும்பவுள்ள அவர் பல உத்தியோக பூர்வ நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரித்தானியாவில் வசிக்கின்ற இலங்கையைச் சேர்ந்த துறைசார் நிபுணர்களின் சங்கத்தில் பீரிஸ் உரையாற்றவுள்ளதாகவும் சுமார் 400 துறைசார் நிபுணர்கள் இக் கூட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளதாகவும் பிரித்தானியாவுக்கான இலங்கைத் தூதரகம் அறிவித்துள்ளது.

அத்துடன் பிரித்தானியாவுக்கான இலங்கைத் தூதரகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சர்வதேச ஊடகவியலாளர் சந்திப்பிலும் பீரிஸ் கலந்து கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது இலங்கைப் படைத்தரப்பால் மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் பிரித்தானியாவின் ஆட்சியில் முன்னர் இருந்த தொழிற்கட்சி சர்வதேச விசாரணைகளை வலியுறுத்தியிருந்தது.

அதனைத் தொடர்ந்து பிரித்தானியாவின் ஆட்சிமாற்றம் ஏற்பட்டு கொன்சவோட்டிவ் கட்சி தலைமையிலான கூட்டு அரசாங்கம் அமைக்கப்பட்ட பின்னரும் இப் போர்க்குற்றங்கள் தொடர்பான சர்வதேச விசாரணையை பிரதமர் டேவிட் கமரூனும் வெளிவிவகார அமைச்சர் வில்லியம் ஹக்கும் வலியுறுத்தியிருந்தனர்.

இதனையடுத்து இவ்விரு நாடுகளுக்கும் இடையிலான இராஜ தந்திர உறவுகளில் முறுகல் நிலை ஏற்பட்டிருந்தது.

இதேவேளை ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் நியமித்த நிபுணர் குழுவின் அறிக்கை விரைவில் கையளிக்கப்படவுள்ள நிலையில் பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் வில்லியம்ஸ் ஹக்கை சந்தித்து இலங்கையின் தற்போதைய நிலைமைகள் குறித்து விளக்கமளிக்க பீரிஸ் முயற்சித்ததாக கூறப்படுகிறது. (ந-5)

# புலிகள்...

ஒன்று இணைக்கப்பட்டு பொதியிடப்பட்ட படகுகள் இரகசியமாக மறைத்து வைக்கப்பட்டிருந்ததாகவும் மாங்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த படகுகள் மோதல் இடம்பெற்ற காலத்தில் யாழ்.குடாநாட்டில் தாக்குதல் மேற்கொள்வதற்காகவே மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என அரசாங்கத் தரப்பினர் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (ந-5)


## மணமகன் தேவை

யாழ்ப்பாணம் கௌரவ குடும்பத்தைச் சார்ந்த MA படித்த, 1970ல் பிறந்த கனடா வதிவிடத்தினையுடைய கல்வித்தகைமையுள்ளபெண்ணிற்கு படித்த மணமகன் தேவை. தற்சமயம் யாழில் நிற்கின்றார் (பத்து நாட்கள் மட்டும் யாழில் நிற்பார்)

தொடர்பு :- 222 0459, 0719709498

(4286)



## குமரகுரு மல்ரி சொப்

### வாடிக்கையாளர் கவனத்திற்கு

எமது குமரகுரு மல்ரி சொப் திறப்பு விழாவினை முன்னிட்டு மோட்டார் சைக்கிள் பரிசுத் திட்டத்தினை அறிமுகம் செய்திருந்தோம். இதன்படி 01 ஆவது அதிர்ஷ்டசாலித் தெரிவு மதியம் 1.00 மணியளவில் தெரிவு செய்யப்பட்டு கீறோ கொண்டா மோட்டார் சைக்கிள் வழங்கப்பட்டது. மாலை 7.00 மணியளவில் தெரிவுசெய்யப்படவிருந்த 2 ஆவது அதிர்ஷ்டசாலித்தெரிவு தவிர்க்க முடியாத காரணத்தால் தெரிவுசெய்யப்படவில்லை. இவ் அதிர்ஷ்ட தெரிவு எதிர்வரும் 06.04.2011 புதன்கிழமை மாலை 4.00 மணிக்கு எமது வாணிப முன்றலில் நடைபெறும் என்பதை வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் மன மகிழ்வுடன் தெரியப்படுத்துகின்றோம்.

No :-9, ஆனந்தபுரம், பிரதான வைத்தியசாலை முன்பாக, A9, றோட், கிளிநொச்சி. T.P: 0212285442


# காணி, பொலிஸ் அதி...

வாறானதொரு கோரிக்கைகளையும் முன்வைக்கவில்லை. கடந்த காலங்களில் இவ்வாறான செய்திகள் பத்திரிகைகளில் வெளிவந்ததை நாம் அவதானித்திருந்தோம். அதில் எவ்வித உண்மையும் இல்லை.

அரசாங்கத்துடன் நாம் மேற்கொள்ளும் பேச்சுவார்த்தைகளில் தமிழ் மக்களுக்கு நிரந்தர தீர்வொன்றை முன்வைத்தே பேச்சுவார்த்தைகள் நடத்திவருகிறோம்.

எனினும் ஒவ்வொரு ஊடகமும் புதிது புதிதாக செய்திகளை உருவாக்கின்றன. எமது பேச்சுவார்த்தைகள் தந்தை செல்வாவின் கோரிக்கைகளை அடிப்படையாக கொண்டதாகும்.

எமது தீர்மானங்களை அடுத்துவரும் பேச்சுவார்த்தைகளில் முன் வைக்கவுள்ளோம் எனத்தெரிவித்தார்.

இந் நிலையில் மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரம் வழங்கப்பட்டால் எந்த வொரு அமைச்சரும் வடக்குக்கே செல்ல முடியாது போகலாம். குறிப்பாக மத்திய அரசாங்கத்தின் அமைச்சர்கள் வடக்கே செல்லும் போது பலாலி விமானத்தளத்தை விட்டே வெளியேற முடியாத நிலை ஏற்படலாம் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறியிருந்தார்.

எதிர்வரும் 7ஆம் திகதி நடைபெறவுள்ள அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தையின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மாகாண சபைகளுக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களுடன்.

வனப் பாதுகாப்புக்கான அதிகாரத்தையும் கோரவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளதால் அதற்கு முன்பே அவற்றை வழங்க முடியாது என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மறுப்புத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-5)


## தொழிற் பயிற்சிகள்

சுயமாக தொழிலை ஆரம்பிப்பதற்கும் உள்நாட்டு, வெளிநாட்டு நிறுவனங்களில் தொழில்நுட்பத்துறையில் வேலைவாய்ப்பை பெறுவதற்கும் ஏற்றமுறையில் முழுநேர செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்பட்டு சான்றிதழ் வழங்கப்படும்.

- **Electronics** : றேடியோ , TV, VCR, DVD, CD Player, Ampliter Receiver திருத்தும் முறை அடிப்படையிலிருந்து பயிற்சியளிக்கப்படும். காலம்: 10 மாதம்
- **Mobile Phone Repairing** : சகல Phoneகளினதும் Hardware ,Software பழுதுகள் திருத்தும் வகையில் பயிற்சியளிக்கப்படும். காலம்: 3 மாதம்
- **ஏயர் கொண்டிசனிங்** :சகல குளிர்சாதனங்களில் ஏற்படுகின்ற பழுதுகள் திருத்தும் முறை, AC பொருத்துதல், சேவிஸ் செய்தல் பயிற்சியளிக்கப்படும். காலம்:6 மாதம்
- **எலக்ரிக்கல் வயறிங்** : வீட்டு மின் சுற்று வேலைகள், மின்சாரப் பொருட்கள் திருத்துதல் பயிற்சியளிக்கப்படும். காலம்: 3 மாதம்
- **றீவைண்டிங்** : மின் மோட்டர், ரான்ஸ்போமர், டைனமோ, Fan றீவைண்டிங் செய்தல் பயிற்சிளிக்கப்படும். காலம்: 5 மாதம்
- **Computer Hardware Engineering** : காலம்: 3 மாதம்

பயிற்சிகள் ஆரம்பம் : 09.04.2011 9.30 am

**Jaffna Technical Institute**

No.45, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 0718561654, 0214913297

கிளை: NEW ASIAN CENTER
56/15B,ஸ்ரான்லி வீதி (சம்பத் வங்கி அருகாமை)
யாழ்ப்பாணம்.
T.P.: 0779254078.

குறிப்பு: இம்முறை யாழ்.மாவட்டம் தவிர்ந்த கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்ட மாணவர்களிற்கு தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

(4297)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.04.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.